# ஞானச்சுடர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கு முலகு.**

பொருள் : நன்மையின் பொருட்டுப் புத்தி சொல்லுவாரின் சொல் காதுக்கு வெறுப்புத் தருமாயினும் அதனைப் பொறுத்து ஏற்றுக்கொள்ளும் அரசனுடைய குடையின்கீழ் உலகம் முழுவதும் நிலைபெறும். (389)

**கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கும்**
**உடையானும் வேந்தர்க் கொளி.**

பொருள் : கொடையும், அன்பும், நீதி ஆட்சியும், குடிகளைக் காத்தலும் ஆகிய நான்கு செயல்களையும் உடையவன் அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவனாவான். (390)

---

# நற்சிந்தனை



*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**சிவ சிவ ஓம் ஓம்**

சிவ சிவ செல்வக் கணபதி ஓம் ஓம்
சிவ சிவ செல்வவே லாயுதன் ஓம் ஓம்
சிவ சிவ செல்வச் சிவதொண்டன் ஓம் ஓம்
சிவ சிவ செல்வச் சிவனடியார் ஓம் ஓம்
சிவ சிவ எம்முள் திருவருள் ஓம் ஓம்
சிவ சிவ செல்வத் திருமால் ஓம் ஓம்
சிவ சிவ அயன்முதல் தேவர்கள் ஓம் ஓம்
சிவ சிவ ஐம்பெரும் பூதங்கள் ஓம் ஓம்
சிவ சிவ சிவ சிவ ஐம்பொறி ஓம் ஓம்
சிவ சிவ சிவ சிவ ஐம்புலன் ஓம் ஓம்
சிவ சிவ சிவ சிவ தச நாடிகள் ஓம் ஓம்
சிவ சிவ சற்குரு நாதன் ஓம் ஓம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 317




2024 வைகாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பொறாமை தீமைகளின்... | சி. நற்குணலிங்கம் | 01 - 03 |
| விநாயகர் தோற்றம் | கு. சோமசுந்தரம் | 04 - 06 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 07 - 10 |
| பாமாலையும் பூமாலையும் | முருகவே பரமநாதன் | 11 - 17 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 18 - 19 |
| உருத்திராட்சம் | ஆர்.வீ. கந்தசுவாமி | 20 - 22 |
| கந்தபுராணம்... | செ. சிவபாதம் | 23 - 26 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 27 - 30 |
| சிறந்த அறப்பணி அன்னப்பணி | பு. கதிரித்தம்பி | 31 - 32 |
| இலக்கிய மரபுகளால்... | ச. சஜீனை | 33 - 36 |
| திருவாதிரை நிவேதனம்... | திருமதி பொ. திலகவதி | 37 - 39 |
| மனிதனை தெய்வமாக்குவது... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 40 - 41 |
| வலம்புரிச்சங்கு | ம. சிவயோகசுந்தரம் | 42 - 46 |
| பன்னிரு திருமுறைகள் | த. நந்திவர்மன் | 47 - 49 |
| கண்டதும் - கற்றதும்... | ச. வாகீசன் | 50 - 53 |
| வள்ளுவர் உபதேசம் | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை | 54 - 57 |
| வருடாந்த வைகாசிப் பெருவிழா | ஆ. சிவநாதன் | 58 - 62 |
| வைகாசி விசாகன் தாலாட்டு | திருமதி பா. சிவனேஸ்வரி | 63 - 64 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

சந்நிதியான் ஆச்சிரம

சைவ கலை பண்பாட்டுப் பேரவை

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# சித்திரை மாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:

சித்திரை மாத ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை ஆற்றுவதற்குரிய அன்பர் தவிர்க்க முடியாத காரணத்தால் வராததால் அம் மலருக்குரிய மதிப்பீட்டுரை ஆற்றவந்த சிரேஷ்ட சட்டத்தரணியும் பதில் நீதவானுமாகிய திரு சோ. தேவராஜா அவர்கள் வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரையினை ஆற்றினார்கள்.



தாம் இம் மலர் வெளியீட்டில் முதன்முறையாக பங்குபற்றுவதன் காரணமாக இம் மலரின் வளர்ச்சியானது பிரமிக்கத்தக்க வகையில் அமைந்திருக்கின்றது. ஓர் ஆன்மீகம் சார்ந்த மலர் தொடராக 315 மலர் எவ்வித விளம்பரங்களும் அற்ற வகையில் எவ்வித முகாந்திரமும் அற்ற நிலையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதாந்தம் வெளி வந்து கொண்டிருப்பதும் தொடராக இம் மலருக் குரிய கட்டுரைகளை மலரில் இடம்பெறும் ஆக்கங்களுக்குரியவர்கள் எழுதிவருவதும் ஒரு சாதனையாகவே கருதவேண்டியுள்ளது.

வாசிப்பு பழக்கம் அருகிவரும் இக் காலத்தில் மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் தன்மை பற்றி நோக்கும்போது சிறு சிறு ஆக்கங்களாகவும் நன்கு விளங்கிக்கொள்ளும் வகையிலும் குறிப்பாக ஒவ்வொரு பக்கத்தின் கீழ் பகுதியில் போடப்பட்டிருக்கும் ஒரு வரியில் அடங்கப்பெற்ற மூதுரைகள் சமுதாயத்துக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருப் பதையும் காணக்கூடியதாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக மலரில் இடம்பெற்ற ஒரு சில கட்டுரைகளின் தன்மைபற்றி அவையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு தன்னையும் இப் பணியில் இணைத்த ஆசிரியர் திரு துரை. கணேசமூர்த்தி அவர்களுக்கு நன்றிகூறி சந்நிதி வேற் பெருமானையும் வணங்கி நிறைவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப்பிரதி வழங்கும் நிகழ்வுடன் சித்திரை மாத மலர் வெளியீடு நிறைவாக நடந்தேறியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

கல்வியில் முதலிடம் என்கிற நிலைமை மாறி இன்று வகைதொகையின்றி போதைப் பொருளின் ஊடுருவல் தலைதூக்கி தமிழர்களின் எதிர்காலச் சந்ததியை சூனியமாக்கி வருகிறது.

போருக்குப் பின்னரான தமிழர்களின் வாழ்வியல் திட்டமிட்டுத் திசை திருப்பி தமிழ் இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் போதைப் பொருட்களைத் தாராளமாகப் புழக்கத்தில் விட்டு ஒட்டுமொத்த சமூகத்தின் எதிர்காலத்தையே சீரழித்துச் சின்னாபின்னமாக்கும் முயற்சியில் வெற்றி கண்டிருக்கிறார்கள்.

எம் இனத்தின் இருப்பை சிதைக்க வேண்டுமெனில் அதன் கட்டமைப்புக்கள், கலாசாரங்கள், பண்பாடுகளை இல்லாதொழித்தால் அந்த இனம் விரைவிலேயே தனக்கான தனித்துவத்தை இழந்துவிடும் எனும் உண்மை தமிழ் இனத்தின் தற்போதைய போக்கில் தென்படுவது வேதனைக்குரியது.

கல்விப்புலத்தில் கொடிகட்டிப் பறந்த யாழ் கல்விச் சமூகத்தை குறிவைத்து போதைப் பொருட்கள் பரப்பப்படுவதன் பின்னணிகள் குறித்து நாம் இன்னும் தாமதிப்போமாக இருந்தால் எதிர்காலத்தில் வன்முறை மிக்க இளைய தலை முறையை ஈழத்தில் உருவாக்குவதற்கு நாம் காரணமாகி விடுவோம்.

வடக்கு மக்கள் காலம் காலமாக இடம்பெயர்வுகளையும், சொத்தழிவுகளையும் சந்தித்த போதெல்லாம் அதிலிருந்து மீண்டெழ தமிழர்களின் மனோபலமே காரணமாகி நிற்கின்றது. இந்த மனோபலத்தை உடைக்கும் தந்திரோபாயமாக போதைப் பொருளை ஒரு கருவியாகக் கொண்டு வடக்கின் ஆழ ஊடுருவல் தமிழ் இளைஞர் சமூகத்தை சீரழிக்கும் முயற்சிகள் அரங்கேற்றப்படும் இன்றைய நிலையில் இதிலிருந்து இளைஞர் சமூகத்தை மீட்பதற்கு யாருளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr T. ஸ்ரீஸ்கந்தராசா**
(லண்டன்)
**பொ. கஜேந்திரகுமார்**
(யாழ்ப்பாணம்)
**ச. கந்தசாமி**
(தேவன் ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்)
**மா. நாகலிங்கம்**
(லக்ஷ்மி வெதுப்பகம், பத்தமேனி, அச்சுவேலி)
**க. அரியரத்தினம்**
(கதிர் தொலைத்தொடர்பு நிலையம், வல்வெட்டி)
**கா. அருந்தவராசா**
(பிரதானவீதி, தொண்டைமானாறு)
**சி. தங்கவேல்**
(கேம்பிரிட்ஜ் கல்வி நிறுவனம், நவிண்டில்)
**க. கிருபாகரன்**
(சந்தைவீதி, உடுப்பிட்டி)
**நா. சுந்தரம்**
(இளைப்பாறிய பிராந்திய நிர்வாக அலுவலர், உரும்பராய்)
**ந. நற்குணராசா**
(தாதி உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)
**P. சாந்தருபன் G.S**
(சாருகாந் தொலைத்தொடர்பு நிலையம், கெருடாவில்)
**திருமதி இ. லோகநாதன்**
(இளை. பொது முகாமையாளர், மானிப்பாய்)
**Dr V. பாலகிருஷ்ணன்**
(கரவெட்டி)
**இ. கணேசலிங்கம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**வீ. நடராசா**
(சாவகச்சேரி)
**சி. கஜன்**
(சண்டிலிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**S. இராசரத்தினம்**
(இளை. பிரதேச அத்தியட்சகர், நீர்வேலி)
**த. விக்னேஸ்வரன்**
(தங்கராசா நகை மாளிகை, யாழ்ப்பாணம்)
**உரிமையாளர்**
(சுந்தரம் பிறதேர்ஸ் மருந்துக்கடை, திருநெல்வேலி)
**K. அருள்வேல்**
(விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்)
**ஆ. குலேந்திரநாயகம்**
(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால்)
**செ. கஜேந்திரன்**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஐ.கோ. சந்திரசேகரம்**
(யாழ்ப்பாணம்)
**செல்வி T. பெரியதம்பி**
(முன்னாள் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை)
**செல்வி பா. ரதிவதனி**
(மாயக்கை, தம்பசெட்டி)
**சு. மகாராஜன்**
(வட்டுக்கோட்டை)
**மாணிக்கம் குட்டித்தம்பி**
(வல்லியாவத்தை, கரணவாய்)
**திருமதி சீ. ஆதவன்**
(வல்லிபுரக்கோவில் வீதி, புலோலி)
**ம. மதியுகன்**
(அரியாலை)
**பேரின்பபாலசுப்பிரமணியராசா கபிலேஷன்**
(அரசவீதி, உரும்பராய் கிழக்கு)
**ஐ. புவனேஸ்வரன்**
(அச்சுவேலி)
**நி. ஜெயந்தன்**
(மங்கை ஸ்ரோர்ஸ், நீர்வேலி)
**சு. சந்திரலிங்கம்**
(ஆனைக்கோட்டை)
**பாலகுரு விமலேந்திரன்**
(குரு பிறிண்ரேஸ், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொ. கந்தையா**
(புருடிலேன், அரியாலை)
**செ. கிருஷ்ணராஜா**
(கலட்டி வீதி, கோண்டாவில்)
**வை. சிற்றம்பலம்**
(தேவி வாசம், கொக்குவில்)
**மா. தங்கவேல்**
(சுண்ணாகம்)
**வரதலிங்கம் செல்வமோகன்**
(மோகன்கடை, ஆவரங்கால்)
**திருமதி கண்மணி கணபதிப்பிள்ளை**
(பத்தமேனி, அச்சுவேலி)
**தா. தர்மலிங்கம்**
(கொக்குவில்)
**த. கணேசலிங்கம்**
(தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ், ஆனைக்கோட்டை)
**ம.செ. சபாநாயகம்**
(மாலிசந்தி, கரவெட்டி)
**K. வேணுகோபாலு**
(வேணி இல்லம், புலோலி)
**S. மிகிந்தலா**
(கரவெட்டி)
**திருமதி S. உமாரதி**
(மங்கை இல்லம், உடுப்பிட்டி)
**செ. ஸ்ரீதரன்**
(விமலவாசா, உச்சில் ஒழுங்கை, கரவெட்டி)
**சி. மதியழகன்**
(திக்கம், அல்வாய்)
**ஜெகநாதன் ஜனனி**
(யாழ்ப்பாணம்)
**ஐ. சிவஞானம்**
(கமலவதி, கரவெட்டி)
**அ. சின்னத்தம்பி**
(மாய்க்கிராயன், துன்னாலை)
**கதிரவேலு சதாசிவம்**
(அந்திரான், கரவெட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**த. முருகானந்தா**
(பிரம்படிலேன், கொக்குவில்)
**A.T. கதிரவேல்**
(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)
**த. யாழினி**
(கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
**ஆறுமுகம் மயில்வாகனம்**
(இணுவில் கிழக்கு)
**வே. பாண்டியர்**
(கைதடி தெற்கு)
**வ. இராசையா**
(இருபாலைவீதி, கோப்பாய்)
**சோ. இராசலிங்கம்**
(ஆவரங்கால் கிழக்கு)
**சி.க. இராசரெத்தினம்**
(பத்தமேனி, அச்சுவேலி)
**K. குலரெட்ணம்**
(நவாலி வடக்கு, மானிப்பாய்)
**சி. பாலபாரதி**
(கற்கோவளம், பருத்தித்துறை)
**சு. பானுஜா**
(துன்னாலை, கரவெட்டி)
**ச. தெட்சணாமூர்த்தி**
(கோண்டாவில்)
**ஜெயசந்திரபோஸ் இந்திராணி**
(அச்சுவேலி)
**க. கௌரீஸ்வரி**
(அரியாலை)
**சி. ஜெயராணி**
(இணுவில்)
**க. சந்திரகுமார்**
(நீர்வேலி)
**மு. பிரதாஸ்**
(மல்லாகம்)
**க. பொன்னுச்சாமி**
(கரவெட்டி)
**க. ஆறுமுகநாதன்**
(வட்டுக்கோட்டை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறாமை தீமைகளின் பிறப்பிடம்

– **திரு சி. நற்குணலிங்கம்** அவர்கள் –

பொறாமை என்பது ஒருவரின் வளர்ச்சி, வெற்றி, வசதி ஏதாவது ஒன்றையோ, பலவற்றையோ கண்டு மனதால் தாங்கமுடியாமல் பொருமுதல் அல்லது ஆற்றாமை எனப்படும். ஒரு நபர் மற்றவரின் மிகச் சிறந்த நடத்தை, சாதனை, உடைமை ஆகியவற்றை பெறமுடியாமல் போகும்போதும், அதைப் பெற விரும்பும்போதும் அல்லது மற்றவர் அதைப் பெறக்கூடாது என விரும்பும்போதும் நிகழும் ஒருவித உணர்ச்சி. பொறாமை என்பது ஒருவர் தான் கொண்டிராத ஒன்றை மற்றொருவர் கொண்டிருப்பதன் விளைவாக ஏற்படும் வலி அல்லது ஏமாற்றமாகும். ஒன்றைக் கட்டுப்படுத்தும் திறனுக்காக மனித உணர்வுகளில் மிகவும் வலிமையானதாக உணரப்படுவதாகும். எமக்கு ஒன்று கிடைக்கவில்லை என்று வருந்துவதைவிட, மற்றவர்க்கும் அது கிடைக்கவில்லையென்று நாம் சந்தோசம் அடைவதாகும். பொறுத்துக்கொள்ள முடியாமை, மகிழ முடியாத குணம், பொறுக்காமை பொறாமை எனப் படும். பொறாமை என்பது பொறாமைக் குணம் என்றும் அழைக்கப்படுகிறது.

"பொறாமையை மற்றவரின் அதிஷ்டத்தால் விளையும் வலி" என அரிஸ்டோட்டில் வரையறுக்கின்றார்.

அவசரமும், விரைவுச் செயற்பாடுகளும் துரத்திக்கொண்டிருக்கும் இயந்திரத்தனமான கடுகதி வாழ்விலேயும், பெரும்பாலானவர்களிடம் பொறாமையும் குடிகொள்ளத் தவறவில்லை. வாழ்வியல் கோலங்களில் எம்முடன் பொறாமை உணர்வும் கலந்துவிட்டன. ஆரம்ப காலங் களில் தேவைகள், ஆசைகள் குறைவாக இருந்தமையால் செயற்பாடுகளை சிந்தித்து மேற்கொள்ள முடிந்தது. இதன் விளைவாக பொறாமை தவிர்த்து வாழ முடிந்தது. இது மகிழ்ச்சி, அமைதி, ஆரோக்கியம், நல்லுறவு, சமுகப்பற்று ஆகிய விடயங்களில் தன்னிறைவு கொண்டு வாழ்ந்தார்கள். ஆனால் இன்றோ பொறாமை உணர்வினால் இவை எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு வாழ்கிறோம். பொறாமை என்கின்ற பண்பியல்பு எம்மிடையே வலுவடைந்து உள்ளது. இதனால் எமது வாழ்வின் வரையறைகள் தடம்மாறி வாழ்வு பலவீனம் அடைந்துள்ளது.

பொறாமை என்பது ஒரு அச்சுறுத்தல். பொறாமை பொதுவாக எதிர்மறையாகப் பார்க்கப்படுகின்றது. இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஆங்கிலம் பேசும் பிற கலாசாரங்களில் பொறாமையானது பெரும்பாலும் பச்சை நிறத்துடன் தொடர்புடையதாக உள்ளது. பசுமையுடன் பொறாமை "பச்சை நிறக் கண்ணுடைய அரக்கர்" என்ற சொற்றொடர் பொறாமையால் தூண்டப்பட்டதாகத் தோன்றும் தனிநபரின் தற்போதைய நடவடிக்கைகளைக் குறிக்கிறது. பொறாமை தாழ்வு, தன்மதிப்பு உணர்விலிருந்தும் வரலாம். இது தனி நபரின் சுய உருவத்தை அச்சுறுத்துகிறது. "பொறாமையை நீ வெளியிட்டால் அவை வட்டியும் முதலுமாக மீண்டும் உன்னிடமே திரும்பி வந்து சேர்ந்துவிடும்" என்கிறார் சுவாமி விவேகானந்தர். அடுத்தவனுக்கு

*கோபமாகப் பேசும்போது அறிவு தன் முகத்திற்குத் திரையிட்டுக்கொள்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்துவிட்டதென்று சக மனிதன் பொறாமைப்படாத ஒரே விஷயம் மரணம் மட்டுமே. ஒவ்வொரு அறிவுரைக்குப் பின்னும் ஓர் அர்த்தம் உள்ளது. அது அக்கறை அல்லது பொறாமை ஆகும். ஒருவரின் வளர்ச்சியை மட்டுமல்ல அழகைக் கண்டும் பொறாமை கொள்பவர்கள் பெரும்பாலும் பெண்களாகவே இருப்பர். மற்றொரு நபர், தான் முக்கியமெனக் கருதுவதை வைத்திருந்தால் பொறாமை கொள்வர். "பொறாமை மகிழ்ச்சியின்மையின் முக்கிய காரணங்களில் ஒன்று" என பெர்ட்ராண்ட் ரூஸ்ஸல் கூறியுள்ளார். இது மனித இயல்பின் உலகளாவிய மற்றும் மிகுந்த துரதிஷ்டவசமான நோக்காகும். ஏனெனில் பொறாமை படைத்தவர் தனது பொறாமையால் தனக்கு மட்டும் மகிழ்வின்மையை விளைவிப்பதில்லை. அது பிறருக்கும் இடையூறுகளை ஏற்படுத்துகிறது.

எண்ணற்ற ஆண்களும், பெண்களும் கோபத்தினால் தீவிர பொறாமைக்கு குறைந்த காலத்தில் ஆட்படுகின்றனர். இதனால் இவர்கள் ஆத்திரத்துக்கு உட்பட்டு, வலுச்சண்டைக்கும் ஆட்படுகின்றனர். போட்டி எப்பவுமே பொறாமையாக மாறக்கூடாது. ஆனால் பொறாமைக் குணத்தை போட்டியாக ஏற்றுக்கொள்வதே மனிதருக்கும் அவருடைய மனதிற்கும் சவாலாக அமையக்கூடிய செயல். பொறாமையை அடக்குவது தனிமனித மனோபாவத்தைப் பொறுத்தது. பணம் அதிகம் வைத்திருப்பவர்களைப் பார்த்து பொறாமைப்பட்ட காலம் மாறி, ஆரோக்கிய மானவர்களை பார்த்துத்தான் பொறாமைப்படுகின்றனர். தன்னைவிட வேறு எவரும் உயர்ந்து விடக்கூடாது என்ற தீய எண்ணமே பொறாமை என்னும் எதிரியாகும். நமக்குத் தெரியாதது அவனுக்குத் தெரியக்கூடாது. தெரிந்தால் அங்கு பொறாமை வரும். மற்றவர்கள் பொறாமைப் படும் அளவுக்கு வாழ வேண்டும் என அவசியமில்லை. பெற்றவர்கள் பெருமைப்படும் அளவுக்கு வாழ்ந்தாலே போதும். பொறாமை இல்லாதவரே ஒழுக்கமானவர்.

பொறாமையை திருக்குறள் அழுக்காறு என்று கூறுகிறது. இத்தகைய குணம் உடையவர்க்கு பகைவர்கள் வேண்டாம். அவர்கள் கொண்ட பொறாமையே கேடு விளைவிக்கும் என்பது வள்ளுவர் கருத்து. திருக்குறள் இவர்களைப் பாவி என்றே திட்டுகிறது. இவர்களிடத்து உயர்வு தோன்றாது. அழுக்காறு நெஞ்சம் பெறுதல் சாதலுக்கு நேரானது. தன்னை உயர்த்திக்கொள்ள முயற்சிப்பதில்லை. அதாவது அடுத்தவன் கால் முடமாகிவிட்டால், தான் நடக்க இயலும் என நினைப்பான். தமிழ்நாட்டில் ஒரு பழமொழி, "தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை. அடுத்தவனுக்கு அது அபசகுணமாக வேண்டும் என நினைத்து தன் மூக்கையே அறுத்துக்கொள்வான்". கேவலம் இதுக்குப் பிறகும் பொறாமைக் குணத்துடன் வாழ வேண்டுமா? கண்டிப்பாகப் பொறாமையானது சகித்துக்கொள்ளப்பட வேண்டியது. எதையும் பொறுமையோடு தேடு. பொறாமையோடு தேடாதே.

பொதுவாக யார் பொய் சொல்லும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறார்களோ அதன் காரணமாக அவர்களிடம் மற்றக் கெட்ட குணங்களும் இருக்கும் என்பார்கள். பொய்யினைப் போலவே பொறாமையும் குடிகொள்ளும். எல்லாக் குணங்களும் நம்மிடம் இருந்தாலும், பொறாமை எனும் தீய குணத்தால் இறைவனின் கோபத்துக்கு ஆளாவதுடன் அவன் அருளைப் பெறுவதிலிருந்தும் நம்மை நாமே தடுத்துக்கொள்கிறோம் என்பதை நாம் நினைவில்

*இறைவனின் நாமமாகிய மந்திரங்களின் சக்தி ஒருபோதும் குறைவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளவேண்டும். பொறாமை கொள்பவர்கள் பின்னால் செல்வதும் அவர்கள் சொற்படி நடப்பதும் மானம் இழந்த வாழ்க்கையாகும். மானத்தை விரும்புபவர்கள் இச் செயலைச் செய்யமாட்டார்கள். பொறாமை உணர்வு உள்ளவர்களுடன் சிலர் நட்புக்கொண்டுள்ளனர். அது செத்த பிணத்தை அணைப்பது போலவும், பேய் பிடித்து அலைவது போலுமாகும். அவர்களையும் ஒழுக்கமுள்ளவர்களாகக் கருதமுடியாது.

வள்ளுவப் பெருந்தகை அதிகாரம்- 17இல் அழுக்காறாமை அதாவது, பொறாமை தவிர்த்தல் எனும் அதிகாரத்தின்மூலம் பொறாமையின் பாதிப்புக்களை கூறியுள்ளார். "அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்" அதாவது, மற்றவர் வளர்ச்சியால் பொறாமை கொள்பவன் வீட்டிலிருந்து திருமகள் விலகிவிடுவாள், மூதேவி வந்துவிடுவாள். "அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்துவிடும்" பொறாமை என்பது ஒரு பாவச் செயல் மட்டுமல்ல. அது செல்வத்தை அழித்து, துன்பக் குழியில் தள்ளிவிடும். யாரிடமும் எக்காரணம் கொண்டும் பொறாமைப்படாமல் இருப்பதே மேலான செல்வமாகும். மற்றவர் பெற்ற செல்வம், புகழ் இவைகளைக் கண்டு பொறாமைப்படுபவன், தருமத்தையும் வளர்ச்சியையும் இழந்துவிடுகிறான். பொறாமைக் குணத்தால் பெருமை பெற்று செல்வம் அடைந்தவர்களும் இல்லை. பண்பாளர்கள் பெருமையிலிருந்து தாழ்ந்து போனதும் இல்லை.

பொறாமைக் குணத்தை நம் கட்டுப்பாட்டுக்குள் அடக்கினால் சாதனை மிக்க பல செயல்களை புரிவதற்கு நம்மை வழிநடத்திச் செல்லும். எதிரிகள் உன்னைப்பற்றி சமுதாயத்தில் தவறான எண்ணத்தைப் பரப்புகிறார்கள் எனில் நீ வளர்ந்து கொண்டிருக்கிறாய் என்பது அர்த்தம் என எண்ணிக்கொள். பொறாமை தவிர். அது அழுக்கு நிறைந்த வழி. பிறர் நலன் கண்டு மகிழும் இயல்பினைப் பெற்றுக்கொள். பாராட்டும் குணம் பெறு. அமைதி பெறும் இயல்பை வளர்த்துக்கொள். பெறாததை பெற முயலு. பெற்றவர்மீது புழுக்கம் கொள்ளாதே. பொறாமை உள்ளவர்களிடமிருந்து விலகு. "மிக உயர்ந்த இலட்சியத்தையே எப்போதும் பற்றியிருங்கள். உறுதியாக இருங்கள். பொறாமை, சுயநலம் இவற்றை தவிர்த்து விடுங்கள். கீழ்ப்படிந்து நடந்து கொள்ளுங்கள். சத்தியத்துக்கும், மனித குலத்துக்கும் எப்போதும் உண்மையாக நடந்துகொள்ளுங்கள். உலகத்தையே அசைத்துவிடுவீர்கள்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

*கடவுள் அனைவரையும் படைத்து அனைத்து வசதிகளையும் உருவாக்கினார். அவற்றை மனிதனின் இஸ்டப்படி உபயோகித்துக்கொள்ளும்படி அனுமதித்தார். ஆனால் ஒரு நிபந்தனை. நீ எப்படி எண்ணுகிறாயோ, அனுபவிக்கிறாயோ அதற்குத் தகுந்த பலனை மட்டும் நீ அனுபவிக்காமல் தப்ப இயலாது. அதுமட்டுமல்ல ஆனந்தம், சாந்தி இரண்டையும் ஆண்டவனே வைத்துக்கொண்டார். ஆகவே ஆனந்தம் வேண்டுமெனில் ஆண்டவனை நாடு.*

***உண்மையான அடக்கமே எல்லா நற்குணங்களுக்கும் பிறப்பிடமாக இருக்கிறது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் தோற்றம் புராணங்கள் தரும் தகவல்கள்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

விநாயகர் சிவபெருமானின் மூத்த புதல்வன். ஒருமுறை திருக்கைலாய மலையிலுள்ள சித்திரகூடத்தில் பரமேஸ்வரன், பார்வதி சமேதராக எழுந்தருளினார். அம் மண்டபத்தில் ஏழு கோடி மந்திர சித்திரங்கள் பொறிக்கப்பெற்றிருந்தன. அம் மந்திரங்களின் நடுவில் சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் எனும் பிரணவ மந்திரங்கள் இருந்தன. அவையிரண்டும் ஒன்றோடொன்று மருவ; அப் பிரணவங்களிலிருந்து பிரணவாகார யானை முகத்துடன், ஓங்கார வடிவினராய் விநாயகப் பெருமான் தோன்றினார்.

விநாயகர் அம்மையப்பனாக விளங்குகின்ற பார்வதி சமேத பரமேஸ்வரனை வணங்கினார். அக் குழந்தையை அம்மையப்பர் தூக்கி அணைத்து உச்சிமோந்து, "உன்னை உள்ளன்புடன் வணங்கி வருபவர்களுக்கு வரும் இன்னல்கள், இடையூறுகளை நீக்கி இன்னருள் புரிக" என்று கூறி ஆசி வழங்கி கணங்களுக்குத் தலைவராக அவரை அமர்த்தினார். அதனால் கணபதி, கணேசன், கணாதிபன் ஆகிய திருநாமங்களால் அழைக்கப்படலானார்.

கணபதிப் பெருமான் ஓங்கார வடிவினர். "ஓம் பிரணவாய நம" என்பது அவருக்குரிய மூலமந்திரம்.

கணபதிப் பெருமானுக்கு அர்ச்சனை செய்யும்போது, "ஓம் ஓங்கார ரூபாய நம" என்னும் மந்திரம் கூறப்படுகிறது. ஓம் எனும் பிரணவ மந்திர வடிவினருக்கு வணக்கம் என்பது இதன் பொருள்.

பார்வதிதேவி, தமது அரண்மனைக்குள், கேட்டுக்கேள்வியின்றி உட்பிரவேசிப்பவரைத் தடுத்துக் காவல் புரிவதற்காகத் தமது அம்சமாக விநாயகரைத் தோற்றுவித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. சிவனையே தடுத்துப் போர் புரிந்த வலிமையும், பெருமையும் விநாயகருக்குண்டு. அதனால், விநாயகர் அம்மா பிள்ளை என்று அழைக்கப்படுகிறார். செல்லப் பிள்ளையார் என்ற திருப்பெயரையும் பெற்றார்.

சக்தியின் அம்சம் இருப்பதால், அனைத்துக் காரியங்களையும் எளிதில் முடிக்கும் வல்லமை விநாயகருக்கு உண்டு.

அதனாலேயே எந்தக் கருமங்களையும் செய்யத் தொடங்குவதற்கு முன், விநாயகருக்கு முதல் வணக்கம் செய்து; விக்கினங்கள் இல்லாமல் இடையூறுகள் குறுக்கீடு செய்யாமல்; வெற்றியைத் தரும்படி தொழுது வேண்டிக்கொள்கிறோம். சித்தி விநாயகர் என்னும் சிறப்புப் பெயரைப் பெறுகின்றார்.

*ஆண்டவனுக்காகத் தன்னை தாழ்த்திக்கொள்பவனை ஆண்டவன் உயர்த்துவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதல் வணக்கத்திற்குரியவர்

முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான், பார்வதிதேவி ஆகியோரின் மூத்த பிள்ளை விநாயகர். அதனால் மூத்த விநாயகர் என்ற திருப்பெயரைப் பெற்றுள்ளார்.

சிவபெருமானின் அருள் வடிவங்களுள் ஒன்றாகவும், விநாயக மூர்த்தம் கொள்ளப் படுகிறது.

இங்கு ஒரே பரம்பொருள்; தந்தை - மைந்தன் தொடர்பில் பேசப்படுகிறது. சிவனும் விநாயகரும் ஒருவரே என்ற உண்மையும் உணரப்படவேண்டியது இன்றியமையாததாகும்.

கஜமுகன் என்னும் பெயர்கொண்ட அசுரர் தலைவன் தவம் செய்து சிவபெருமானிடம் இருந்து பல வரங்களைப் பெற்றான். அந்த வரத்தின் பலத்தினால் அவன் தேவர்களையும் மனிதர்களையும் கொடுமைப்படுத்தி வருத்தினான். தேவர்களை பூண்டோடு அழிக்க எண்ணினான்.

கஜமுகன் இழைக்கும் கொடுமைகளைத் தாங்கமுடியாமல் தவித்த தேவர்கள் சிவனிடம் சென்று தங்கள் துன்பங்களைக் கூறித் தம்மைக் காத்தருளுமாறு வேண்டினர். கஜமுகனைச் சம்ஹாரம் செய்து தேவர்களின் துன்பத்தை நீக்கி அவர்களைக் காப்பாற்று வதற்காக விநாயகப்பெருமான் ஆவணிமாத வளர்பிறைச் சதுர்த்தியன்று அவதரித்தார்.

விநாயகர் கஜமுகனுடன் எதிர்த்துப் போர்புரிந்தபோது உக்கிரம் தாங்கமுடியாமல் பெருச்சாளி உருவம்கொண்டு விநாயகரை எதிர்த்துத் தாக்கினான். ஆயுதங்களால் கஜமுகனை அழிக்கமுடியாதவாறு வரம் பெற்றிருந்தான். விநாயகர் தந்தை வழங்கிய வரத்தை மதித்து; பெருச்சாளியைத் தமது வாகனமாக்கி அருள் புரிந்தார்.

கஜமுகாசுரனைச் சம்ஹாரம் செய்து, தேவர்களைக் காக்கவே சிவபெருமான் விநாயகரைத் தோற்றுவித்தார் என்பது புராண வரலாறு.

"கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலும்
கயாசுரனை யவனாற் கொல்வித்தார் போலும்"

-அப்பர் தேவாரம்.

## தத்துவ ரீதியில் யார் இந்தக் கஜமுகாசுரன்?

மனிதரிடம் ஆழ்ந்து, புதைந்து கிடக்கும் ஆணவ மலமே இந்த கஜமுகாசுரன். ஆணவத்தின் இரு கூறுகள் "நான்" எனும் அகந்தையும் "எனது" என்னும் மமதையும் ஆகும். "நான்" என்பது தற்பற்று - தன்னலம்; "எனது" என்பது பொருட்பற்று. ஆணவம் என்பது தன்முனைப்பு.

பிறவிக்குக் காரணம் ஆகவும்; துன்பங்களுக்கு வித்து ஆகவும் உள்ளது ஆணவமலம்.

எனவே ஆணவமலம் நீங்கப்பெறின்; பிறப்பு, இறப்புத் தொடர் நிகழ்வும் நீக்கம் பெற்றுவிடும். துன்பங்களும் நீங்கிவிடும். முத்தி நிலையாகிய பேரின்ப பெருவாழ்வும் எய்தப்பட்டுவிடும்.

*பொய்யை விட்டொழித்தவர்கள் புண்ணியவான்கள் ஆவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகரை உள்ளன்போடு வணங்கி வழிபட்டு வந்தால் ஆணவ மலநீக்கம் எய்தப்பட்டுவிடும்.

விநாயகர் தோற்றத்தின் உட்பொருள் ஆணவ ஒழிப்பு ஆகும். நல்லதன் தோற்றம் அல்லதன் ஒழிப்பிற்குக் காரணமாகின்றது.

பிள்ளையார் தோற்றம் பற்றித் திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பாடல் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

---

## ஆன்மீக அலைகளே அனர்த்தங்களை அகற்ற வல்லது

நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களான, சடங்குகள், சம்பிரதாயங்கள், நம்பிக்கைகள், திருவிழாக்கள், மடைகள், பொங்கல், படையல்கள், யாகங்கள், கும்பாபிசேகங்கள், தண்ணீர்ப்பந்தல்கள், தானங்கள், கேணிகள், சுமைதாங்கிகள், ஆவுரஞ்சிக்கல்லுகள், தரும சாதனங்கள், தொட்டிகள், மடங்கள், புராணபடனம், திருமுறைப் பாராயணம், உபந்நியாசம், பிரசங்கம், விரதங்கள், தியானம், தீட்சை என அரும்பெரும் ஆன்மீகச் செல்வங்கள் செம்மையாக நிறைந்தமையால் அனர்த்த பேரிடர்கள் பெரிதாகப் பூமியைப் பாதிக்கவில்லை. காரணம் ஆன்மீக விளைச்சல்களை ஏகமனதாகவும், ஒருமித்தும், சிக்கனமாகவும், சிந்தித்தும் செயற்படுத்தியமையே முதற் காரணமாகும். இப்போதும் இவை நடக்கின்றபோதும், இயற்கை ஏனோ மனமுவந்து ஏற்பதில்லையோ என வினவப்படுகிறது.

ஒவ்வொரு மதங்களிலும், அவற்றை இறுகப்பற்றுவதற்கான தகைமைகளையும், ஆசாரங்களையும் பரிந்துரை செய்திருக்கிறார்கள். சைவசமயத்திலும் ஒருவன் சைவசமயியாக எப்போதும் வாழ்வதற்குச் சமய தீட்சை பெறுவது மிகமிக அவசியமேயாகும். இவ்வாறு ஒவ்வொருவரும் தான்சார்ந்த சமய அங்கீகாரங்களைப் பெறும் பட்சத்தில் சமய விழுமியங்கள் எளிதில் கிடைத்தே தீரும். இதில் சமய சிவ தீட்சை பெற்றவர்கள், ஆலயங்களிலும், வீடுகளிலும், கிராமங்களிலும், நாட்டிலும் நிறைந்து காணப்படுவதால் பேரிடர் அனர்த்தங்கள் தவிர்க்கப்படுகின்றன. சிவதீட்சை பெற்றவர்கள் ஆலய நிர்வாகங்களிலும் இருந்துவிட்டால் சொர்க்கமென ஆலயங்கள் சோபிக்கும். யாவும் சித்திக்கும். வதைகள், இடர்கள், துன்பங்கள், குழப்பங்கள், மோதல்கள், அனர்த்தங்கள் யாவும் நீங்கி ஆன்மீக அலைகள் வாலாயம் பெறும். நாடு பீடுபெறும்.

-கே.எஸ். சிவஞானராஜா-

*இன்ப துன்பங்களை அனுபவிப்பது ஆன்மாவேயன்றி மனமன்று.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

## அத்தியாயம் - 12

(தொடர்ச்சி...

## கடவுளும் பிரபஞ்சமும்

- திரு பூ. சோதிநாதன் அவர்கள் -

### 07) மனமும் பிரபஞ்ச மனமும்

மனம் என்ற வார்த்தையைக் கீதை குறிப்பிடும்போது மேற்கூறிய தன்மையிலேயே தனது சுலோகங்களில் குறிப்பிடுகின்றது. மனம் ஐம்பூதங்களைக் காட்டிலும் உயர்வானது. அதனைக் கேள்விப்படும்போது நாம் ஆச்சரியப்படக்கூடும். அத்துடன் இங்கு குறிக்கப்பெறுவது "எமது" மனமாக இருக்கமுடியாது என்பதைப் பொது அறிவைக்கொண்டே நாம் ஓரளவு கூறக்கூடும். ஏனெனில், முழுப் பௌதீகப் பிரபஞ்சத்தைக் காட்டிலும் எமது மனம் உயர்ந்தது என்று எவராலும் கூறமுடியாது. எனவே இந்த "மனதை" இயல்பாகவே பிரபஞ்ச மனத்தோடு நாம் இனங்காணவேண்டும். அதன்பின் பிரபஞ்ச விவேகமான புத்தி உள்ளது. அது சாங்கியத்தில் மஹத் என்று கூறுவர்.

### 08) பிரபஞ்சத் தன்னுணர்வு

பிரபஞ்சத் தன்னுணர்வு என்னும் "அகங்காரம்" அதற்கு மேல் உள்ளது. சாங்கிய தத்துவத்தின்படி மஹத் அல்லது பிரபஞ்ச விவேகம் அகங்காரத்துக்கும் மேலுள்ளது. அத்துடன் விவரிக்க முடியாத தொடர்ச்சியின் மேல் "அவ்யக்தம்" உள்ளது. அதனைச் சாங்கியம் "பிரகிரதி" என்று கூறும். அதற்கும் அப்பாலுள்ளது பூரணத்துவத்தின் மேலான பேரொளியாகும். இது "புருஷன்" என்றோ வெவ்வேறு சிந்தனை மரபுகளுக்கு ஏற்ப வெவ்வேறு பெயர்களாலோ அழைக்கப்பெறுகிறது. இவை யாவும் பிரபஞ்ச அடுக்குகள் முழுமையிலும் உள்ளன. கீதையின்படி இவை பிரகிருதியின் எட்டு வடிவங்களாகும். ஆனால் இத் தத்துவங்களைச் சாங்கியம் அடுக்கி வைக்கும் முறையும், அவற்றின் பாகுபாடும் வேறானது.

### 09) கடவுள் தத்துவம்

பிரகிருதியின் எல்லா வடிவங்களுக்கும் மேலானதாக, கீழ்மட்ட விடயங்களை ஒழுங்காக இயக்கும் ஓர் உயர்ந்த விடயமே கடவுள் தத்துவமாகும். சமய வார்த்தையில் இதனைக் கடவுளின் ஆற்றல், படைத்தல் - காத்தல் - அழித்தல் என்பவற்றை இயக்கும் சக்தி, பூரணத்துவத்தின் ஆற்றல் எனப் பலவாறு கூறுவர். இந்த ஆற்றலின் இருப்புக்கு

வெளியே எதுவும் இல்லை. எல்லாம் இப்பேருண்மையின் கீழேதான் உள்ளன. இதன் விளைவாகக் கீதையின் சாங்கியம் கபிலரின் சாங்கியத்தில் உள்ள இருமைப் பிரச்சினை களை வெற்றிகரமாகத் தீர்த்துவிடுகின்றது. கபிலரின் சாங்கியத்தில் உள்ள புருஷன், பிரகிருதி என்பவை கீதையின் உயர் இருப்பான கடவுளின் கீழ் வந்துவிடுகின்றது. ஸ்பினோசா என்பவர் உயர் வஸ்துவின் இறைத் தத்துவத்தினால் குறிப்பிடும் பண்புகளைப் போன்றனவே அவையாகும். சாதாரண அநுபவத்தின் கருத்துப்படி, இவை பண்புகள் மட்டுமன்றி ஆன்மீகத்திலுள்ள வஸ்துவின் வகைகளாகும்.

## 10) கடவுளும் அசைவும்

எவர் நானாக இருக்கிறேனோ அவரே "நான்" என்பதும், கடவுள் தன்னிலேயே இருப்பதும் ஒன்றே. அது எங்களுக்குத் தோன்றும் கடவுள் அன்று. அவரால் எவருக்கும் தோன்றமுடியாது. ஏனெனில், அவர் எவருடைய அறிதலாலும் அறியப்படும் ஒரு பொருள் அல்லர். கடவுள் எல்லாமாகவே உள்ளார் என்பதைக் கீதை அழுத்திக் கூறுகின்றது. இதனால் அவரை ஓர் எல்லைக்குள் எந்தவகையிலும் அடக்கமுடியாது. ஏனெனில், கடவுளுக்கு வெளியே ஒருபோதும் எதுவும் இல்லை. எனவே கடவுள் பற்றிய உயர்ந்த அந்த இலக்கணப்படி, கடவுளை நோக்கிய ஆன்மாவினது அசைவு விளக்கமுடியாத ஒரு செய்முறை ஆகும். கடவுளின் எங்கும் நிறைந்த தன்மையில் அவரது அசைவு பற்றிய கருத்து இடம்பெற வழியில்லை. எனினும் அது விளக்கப்படவேண்டி இருக்கிறது. எனவே அவரது அசைவு, காலம், இடம் என்பவற்றுக்கு ஊடாக ஒரு கிடையான வழியில் நடை பெறுவதாகத் தோன்றவில்லை. அது ஒரு வீதியைக் கடந்து செல்லும் தூரம் போன்ற அசைவு அன்று. எனினும் கடவுள் என்ற கருத்தில் அசைவு என்பது ஒரு தாழ்ந்தமட்டத்தில் இருந்து உயர்ந்த மட்டத்துக்கு நகர்வது எனலாம். நாம் கனவிலிருந்து விழிப்புக்குப் பிரயாணம் செய்யும்போது ஒரு வாகனத்தில் இருந்தபடியே ஒரு வீதியில் செல்வது போன்ற அசைவு அங்கு இருப்பதில்லை. எனினும், கனவில் இருந்து விழிப்புக்கு நாம் வருகின்றோம். அது உண்மையான விடயமாகும். அந்தப் பிரயாணம் ஒரு கீழ்மட்டத்தில் இருந்து இன்னோர் உயர்ந்த மட்டத்திற்கு நாம் மனரீதியாக அல்லது உளரீதியாக அசைவதாகும். அது குறிப்பிட்ட இடத்தில் ஒரு குறித்த திசையில் நகர்வதை ஒத்ததன்று.

## 11) புறப்பொருள் அல்ல

கடவுளை நோக்கிய ஆன்மாவின் அசைவினது தன்மையை விவரிக்கும்போது நாம் நான்குவிதமான சாதகர்களை அறிய வருகின்றோம். அந்த நான்கு வகையினரது நிலைப்பாடும் அவரவரது வழியில் பெறுமதிமிக்கதாகக் கருதவேண்டும். கடவுளுக்கான எமது அன்பு அதற்கான தூண்டுதலைப் பொறுத்தவரையில் வித்தியாசமானது. அத்துடன் அந்த அன்பு எவ்வளவுக்குப் பூரணமானதாக உள்ளதோ அந்த அளவுக்குக் கடவுளை அடைந்து பூரணத்துவத்தை அனுபவிக்கும் சாத்தியமும் அதிகம். கடவுளை எவ்வளவுக்குப்

*தீய செயல்களிலிருந்து நம்மைத் தடுப்பவனே உண்மையான நண்பன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பொருளாகக் கருத முயற்சிக்கிறோமோ அவ்வழியில் நாம் அவ்வளவுக்கு அதிகம் அதிகமாகச் சிக்கலை எதிர்நோக்கவேண்டி இருக்கும். கடவுள் ஒரு புறப்பொருள் என்ற ஒரு தத்துவ உணர்வு இருந்தாலும் கூட அவ்வாறான சிக்கலை எதிர்நோக்க வேண்டியே வரும். ஏனெனில் தன்னை அங்கங்களோடு கூடிய ஒரு புறப்பொருளாகக் கருதித் தன்னை விட்டுவிடும் எந்த வகையினையும் கடவுள் விரும்புவதில்லை. அவரை நோக்கிய எமது மனப்பான்மையே அவர் புறத்தே உள்ள பொருளாகக் கருத வைக்கின்றது. கடவுள் பிரபஞ்சத்தின் ஆன்மாவாக இருந்தாலும், அவர் ஒவ்வொரு அநுபவத்துக்கும் பின்னாலுள்ள ஆன்மாவாக இருந்தாலும், அவரை ஒரு பொருளாகக் கற்பனை செய்வதோ, கருதுவதோ சாத்தியமாகாது. அத்துடன் அவரை ஓர் அங்குலம்கூட எம்மிடமிருந்து விலக்கித் தூரத்தே உள்ளவர் என்று கருதமுடியாது. கடவுள் ஒரு பொருளாயின் அவரை நோக்கிய எமது மனப்பான்மை எப்படி இருக்கவேண்டும்? எல்லா மனப்பான்மைகளும் புறநோக்கானவையே. எனவே அவையே மனத்தின் அசைவாகும். கடவுளைப் பிரபஞ்ச ஆன்மா என்று எதிர்பார்த்தாலும், எந்த ஒரு மனப்பான்மையையும் பற்றிப் பேசுவதோ, அவரைக் குறித்து ஓர் உள்நோக்கத்தினால் தூண்டப்பெறுவது பற்றிப் பேசுவதோ சாத்தியமில்லை. எனினும் மனிதர் வெவ்வேறு வகையினராயும், அநுபவத்திலும் வளர்ச்சியிலும் வெவ்வேறு அளவினராயும் இருக்கின்றனர்.

## 12) எமது நிறைவின்மை

மனிதர் பெரும்பாலும் கவலை உள்ள நேரங்களில் மட்டுமே கடவுளின் பக்கம் திரும்புகின்றார்கள். உலகத்தில் எங்கிருந்தும் எவரும் உதவிக்கு வரார் என்று தோன்றும்போது கவலை உள்ளவர்கள் "கடவுளே எனக்கு உதவு" என்று கதறி அழுகின்றனர். அவர்கள் தாம் கடந்து செல்லும் துன்பத்துக்கு ஊடாகத் தமக்கு உள்ளே ஓர் இடைவெளியை உணருகிறார்கள். அதனால் கடவுள் தமக்குப் பிரசன்னமாக இருந்து உதவும்படி அவர்கள் கேட்கின்றனர். எமது இதயங்களைக் கிழிக்கும் துன்பமும், நாம் அகத்தும் புறத்தும் எங்கிலும் உணருகின்ற எமது நிறைவின்மையும் கடவுளை உதவிக்கு அழைக்கச் செய் கின்றன. கடவுள்மீது அன்பு அல்லது பக்தி செய்வதற்கான ஒரு முறையே இதுவாகும். இதுவே ஒரு சமயம் எனலாம். இந்தவகை அன்பும் ஒரு வழியில் கடவுள் உணர்வை ஏற்படுத்துவதனால் இதனை ஒரு சமயம் எனலாம். எதனையும் கடவுளோடு தொடர்பு படுத்தினால் அது சமயமே. எனினும் இந்த அன்பின் பண்பு, அதன் செறிவு என்பன சிந்திக்கப்படவேண்டிய விடயங்களாகும். பகவான் ஒரு யோக ஆசிரியர் என்ற முறையில் இவை பக்தர்களின் வகைகள் என்று எமக்கு எடுத்துக் கூறுகின்றார். அவர்கள் தமக்கு எந்தக் குறிக்கோளை வைத்திருந்தபோதும் கடவுள் பக்கம் திரும்புவதால் அவர்களும் பக்தர்களே. இவர்களைவிட வேறு சிலர் அறிவு, ஞானம், விடுதலை என்பவற்றை அன்றிப் பொருள்களாக எதையும் தேடுவதில்லை. இவர்கள் துன்பத்தை நீக்குவதையோ, நீண்ட

*ஆரோக்கியத்துக்கு ஒப்பான நண்பன் வேறு யாருமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுளையோ, சாதாரண மனிதர் பெறுமதியாகக் கருதும் எந்த ஒரு பொருளையோ தேடுவதில்லை. இவர்கள் உண்மைக்கு ஒரு வழியைக் காட்டத் தமக்குக் கடவுள் ஒளியையும், புரிந்துணரும் ஆற்றலையும் ஆசியையும் தரும்படி வேண்டுகின்றனர்.

## 13) மூன்றாவது வகையினர்

கடவுளை நாடும் மூன்றாவது வகையினரைக் கீதை செல்வம் தேடும் நோக்கம் உள்ளவர்கள் என்று குறிப்பிடுகின்றது. இங்கு பொருள் செழிப்பே செல்வம் எனப்படுகிறது. இந்த மூன்றாம் வகையினர் ஏதோ சில பொருளாதாரச் செழிப்புக்களுக்காகக் கடவுள் பக்கம் திரும்புகின்றனர் எனக் கீதை வியாக்கியானகாரர் சிலர் கூறுகின்றனர். ஆனால் ஏனையோர் இரண்டாவது வகையினரை விடக் கீழானவர்கள் ஆதலால் அச் சொல் இவர்களைத்தான் கருதுமென எண்ணுவது பொருந்தாது என்பர். பக்தர்களைத் துன்பத்தால் நாடுபவர்கள், அறிவு தேடுபவர்கள், செல்வச்செழிப்பைத் தேடுபவர்கள், ஞானிகள் என்று வரிசைப்படுத்துவதில் ஒரு நியாயம் உண்டு. முன்னுள்ள மூன்று வகையினரைக் காட்டிலும் ஞானி மிக உயர்ந்தவன் எனக் கருதப்பெறுகிறது. முதலாவது வகையினரைவிட இரண்டாவது வகையினர் உயர்வானவர்கள் என்பது உறுதியே. இதிலிருந்து மூன்றாவது வகையினர் முதலிரு வகையினரைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்பதை ஏற்கவேண்டி உள்ளது. எனவே சில கீதை வியாக்கியானகாரர் செல்வம் என்பது பொருள் செழிப்பை அன்றிப் புருஷார்த்தங்கள் என்று கொள்ளவேண்டுமெனக் கருதுகின்றனர். இது அவ்வாறான ஆசிரியர் சிலர் வழங்கும் ஒரு புதுமையான விளக்கவுரையாகும். செல்வம் தேடுவோர் எனக் கருதப்பெறும் இவ்வகைப் பக்தர்களின் குறிக்கோள்கள் அதற்கான குறிக்கோள் உடைய வராவர். எனவே திடப்பொருள்களான கீழ்மட்டங்களில் உள்ளவற்றை அன்றி உயர்வான அர்த்தங்களைத் தேடுபவர்களே இவ்வகையினராவர். (தொடரும்...

### பார் போற்றும் செல்வச் சந்நிதிவேல்

கண்ணீரை விலக்கி வைக்கும் கந்தன் கைவேல்
காலகாலமாய் முனிவர்கள் கண்டறிந்த வேல்
பன்னீரில் குளிக்கின்ற கந்த வடிவேல்
பலர் போற்றிக் கைதொழும் சந்நிதிவேல்
அந்தணர்கள் இல்லாத பூசை காணும் வேல்
ஆதியில் கதிர்காமருடன் கதைத்து அமர்ந்த வேல்
சிந்தனையில் நினைந்துருகும் சிவன் மகன்தான் வேல்
ஸ்ரீ செல்வச் சந்நிதியில் உள்ள வடிவேல் செல்வவடிவேல்.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*மனிதர் எண்ணத்தை மீறியும் காலபலன் வேலை செய்வதுண்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாமாலையும் பூமாலையும்

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

"நாவழுத்தும் சொல்மலரோ நாள்உதிக்கும் பொன்மலரோ
தேவைஉனக்கு இன்னதுஎன்று செப்பாய் பராபரமே"

-தாயுமானவர் பாடல் - பராபரக்கண்ணி 247.

வழுத்துதல்- போற்றுதல், துதித்தல்- வணங்குதல், தோத்தரித்தல், சொல்மலர்- சொற்களால் இயன்ற பாமலர், மந்திரம், கீர்த்தனம், பாமாலை, நாள் உதிக்கும்- தினம் தினம் மலரும் (நாண்மலர்) பொன்மலர்- பூக்கள்.

சைவ சமயம் காட்டும் வழிபாட்டு நெறிகளிற் பூவினாற் பூசை செய்வதும், பூமாலை சாத்தி அலங்காரம் செய்வதும், வழிபாடு இயற்றுவதும், அர்ச்சிப்பதும், பாமாலை பாடித் தொழுவதும், பக்தி செய்வதும் முக்கியத்துவமானவையாகும். இப் பக்திநெறி தொன்மையானது. பாரம்பரியமானது. பூவும், பத்திரமும் (பத்திரம்- இலை) பூசைக்குரியன. அதுவும் விதிக்கமையச் செய்யவேண்டும். வெவ்வேறு தெய்வங்கட்கு வெவ்வேறு மலர்கள் உரியன. வில்வம், துளசி, அறுகு முறையே சிவன் விஷ்ணு, விநாயகர்க்கு உரியவை. வில்வத்தையும் துளசியையும் ஆறு மாதங்கள் வரை பயன்படுத்தலாம். கொன்றை, வெள்ளெருக்கு சிவனுக் குரியன. கடம்பு, குரா முருகனுக்குரியவை. அலரி வைரவர்க்குரியது. நீர்ப்பூ, நிலப்பூ, செடிப்பூ, கொடிப்பூ, மரப்பூவெனப் பல மலர்கள் உண்டு. தவிர்க்கப்பட்ட பூக்களை எவரும் எடுப்பதில்லை. இன்று அந்த ஒழுங்கு போய்விட்டது. கடதாசிப்பூ, முசண்டாஸ், எக்சோறா எல்லாம் பயன்படுத்தப்படுகின்றன. மாலைகளும் பலவகையாய் அமைக்கப்படும். இண்டை, தாமம், தொங்கல், தொடை, கதம்பம், சரம், மாலை என்று பல இனம் உண்டு. புது மலராற் கட்டப்பட்டவையே மாலை. பூக்கள் மணமும், அழகும், செவ்வியும் நிறைந்தவை. இப்போ பல ஆலயங்களில் ஆண்டவனுக்குச் சூட்டிய மாலைகளை (பழையன) பயன் படுத்துவதைக் காணமுடிகிறது. ஆண்டாள்தான் ஆண்டவனுக்குச் சூடிக் கொடுத்தவள். அவளைச் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியென வைணவம் போற்றுகிறது. பூசகர்களும், நிர்வாகிகளும் ஆண்டவனுக்குச் செய்யும் பணிகளில் தப்புப்பண்ணக் கூடாது. அப்படிச் செய்வது அதர்மம். அது கரு (பிறவி)ப் பணியாய் விடும். எல்லாச் சமூகப் பணிகளும் இறை பணியிற் கொண்டு சேர்த்தால்தான் நிறைவுள்ளதாகும். ஈஸ்வரன் சம்பந்தமான பணிக்கே "திரு" என்ற அடைமொழி கொடுத்து, திருப்பணி என்று பெயர் வைக்கிறார்கள்" என்பது காஞ்சி மகானின் திருவாக்கு. இப் பூத்தொண்டையும், பூந்தோட்டத் தொண்டையும் மேற்கொண்டு பல மெய்யடியார்கள் இறைவனை அடைந்துள்ளனர். அறுபத்துமூன்று நாயன்மார் களிலே முருக நாயனார், கணநாதர், சிவகாமியாண்டார், செருத்துணையார், கழற்சிங்கர்

*எல்லா அதிருப்திகளின் வேர் தன்னலமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் மலர்த் தொண்டையே சிவத்தொண்டாக மேற்கொண்டோர் பிறவிப்பயனை அடைந்தவராவர். பாவித்த மலர்களையும், மாலைகளையும் கால்படாமற் தூரத்திலே பேணவேண்டும், மறைக்க வேண்டும்.

இப் பூவின் பெருமானமும், சிறப்பும்பற்றி நால்வர்களும் பதிகம் செய்தனர். அவ்வழியில் திருமூலர், தாயுமானவர், பட்டினத்தார் போன்றவர்களும் தம் பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

இண்டைகட்டி வழிபாடு செய்யும் இடம் என்பரால்,
பூவொடுநீர் சுமந்தேத்தி புகுவார் அவர்பின் புகுவேன்
புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
பூவார்மலர் கொண்டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
உண்பதன் முன்மலர் பறித் திட்டுண்ணாராகில்
பூநாளும் தலைசுமப்ப புகழ்நாமம் செவிகேட்ப
-தேவாரம்.

தவமே புரிந்திலன் தண்மலர்இட்டுமுட் டாதிறைஞ்சி
இருந்து நல்மலர்புனையேன் ஏத்தேன் நாத்தழும்பேற
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்தேத்தேன்
முத்தனே முதல்வா முக்கணா முனிவா
-திருவாசகம்.

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
-திருமந்திரம்.

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடப் பல்பச் சிலையால்
எண்ணுண்டு சாத்த
-பட்டினத்தார்.

புல்லாயினும் ஒருபச்சிலை யாயினும் போட்டிறைஞ்சி
நில் லேன் -தாயுமான சுவாமிகள்.

இப் பூமாலைகள் வாடிவிடும். அதன் மணமும், அழகும், ஒளியும், அமைப்பும் மங்கிப்போகும். எனவே இறைவன் புகழைப் பாடும் பாமாலைகள் எழுந்தன. பூவினாற் செய்யப்படுவது பூமாலை. பாவினால் செய்து நாவினால் அவன் பெருமைகளைச் சொல்லலாம், இரக்கலாம். பணிந்து வேண்டுதலும் செய்யலாம். இறைவனோடு இசையால் இசைவிப்பன இப் பாமாலைகள். பூக்கள் கொண்டு நாரினாற் தொடுக்கப்படுவது மலர்மாலை. கவிதையிலும் பல இனம் உண்டு. பூக்களிலும் பலவகையுண்டு. வெண்பா, ஆசிரியப்பா, விருத்தப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்று பல இனப் பாக்கள் தமிழில் உண்டு. இவைகள் இரட்டை மணிமாலை, மும்மணிமாலை, நான்மணிமாலை, கலம்பகம், அந்தாதி, மும்மணிக்கோவை,

*பெரிதாக வாக்களிப்பதைவிட, சிறிதளவு கொடுப்பது மேல்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலா, தேவாரம், திருவாசகம் தேவபாணி, ஒருபா ஒருப..்து, தூது என்றெல்லாம் காலத்திற்குக் காலம் விரிந்துள்ளன. நம் சமயம் இவற்றைத் தோத்திரம், சாத்திரமென இரண்டாக வகுத்தது. தேவார, திருவாசக, திருவிசைப்பா போல்வனவும், திருநாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் தோத்திரங்கள் - திருமந்திரம், மெய்கண்ட சாத்திரங்கள் தத்துவங்கள். மெய்ஞ்ஞான தத்துவங்கள். இந்தப் பாமாலை, மலர்மாலைபற்றித் தாயுமானாரின் சிந்தனை ஊற்று இப்படிப் பாய்கிறது.

பன்மாலைத் திரள் இருக்கத், தமைஉ ணர்ந்தோர்
பாமாலைக் கேநீதான் பட்சம் என்று,
நன்மாலை யாஎடுத்துச் சொன்னார் நல்லோர்,
நலம்அறிந்து கல்லாத நானுஞ் சொன்னேன்
சொன்மாலை மாலையாக் கண்ணீர் சோரத்
தொண்டனேன் எந்நாளுந் துதித்து நிற்பேன்;
என்மாலை அறிந்து, இங்கே வாவா என்றே
எனைக் கலப்பாய் திருக்கருணை எம்பிரானே!

-பன்மாலை 1.

பன்மாலைத் திரள் இருக்க- பூமாலைகள் பல இருக்கச் செய்து, பட்சம் - விருப்பம். நன்மாலை - சிறந்த பாமாலை, என்மாலை அறிந்து- என் விருப்பத்தை உணர்ந்து.

இறை வழிபாட்டில் பாமாலையும், பூமாலையும் வகிக்கும் இடத்தை நாவரசர் நெஞ்சுக்கு உணர்த்துவதுபோற் பாடுகின்றார். அவர் தந்த பாவகைதான் திருத்தாண்டகம். அப் பாசுரம் வருமாறு.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடி
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி
சங்கரா சயசய போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை எம்மாதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

-திருநெடுந்தாண்டகம்.

இத் தேவாரத்திலே பாடலும், ஆடலும் இடம்பெற்றதுபோலே- பூமாலையால் இறைவனைப் பிரார்த்தித்தலும் முக்கிய இடம்பெறுகிறது. எனவே இப் பாரம்பரியம் தொன்று நின்று இன்றுமட்டும் காக்கப்படுகின்றது. இறைவனை (அன்புபோல்) மென்மலர்களால் அர்ச்சிப்பதும், அலங்காரம் செய்து பார்த்து, புளகாங்கிதம் அடைவதும் ஒரு பக்தனை மெய்சிலிர்க்கச் செய்கிறது. ஆனால் அது அன்றோடு சரி. பக்தி நெறி நின்று பாடிய பாமாலைகள் படிப்போர், கேட்போர், அனுபவிப்போரது நெஞ்சையுருக்கி, இடையறா அன்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனோடு கலக்கவும் வைக்கிறது. உலகம் உள்ளளவும் பாடல்கள் நிலைபெறவே செய்யும். வாழையடி வாழையாக அப் பாடல்கள் சைவசமுதாயத்தைப் பாராயணம் செய்யவும் வழிவகுக்கின்றது. இப் பாமாலை பூமாலையின் செவ்வியை, விழுமியங்களைக் காஞ்சி முனிவரின் திருவாக்கில் இருந்து காண்போம்.

"பூமாலை கண்ணுக்கு அழகாகத் தெரிகிறது என்றால், பாமாலை காதுக்கு அழகான சொல்லும் சந்தமுமான ரூபத்தில் இருக்கிறது. பூமாலைக்கு வாசனை மாதிரி, பாமாலைக்கு அதன் அர்த்தம். பூவில் இருந்து தேன் வருகிறது என்றால் பாவிலிருந்து கிடைக்கிற ரஸாநுபவம்தான் மனசுக்குத்தேன். ஒரு பெரிய வித்தியாசம்- பூமாலை வாடிப்போவது; பாமாலை லோகமுள்ள அளவும் வாடாது.

-தெய்வத்தின் குரல் பாகம் -6. பக்கம் 615.

இவ்வண்ணம் ஒப்பீட்டு ஆய்வில் நின்று காஞ்சிப்பெரியவர்கள் தென்தமிழிலும், வடமொழியில் எழுந்த ஸௌந்தர்ய லகரியிலும் அமைந்த கவிப் பொருளையும், சாமர்த்தியத்தையும் படித்து அவற்றிலே ஆழ்ந்காற்பட்டு அவற்றை இரத்தினச் சுரங்கம் என்கிறார்கள். அந்த வரிகளையும் இன்றைய இளந்தலைமுறையினரும், முதியோரும் படித்துப் பார்க்க வேண்டும். "சாதாரண மனுஷ்யக் கவிகளுக்கும், மஹான்கள் கவிகளாக இருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. ஆசார்யாள், ஞானசம்பந்தர், நம்மாழ்வார் சதாசிவப் பிரம்மேந்திராள மாதிரியானவர்களிடம் கவிதையோடு அருளும் சேர்ந்திருக்கிறது. ஒரு கவிக்கு ஈச்வரன் தூண்டிவிட்ட ஆர்வத்தில் கவிதை பிறந்தால் அதை அருட்கவி என்று சொல்கிறோம். இந்த இடத்தில் கவிதையைக் கவி தன்னுடைய புத்தி, கல்பனாசக்தி, அநுபவம் ஆகியவை களைக் கொண்டு பண்ணவில்லை. அவனுக்கு ஈசுவரன் பண்ணிய அருளால் தன்னுடைய சொந்தபுத்தி, யுக்தி, அநுபவங்களுக்கும் அதீதமாக கவிதை பண்ணிவிட்டான்" என்று அர்த்தம். மஹான்களுடைய கவிதை இன்னொரு அர்த்தத்தில்- இன்னொரு அர்த்தத்திலும் என்று சொல்லனும் - அருட்கவியாக இருக்கிறது. எப்படியென்றால் அந்தக் கவிதையை அதைப் படிக்கிறவர்களுக்கு கவிதா ரஸத்தைக் கொடுப்பதோடு அருளையும் வழங்கி அநுக்கிரகம் பண்ணுகிறது. பொதுவாக "அருட்கவி" என்பது கவிக்கு அருட்சக்தி கிடைத்துப் பாடினதைக் காட்டுகிறதென்றால், மஹான்களுடைய அருட்கவிகளோ படிக்கிற பேருக்கு அருட்சக்தியை ஊட்டுவதாக இருக்கிறது.

இவற்றைச் செய்த பெரியவர்கள் அநுபவ ஆனந்த நிலையில் தங்களை மறந்து பாடினதால் இவை ஈசன் அருளில் பாடிய அருட்கவிதான். "எனது உரை தனது உரையாக" என்றே சம்பந்தமூர்த்தி சுவாமிகள் சொல்கிறார். ஆசார்யாளும் "ஸௌந்தர்ய லகரியை" முடிக்கும்போது "அம்மா உன்னுடையதே யான வாக்குகளால் ஆன இந்த உன் ஸ்தோத்திரம்" என்கிறார். இவ்விதத்தில் அருட்கவியாய் இருப்பதோடு இவற்றைச் செய்த மகான்களே அநுக்கிரகமயமான அருளாளர்களாக இருப்பதால் இந்த ஸ்தோத்திரங்கள் "அருளால் பிறந்த கவி" யாகமட்டுமல்லாமல் நமக்கு அருளைச் செய்கிற கவியாகவும் இருக்கின்றன.

***ஊக்கத்துடனும் துணிவுடனும் எந்த ஒரு செயலையும் தொடங்க வேண்டும்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அருளாளர்கள் கவிதை பண்ண வேண்டும் என்பதே இல்லை. அருளையே நேராக வழங்கத்தெரிந்த பிறகு, அருளைத்தர வழியாக இருக்கிற கவிதையைப் பண்ண வேண்டும் என்பது இல்லையல்லவா? ஆனாலும் ஏன் கவிதை எழுதினார்கள் என்றால், அவர்களை நேரில் தரிசனம் செய்கிறவர்களுக்குத்தானே நான் சொன்ன அந்த அருள் கிட்டும்? சரீரம் போனாலும் அவர்கள் எப்போதும், சூட்சுமமாக அநுக்கிரகம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். என்றாலும், நம்மாதிரி ஜனங்களால் அதை கிரகிக்க முடியவில்லையே! பரமாத்மாவைக்கூட நாம் ஒரு ரூபத்தில் தானே பாவிக்கமுடிகிறது. ஆச்சாரியானையும் (ஆதிசங்கரர்) சம்பந்தமூர்த்தி சுவாமிகளையும் நேரில் தரிசனம் பண்ணினவர்கள் தரிசன மாத்திரத்திலே அருள்பெற்றிருப்பார்கள். ஆனால் அந்த தர்சனம் சாச்வதமாக இல்லையே. ஆச்சார்யாள் தர்சனம் முப்பத்திரண்டு வருஷங்கள் தான் கிடைத்தது. சம்பந்தர் தர்சனமோ அதிலேயும் பாதிதான். தங்களுடைய சரீரம் விழுந்த அப்புறம் வரப்போகிற சனங்களையும் விட்டுவிடக்கூடாது என்ற கருணையால்தான், அவர்களைப் போன்ற மகான்கள் தங்களுடைய அருளை எல்லாம் திரட்டி, அடக்கி அடைத்து வாக்காக்கி ஸ்தோத்திரங்களும், கீர்த்தனங் களும் பாடி வைத்திருக்கிறார்கள். அவை பின்னால் வருகிற எத்தனையோ தலைமுறை களுக்கும் சாச்வதமாக அநுக்கிரகம் பண்ணிக்கொண்டிருக்கின்றன. அதாவது ஈஸ்வர அநுக்கிரகத்தை அந்த மஹான்களுடைய அநுக்கிரகத்தின்மூலம் பெற்றுத்தருகின்றன.

அருளைத் தருகிற அருட்கவிதைபற்றி இன்னும் கொஞ்சம் சொல்லனும். பக்தியோடு கூட எந்த ஸ்தோத்திரத்தைச் சொன்னாலும், ஏன் உளறிக் கொட்டினாலும்கூட பகவானுடைய அருள் கிடைத்துவிடும். ஆனால் அப்படிப்பட்ட பக்தி உண்டாவதுதான் கஷ்டமாயிருக்கிறது. இந்த இடத்தில்தான் அநுக்கிரக சக்தியுள்ள அருட்கவிதைகள் நமக்கு ரொம்பவும் சகாயம் செய்கின்றன. என்னவென்றால் அந்தக் கவிதைகளே அவற்றைப் படிக்கிறபேருக்கு பக்தி பாவத்தையும் ஊட்டி விடுகின்றன. அப்பர் தேவாரம் என்றால், அவர் உருகி உருகிச் சொல்லியிருக்கிற வார்த்தைகளை நாம் சொல்கிறபோதே அவை நம்மை உருக்கி பக்திரஸத்தை ஊட்டிவிடுகின்றன.

அருட்கவியில் இன்னொரு தினிசு... இங்கே கவி என்பதைக் கவிதை என்ற அர்த்தத்திற் சொல்லுகிறேன். ஸமஸ்கிருதத்தில் கவி என்றால் கவிதை பண்ணும் ஆசாமியைத்தான் குறிக்கும். அவன் பண்ணுவது காவ்யம். அல்லது கவிதை. தமிழில் பண்ணுகிற ஆஸாமி, பண்ணப்படும் செய்யுள் இரண்டையும் கவி என்று சொல்கிறோம். பண்ணுகிறவனே இப்படி வாக்ரூபம் எடுத்துக்கொண்டு விட்டான் என்ற மாதிரி. அருட்கவியில் ஒரு தினுசைப்பற்றிச் சொல்லவந்தேன். அதாவது நமக்குப் போதிய பக்தி இருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றிக் கேள்வியில்லை. அது எப்படியானாலும் இருந்துவிட்டுப் போகட்டும். நம் பக்தியை வைத்து, அந்தக் கவிதை நமக்கு அநுக்கிரக பலன் தருவது, அல்லது நமக்குப் பக்தியையும் அதுவே உண்டாக்கி அருள்தருவது என்றெல்லாம் இல்லாமல் தன்னுடைய சப்த விஷேசத்தாலேயே, சொல்கிறவர்களுக்கு அருளைப் பெற்றுத் தந்து விடுவதாக ஒரு தினுசு உண்டு. நம்முடைய பக்தியைப் பொறுத்ததாக இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கவிதைகளின் சப்தங்களுக்கே திவ்ய சக்தி இருக்கும். நமக்கு விஷேசமாகப் பக்தி இருக்க வேண்டும் என்றில்லை. அந்தக் கவிதைக்கும் அர்த்த பாவம், உருக்கம், காவ்யரஸம் விசேசமாக இருக்கணும் என்றில்லை. ஆனாலும்கூட அந்த வார்த்தைகளின் ஒலிக்கே உள்ள சிறப்பால் அருளைக் கட்டிப்பிடித்து கொண்டுவந்து கொடுத்துவிட முடியும். மந்திரசக்தி என்பது அதுதான். மந்திரமயமான இப்படிப்பட்ட வாக்குகளை நாம் உணர்ச்சியே இல்லாமல், அர்த்தமே தெரியாமற் சொன்னாலும், திருப்பித் திருப்பிச் சொல்லி ஜபம் என்று பண்ணிவிட்டோமானால் அதன் சப்தங்களே, அவற்றில் உள்ள திவ்விய சக்தியால் பலவித அநுக்கிரகங்களைப் பண்ணிவிடும். அநேக மகான்களுடைய, அநேக ஸ்துதிகளில் அர்த்தபாவம், காவ்யரஸம், மனஸின் உருக்கம் முதலானவற்றினோடு கூடவே கூடவே இப்படிப்பட்ட மந்த்ர, சப்த விசேஷமும் சேர்ந்திருக்கிறது. சில சமயங்களில் அவர் களுடைய ஸ்துதிகளில் அர்த்த விசேஷத்தால் உத்தமமானது. வேறே, சப்த விசேஷத்தால் அருளைத் தந்து மந்த்ர மயமாய் இருப்பது வேறே என்று இருப்பதையும் பார்க்கிறோம்.

-தெய்வத்தின் குரல் ஆறாம் பகுதி. பக்கம் 615-619.

காஞ்சிப் பெரியவர்களின் விச்சிராந்தியான சிந்தனையில் வெளிவந்த கருத்துக்களைச் சைவ சமயிகள் மீளமீளப் படித்து உள்வாங்க வேண்டிய காலகட்டம் இது. ஏனெனில் சைவத்திருமுறைகளை ஓரம்கட்டிவிட்டு யாரோ எழுதிய பாடல்களைப் படிக்கும் காலம் இது. இத் திருமுறைகள், வேதசாரம், மந்திரங்கள், கடவுட் திருமேனிகள், இறையருளாற் பாடப்பட்டவை. என்பதைப் பலர் சொல்லியும் உதாசீனம் செய்கிறது இன்றைய, பழைய தலைமுறைகள். நால்வருமே சொல்கிறார்கள் இப் பாக்களை நாமாகப் பாடவில்லை. இறைவனே எம்மைப் பாடும்படி கட்டளை இட்டவன், அவன் ஆணையில். வெளிவந்தனவே இவை. சத்தியவாக்குகளும்கூட, பாடாமல் இருக்கமுடியாமல் பாடியவை இவை. அவர்களே தம் பாடல்களிற் குறிப்பிட்டுமுள்ளனர்.

ஞானசம்பந்தர் இறைவன் வாக்காகவே இப் பாடல்களை நான் பாடினேன் என்பதை திரு இலம்பயங் கோட்டூர் திருப்பதிகத்தில் குறிப்பிடுகிறார். அவர் பிரயோகித்த தொடர் "என துரை தனதுரையாக" என்பது

நீருளான் தீயுளா னந்தரத் துள்ளான்
நினைப்பவர் மனத்துளான் நித்தமா ஏத்தும்
ஊருளா னெனதுரை தனதுரையாக
ஒற்றை வெள் ளேறுகந் தேறிய வொருவன்

-அடங்கன்முறை 826.

இறைவனது உரையே எனது பாடல் என ஆணையிட்டுச் சொல்கிறார் சீர்காழிப் பிள்ளை. அப்பர் பெருமானும் தான் தான் பாடினேன் என்று பெருமைப்படாமல் இறைவனே என்னைப் பாட வைத்தான் எனப் பேசியுள்ளார்.

கந்தமலர்க் கொன்றையணி சடையான் தன்னை
கதிர்விடுமா மணிபிறங்கு கனகச் சோதிச்
சந்தமலர்த் தெரிவையொரு பாகத்தானைச்
சராசரநற் றாயானை நாயேன் முன்னைப்

*நல்ல நண்பர்கள் துயரத்தை எளிதாக்குகிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்த மறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூல் தமிழ்மாலை பாடுவித்தென்
சிந்தைமயக் கறுத்ததிரு அருளி னானைச்
செங்காட்டங் குடிதனிற் கண்டேன் நானே.

-அப்பர் தேவாரம். 6:84.4.

"அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ்" பாடுகென்றார் தூமறை பாடும் வாயார் என்ற பெரியபுராண வாக்கு. இறைவன் சொல்ல சுந்தரர் பாடினார் என்ற உண்மையைத் தருகிறது. இவ்வண்ணமே மாணிக்கவாசகர் "நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை" எனக் குறிப்பிடுகிறார். இதில் இருந்து இவையெல்லாம் இறைவனருளாற் பாடப்பட்டவை என்பதே உண்மை.

வடமொழியில் எழுந்த சிறந்த பாரகாவியம் பற்றி, பாஷியம், வியாக்கியானம் பல எழுந்துள்ளன. இன்றும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். திருநாலாயிரத்துக்குப் பலர் உரை செய்துள்ளனர். அவை ஆறாயிரப்படி, எண்ணாயிரப்படி, இருபத்துநாலாயிரப்படி, முப்பத்திரண்டாயிரப்படி, பதினாயிரப்படி என்றெல்லாம் வழங்கப்படும். திருவாசகத்துக்குப் பலர் உரை செய்தனர். நாமறிய சுப்பிரமணியபிள்ளை, இராமநாதன், வரதராஜன், தண்ட பாணிதேசிகர், நவநீத கிருஷ்ணபாரதியார், பண்டிதர் அருளம்பலவனார் உரை செய்துள்ளனர். மறைமலையடிகள், திருவாசகத்தின் முதல் நான்கு நெடும் பாடல்களுக்கு விளக்கவுரை தந்துள்ளார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார். சதகம் நீத்தல் விண்ணப்பம், திருவெம் பாவைக்கு சிறப்புரை எழுதியுள்ளார். இவ்வாறு வேறு ஆய்வு நூல்களும் வந்துள்ளன. இனியும் வரலாம். இதில் இருந்து திருமுறைகளின் மேன்மை விளங்குகிறது. ஆனால் இன்றைய பசளைப்பாட்டுக்கள் வெறும் பண்டாரப் பாட்டுக்களே. அருமருந்தொரு பெருமருந்து என முத்துத்தாண்டவர் பாடினார். எனவே அவனருளாலே அவனைப் பாடிய பாடல்களையே நாம் பாராயணம் பண்ணவேண்டும் என்ற உண்மையை உணர்ந்து நம் திருமுறைகளைப் பேணுவோமாக.

பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற அழகனே. -தாயுமானவர்.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மே | 03 | சித் | 20 | வெள்ளி | திருநாவுக்கரசர் |
| மே | 08 | சித் | 25 | புதன் | சிறுத்தொண்டர் |
| மே | 10 | சித் | 27 | வெள்ளி | மங்கையற்கரசியார் |
| மே | 25 | வை | 12 | சனி | திருஞானசம்பந்தர் |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| யூன் | 10 | வை | 28 | திங்கள் | நமிநந்தியடிகள், சேக்கிழார் |

*கால் தடுமாறினால் சமாளித்துக்கொள்ளலாம். நாக்கு தடுமாறினால் மீளவே முடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 83

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 மரத்திற்கு ஒரு போதும் நீரூற்றி வளர்த்திடாமல்
மருந்திற்கு தேவையெனில் மரத்தோடு முறித்திடல்போல்
வருந்துவோர்க்கு ஒருபோதும் வருத்தத்திற் குதவிடாமல்
விருந்திற்கு அழைத்திடுதல் மரம்முறிக்கும் செயல்போலாம்.

02 நான் போட்ட தடத்திலொன்று என்னையே வீழ்த்திடலும்
நான்போட்ட முள்ளிலொன்று என்காலைக் குற்றிடலும்
தற்செயலாய் நடக்கின்ற சம்பவங்கள் என்றன்று
விதைத்ததை அறுத்திடும் வினைப்பயனே அதுவாகும்.

03 பெரிதாக ஒன்றை நாங்கள் பேசிடுதல் பெரிதேதான்
சிறிதாக ஒன்றை நாங்கள் பேசிடுதல் சிறிதே தான்
பெரிதாகப் பேசியது வெறும் பேச்சோடு முடியுமானால்
சிறிதாகப் பேசினாலும் அது செயலானால் பெரிதேதான்.

04 நீர்நிலைகள் வெப்பத்தால் கொதித்தாவி யானால்தான்
பார்முற்றும் குளிரப்பின் பருவமழை பெய்தல் போல்
மாணவரும் கற்றலுக்காய் கடும்முயற்சி எடுத்தால்தான்
தேனமுத வாழ்வு பின்னர் தேடிவந்து வளம்படுத்தும்.

05 உலைக்களத்து வெப்பத்தில் உருகியே ஓடினால் தான்
வலக்கரத்து வளையல்களாய் தங்கமது தரம் பெறல்போல்
மாணவரும் கற்றலுக்காய் கடும் முயற்சி எடுத்தால் தான்
விலைமதிக்க முடியாத நிலைக்குப்பின் உயர்ந்திடலாம்.

06 வெள்ளியைத் தேடலாம் செவ்வாயைத் தேடலாம்
சந்திரத் தரையிலே சந்தித்தும் பேசலாம் ஆனாலும்
இறைவனார் கீறிய கோடொன்று உள்ளது
அதையும் நாம் தாண்டலாம் தாண்டலே அழிவாகும்.

*அறிவின்மை இழிவானது. அதைவிட இழிவானது அறிய மனமில்லாமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 அன்பினால் இறைவனிடம் அருள்பெறுவோம் என்போரிலும்
அடாவடியால் அதைப் பெறுவோம் என்போரே அதிகமாகும்
ஆத்மீக வழிவிடுத்து ஆத்திரத்தின் வழிநடந்தால்
இறையருள் தேடிவரும் சாத்வீகவழி மூடிவிடும்.

08 முட்டைக்கு கோழி தரும் வெப்பத்தின் தன்மையால்தான்
குஞ்சுகள் பலபொரித்து சிறகடித்துப் பறந்திடல்போல்
மாணவரும் ஆசிரியர் அரவணைப்பில் நகர்ந்தால்தான்
சித்திகள் பலபெற்றுச் சிறகடித்துப் பறந்திடலாம்.

09 சூரியனின் வெப்பத்தை தானேற்கும் தன்மையால்தான்
சந்திரனின் குளிர் நிலவில் நாம் காயக் கிடைத்தல் போல்
குருத்துவத்தை மருத்துவமாய் மாணவரும் ஏற்றால் தான்
பெருத்ததொரு வாழ்வில் பின் பெருமைபல பெற்றிடலாம்.

10 சுரங்கத்தின் வெப்பத்தைச் சுதாகரித்துக் கொள்வதுதான்
தங்கத்தை அகழ்ந்தெடுத்து தரையிலிட உதவுதல் போல்
மாணவரும் இன்னல்களைத் தாங்கித் தாம் கற்றால்தான்
வான்புகழ் கொண்டிங்கு வரலாறு படைத்திடலாம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

| **காசுக்கட்டளை** | **காசோலை** |
|---|---|
| செந்திவேல் மோகனதாஸ் | செந்திவேல் மோகனதாஸ் |
| சந்நிதியான் ஆச்சிரமம், | க.இல – 7342444 |
| தொண்டைமானாறு. | இலங்கை வங்கி, |
| தொ.இல – 0213219599, 0212263406 | பருத்தித்துறை. |

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*தெரியாததைத் தெரியாது என்று சொல்வதில் விடாப்பிடியாக இரு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திராட்சம்

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

ஆதியும் அந்தமுமில்லா அருட்பெரும் சுடராகிய சிவபெருமானின் திருக்கண்களில் இருந்து தோன்றிய உருத்திராட்சத்தின் பெருமையை நாம் விபரித்துக் கூறமுடியாது.

இவ் உருத்திராட்ச மணிகள் ருத்திரனின் விழிகளில் இருந்து தோன்றியதால் உருத்திராட்சம் என அழைக்கப்படுகின்றது. உருத்திராட்சத்துக்கு மறுபெயர் அக்குமணி, கண்டிகை எனவும் கூறுவர். பாவங்களைக் கண்டிப்பதால் கண்டிகை என அழைக்கின்றனர்.

திரிபுல அசுரர்களால் துன்புறுத்தப்பட்ட தேவர்கள் கயிலையங்கிரி சென்று தங்களைப் பாதுகாக்க வேண்டுமென முறையிட்டனர். கருணையே வடிவான கயிலைநாதன் அவர்கள்மேல் திருவுளங்கொண்டு நோக்க, உருத்திரமூர்த்தியின் சூரிய, சந்திர, அக்கினி வடிவான முக்கண்களில் இருந்து இரக்கத்தால் கண்ணீர் சிந்த அதில் இருந்து உருத்திராட்ச மரம் உண்டாயிற்று எனப் புராணங்கள் கூறுகின்றன. இதற்கு மற்றுமொரு வரலாறு கூறப்படுகின்றது.

கயிலையங்கிரி நாதன் திரிபுரத்தை எரிப்பதற்கு முன்பு "அகோரம்" என்று கூறப்படும் அதி உக்கிர தவத்தை மேற்கொண்டு ஆயிரம் திவ்விய வருடங்கள் மோனத்தவநிலையில் இருந்து, ஒரு சுப வேளையில் விழித்தபோது அவருடைய முக்கண்களில் இருந்து நீர்த்திவலைகள் தெறித்து வீழ்ந்தனவாம். அந்தத் துளிகள் பூமியில் வீழ்ந்து உருத்திராட்ச விருட்சங்களாக மாறியதாகவும் அடியவர்கள் கூறுவர்.

கயிலைநாதனின் வலது கண்ணிலிருந்து (சூரிய நேத்திரம்) உண்டானவை பன்னிரண்டு வகையான உருத்திராட்சங்கள், அவைகள் கபில நிறம் உடையனவாகும்.

ஈசனுடைய இடது கண்ணிலிருந்து (சோம நேத்திரம்) உண்டானவை பதினாலு வகையான உருத்திராட்சங்கள், அவைகள் வெண்மை நிறம் உடையனவாகும்.

சர்வேஸ்வரனுடைய நெற்றிக்கண்ணிலிருந்து (அக்கினி நேத்திரம்) தோன்றியவை பத்து வகை உருத்திராட்சங்கள். அவைகளின் நிறம் கறுப்பாகும்.

உருத்திராட்ச மணிகளில் ஒன்று தொடக்கம் பதினான்கு வகையிலான முகங்கள் உள்ளன.

## உருத்திராட்ச முகங்கள்

| முகங்கள் | ரூபம் | பலன் |
|---|---|---|
| ஏக முகம் | சிவன் | பிரம்மகத்திதோஷம் |
| இரு முகம் | சிவசக்தி | பசுவதை |
| மூன்று முகம் | அக்கினி | பெண் தோஷம் |
| நான்கு முகம் | பிரம்மா | மனித வதை |

*தன் உள்ளத்தின் நிலையைக் கவனியாமல் பிறரைப்பற்றிக் கவலைப்படுபவனுக்கு சுகமில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஐந்து முகம் | காலாக்கினி | உணவுக் குற்றம் |
| ஆறு முகம் | கார்த்திகேயன் | கல்வியறிவு, புத்திதரும் |
| ஏழு முகம் | ஆதிசேடன் | ஐஸ்வரியம், ஞானம் கிடைக்கும் |
| எட்டு முகம் | மகா கணபதி | திருட்டு, பெண் பாவம் அகலும் |
| ஒன்பது முகம் | கால பைரவர் | புத்தி முத்தி கொடுக்கும் |
| பத்து முகம் | மகா விஷ்ணு | பஞ்சபூத கிரக கோளாறு நீங்கும் |
| பதினொரு முகம் | ருத்திரன் | அசுவமேத யாக பலன் |
| பன்னிரண்டு முகம் | ஆதித்ய ரூபம் | கோடிமகா தான பலன் |
| பதின்மூன்று முகம் | சண்முகம் | இஷ்டசித்தி நன்மை வாய்க்கும் |
| பதின்நான்கு முகம் | பரமேஸ்வரன் | சகல பலன் மோட்ஷம் |

உலக நன்மைக்காகவே உருத்திராட்சத்தை ஈசன் படைத்ததாகத் தேவர்களும் முனிவர்களும் சிவகணங்களும் கூறுகின்றனர். உருத்திரன் + அட்சம்= உருத்திராட்சம் ஆகும். அட்சம் என்றால் கண் என்று பொருள், உருத்திராட்சத்தில் மின்சக்தியுள்ளது. அதை அணிந்துகொள்வதால் அதன்மீது பட்ட நீர் எம்மேற்படுவதால் உடல்நலம் உண்டாகும்.

உருத்திராட்சம் அணிந்துதான் பூசை செய்யவேண்டும். உருத்திராட்சம் அணியாது பூசை செய்வது நலம் அன்று.

பூணாமல் கண்டியினை பூசை புரிவார் - பலத்தை
காணார் எனவே கழலுமறை - நாணாதே
பூண்டு சிவபூசை புகுந்து - மேற்புரத்துக்
காண்பிருப்பார் ஈசன் கழல்.

-உருத்திராக்க வசிட்டம்.

சைவப் பெருமக்களுக்கு திருநீறு, உருத்திராட்சம், ஐந்தெழுத்து என்ற மூன்றும் இன்றியமையாதனவாகும்.

எமது யாழ்ப்பாணத்தில் பிறந்த யோகர் சுவாமிகள், தனது "நற்சிந்தனை" என்னும் நூலில் "அக்குமணி அணி என்றான் எங்கள் குருநாதன், ஐந்தெழுத்தை ஓதென்றான்" எனப்பாடி உருத்திராட்சத்தின் பெருமையை விளக்கியுள்ளார்.

நூற்றியெட்டு, ஐம்பது, இருபத்தேழு கொண்ட உருத்திராட்ச மணிகளை மாலையாக அணிவதால் உயர்ந்த வாழ்வும், அசுவமேதயாகப் பலனும், தலைமுறை தீவினைகள் நீங்கிட நல்வாழ்வும் கிடைக்கும்.

ஒரு முகமுள்ள உருத்திராட்சமும், பதினான்கு முகமுள்ள உருத்திராட்சமும் கிடைப்பது மிக அரிதாகும். உருத்திராட்சத்தை அணிந்துகொண்டு நாம் எந்தவொரு தெய்வகாரியத்தைச் செய்தாலும் அதற்கு மகத்தான பலன் உண்டு என்று அடியார்கள் கூறுகின்றனர்.

*உணர்ச்சிகள் அடக்கி ஆளப்படவேண்டியவை. அவைகளோடு நியாயம் பேசாதீர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபெருமான் முருகனுக்கு அருளிய பொன்மொழிகள்

தேவர்களில் சிறந்தவர் மகா தேவர்
புருஷர்களில் சிறந்தவர் விஷ்ணு
கிரகங்களில் சிறந்தவர் சூரியன்
குதிரைகளில் சிறந்தது உச்சை சிரவஸ்
தேவிகளில் சிறந்தவர் கௌரிதேவி
அதுபோல மணிகளில் சிறந்தது உருத்திராட்சம்.

உருத்திராட்சத்தைத் துதித்து, அணிந்து, உருத்திராட்சத்தையே தானம் செய்வதான புண்ணியபலனை அளவிட முடியாது.

ஒருவன் தன் இறுதிக்காலத்திலாவது உருத்திராட்சத்தை அணிந்தபடி இறந்தால் அவன் பிறவிப்பிணி நீங்கி சிவத்தன்மையடைகின்றான் என்று, ஈசன் உருத்திராட்சத்தின் பெருமைகளை விளக்குகின்றார்.

எல்லாவிதமான பாவங்களும் உருத்திராட்சம் அணிவதால் அழிந்துபோகுமென்று பகவான் மகாவிஷ்ணு நாரதருக்குக் கூறியுள்ளார்.

பாவம் செய்தவனாக இருந்தாலும், உருத்திராட்சத்தை அணிபவன் அந்தப் பாவத்திலிருந்து விடுபடுவான் என்கிறது ஜாபால உபநிடதம். ஆகையால் ஒரு உருத் திராட்சத்தையாவது பக்தி சிரத்தையோடு அணிவதால் சிவ உலகில் பூசிக்கப்படும் தன்மையை அணிபவர் அடைவார் என்கிறது வேதங்கள்.

பாவங்களை நீக்கும் பரமநாதராய், மகிழ்ச்சியைத் தருவதில் மகா சிவமாய், நன்மைகளை அருள்வதில் சம்புவாய், பிணிகளையும் துன்பங்களையும் நீக்குவதால் தயாபரனாய் விளங்கும் எம்பெருமானின் திருக்கண்களில் இருந்து கிடைக்கப்பெற்ற உருத்திராட்சத்தை அணிந்து சிவத்தன்மை பெறுவோமாக!

---

## பக்தனும் இறைவனும்

ஒரு பக்தன் இறைவனில் மிக நம்பிக்கை உடையவன். எந்த விடயங்கள் செய்யும்போதும் இறைவனுக்கு அர்ப்பணித்தே தனது நற்காரியங்களைச் செய்து வருவது வழக்கம். ஒரு காலகட்டத்தில் பக்தன் துன்பமடைய நேரிட்டது. அந்நாட்களில் ஒருநாள் இறைவனைக் கனவில் பக்தன் கண்டபோது, நான் சந்தோ'ம் அனுபவிக்கும்போது கடற்கரையில் எமது இருவரினதும் பாதச்சுவடுகள் காண்பதை பலமுறை கண்டு மகிழ்ந்திருக்கின்றேன். ஆனால் இப்பொழுது நான் துன்பம் அனுபவிக்கும்போது ஒரு பாதச் சுடுவகள் மட்டும்தானே காணப்படுகின்றது. உங்களது பாதச் சுவடுகளைக் காணவில்லையே. நான் துன்பமனுபவிக்கும்போது நீங்கள் என்னுடன் கூடவரவில்லையே என்று பக்தன் கனவில் கவலையுடன் இறைவனுக்குக் கூறி முறையிட்டான்.

அதற்கு இறைவனும் கனவில் இல்லை மகனே! நீர் துன்பமனுபவிக்கும்போது நான் உன்னைச் சுமந்து வந்தபடியினால் உன் சுவடுகள் தெரியவில்லையென்று கூறி மறைந்தார். பக்தனும் தனது தவறை உணர்ந்து இறைவனை வணங்கி மீண்டும் நித்திரையானார்.

-வி.ரி. வேலாயுதம்-

*பிரார்த்தனை என்பது கடவுளிடம் ஏதாவது கேட்பதல்ல. அது ஆன்மாவின் ஏக்கமாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணம்

## சூரபன்மனது ஆட்சிக்காலத்தில் அவனிடத்தில் தொழிற்பட்ட ஊனக்கண் - ஞானக்கண்

– திரு செ. சிவபாதம் அவர்கள் –

ஆன்மா திரோதான சக்தியின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி ஆணவ முனைப்பில் விருப்பு வெறுப்படைந்து எனது நான் என்று கூறி வாழுதல் பெத்தநிலை எனப்படும். அப்போது அவரிடத்தில் தொழிற்படும் அறிவு சிற்றறிவாகும். இவ் அறிவுடன் தொடர்புடைய கண் ஊனக்கண்ணாகும். ஊனக்கண் என்பது குற்றம் பொருந்திய கண்ணாகும். இதை செயல்முறையில் காட்டுவது கந்தபுராணமாகும். இதனை பின்வருமாறு காண்போம்.

முருகப்பெருமானால் தூதுவராக அனுப்பப்பட்ட வீரவாகுதேவர் மகேந்திர நகரத்திலுள்ள மாளிகையில் வீற்றிருந்து அரசாட்சி செய்யும் சூரபன்மனுக்கு முன்பாக வந்து முருகப்பெருமானால் தமக்காக அங்கே அனுப்பப்பட்ட ஆசனத்திலிருந்து சூரபன்மனைப் பார்த்து முருகப்பெருமானின் பதி இலக்கணம் பலவற்றைக் கூறி பின்வருமாறு கூறுவார். யான் முருகப்பெருமானால் உம்மிடத்தில் அனுப்பப்பட்ட தூதுவன். அப்பெருமான் இவ் வார்த்தையை உமக்கு சொல்லுமாறு எமக்குக் கூறியுள்ளார். இதனைக் கேட்பாயாக. அரசனே நீங்கள் அறநெறியைக் கடைப்பிடித்து சயந்தன் முதலிய தேவர்களை சிறைச் சாலையிலிருந்து நீக்கி இந்த இந்திரச் செல்வத்துடன் உமது அரசியலைச் செய்து கொண்டிருப்பாய் என்றும் இதற்கு நீ மறுப்புத் தெரிவிப்பாயானால் அப்பெருமான் உனது நால்வகைப் படைகளையும் சுற்றத்தாரையும் விரைவாக அழித்து உன்னையும் வேலால் அழிப்பதற்கு விரைவாக நாளைக்கு இங்கு வருவார் இது உண்மை என்று கூற, இவ் வார்த்தையைக் கேட்ட சூரபன்மன் கோபமடைந்து தமது ஊனக்கண்ணால் முருகப் பெருமானைப் பார்த்து வீரவாகு தேவருக்கு பின்வருமாறு கூறுவார்.

தூதுவனே என் தம்பியாகிய தாரகாசுரனைக் கொன்ற வேலையுடைய அப்பாலன்மீது யான் போர்செய்ய வர நினைத்தேன். அப்போது பலர் பால் மணங்கமழும் வாயையுடைய பாலனோடோ அரசனாகிய நீ போர் செய்வது பிழையென்று தடுத்தனர். ஆதலால்தான் யான் போர் செய்ய வரவில்லை என்பதை அறிவாய்.

தூதுவனே சிவபிரானுடைய கண்களிலிருந்து நேற்று வந்த சிறுவனோ என்னை எதிர்த்து போர் செய்து வெல்லத்தக்கவன் நீ அறிவில்லாதவனாதலால் நல்லறிவு சிறிதுமில்லாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தையின் சிறு வார்த்தைகளைக் கேட்டு தூதனாய் இங்கே வந்தாய் ஆதலால் இங்கிருந்து தப்பிப் போவாயாக என்று கூறினான்.

## சூரபன்மன் அமைச்சியற் படலம்

சூரபன்மன் ஒருநாள் தான் அரசு வீற்றிருக்கும் மண்டபத்துக்கு மந்திரிமார்களை அழைத்து ஆலோசனை செய்தான். அப்போது மந்திரிமார்களும் பிள்ளைகளும் தங்கள் அறிவாற்றலுக்கமைந்த தீய அறிவுரைகளைக் கூறினார்கள். இதனை அவதானித்த சிங்கமுகாசுரன் கவலையடைந்து சபையில் எழுந்து நின்று சூரபன்மனைப் பார்த்து எனது அண்ணனே என்று கூறி பின்வருமாறு கூறுவார். நீ தேவர்களுக்கு துன்பம் செய்வதால் வரும் இன்பத்தை விரும்பி பின்னே வரும் துன்பத்தை நினையாது வருந்துகின்றாய். இந்திரன் முதலிய தேவர்கள் யாவரையும் கடலிலுள்ள மீன்களைப் பிடித்துக்கொண்டு வரும்படி அனுப்பினாய். இது உமக்கு நல்லதா. இத்துடன் இந்திரனது அரசை அழித்து அவரது நகரவளங்களையும் அழித்து சயந்தன் முதலிய தேவர்களை சிறையில் அடைத்து வைத்துத் துன்பப்படுத்துகின்றாய். ஆதலால் அண்ணனே இப்போதே தேவர்களைச் சிறையிலிருந்து நீக்கி முருகப்பெருமானிடம் அன்புடையவனாக உமது அரசியலை தரும வழியில் செய்துகொண்டிருப்பாய் என்றுகூற, சூரபன்மன் இவற்றைக் கேட்டு கோபமடைந்து தமது ஊனக்கண்ணால் முருகப்பெருமானைப் பார்த்து சிங்கமுகாசுரனுக்கு பின்வருமாறு கூறுவான்.

காற்றினால் தள்ளப்பட்டு அக்கினியால் சுடப்பட்டு கங்கை நதியினால் மோதப்பட்டு சரவணப்பொய்கையில் சென்று அலைக்கப்பட்டு வேற்றுத் தாய்மாருடைய முலைப் பாலை குடித்து அழுது விளையாடித் திரிந்த நேற்றுப் பிறந்த குழந்தையையோ முதற் கடவுளென்று நினைத்தாய்.

> காற்றில் தள்ளுண்டு நெருப்பினில் சூடுண்டு கங்கை
> ஆற்றில் தாக்குண்டு சரவணப் புக்கலை யுண்டு
> வேற்றுப் பேர்முலை யுண்டழுதே விளையாடும்
> நேற்றைப் பாலனையோ பரம்பொருளென நினைத்தாய்.

எனது தம்பியே யான் அழிவில்லாத வரமுடையவன். நீ கூறும் ஆறுமுகன் சிறியவன் ஆதலால் யான் அவனை வெல்லுவேன் இது உண்மை சிவபெருமான் வந்தாலும் அவரை எதிர்த்துப் போர் செய்வேன் ஆதலால் இந்த சிறு வார்த்தைகளை எமக்கு சொல்லாது விடுவாய் என்றான்.

## ஞானக்கண்

சூரபன்மன் முருகப்பெருமானோடு போர் செய்தபோது தனது சகோதரர்கள் பிள்ளைகள் மந்திரிமார் நால்வகைப் படைகள் யாவற்றையும் இழந்து தனித்தவனாக நின்று பல பல மாய வடிவங்களையெல்லாம் எடுத்து போர்செய்ய அப்போது முருகப்பெருமான் தமது

*பார்வை நேராக இருந்தால் பாதையில் தடையிருக்காது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புகளினாலே இம் மாய வடிவங்களையெல்லாம் அழித்து சூரபன்மனது முகத்தைப் பார்த்து பின்வருமாறு கூறுகிறார். சூரனே நீ முகிலுக்கிடையில் தோன்றி மறைகின்ற மின்னலைப்போல இந்த யுத்தகளத்தில் எமக்கு முன்பாக பல மாய வடிவங்களை எடுத்தாய். இவற்றையெல்லாம் நாம் இப்போதே அழித்தோம். இனி எமது எப்போதுமுள்ள திருப்பெரும் வடிவத்தை காட்டுவோம். இதனை வணங்குவாயாக என்று கூறித் திருவருள் செய்தார்.

**திருப்பெரு வடிவம்**

திருப்பெருவடிவம் என்றால் சண்முகப்பெருமான் பிரபஞ்சத்தையே தமது திருமேனியாகக் கொண்டுள்ளார். இந்த சடசித்துப் பிரபஞ்சப் பொருட்கள் அனைத்தையும் தமது திருமேனியில் வெளிப்படுத்தித் தனது அன்பர்களுக்கு காட்டுவதே திருப்பெருவடிவமாகும்.

சடம் என்பது அறிவில்லாத பொருட்கள். சித்து என்பது அறிவுடைய உயிர்கள். வெளிப்படுத்தி- உருவகப்படுத்தி.

முதலும் முடிவும் இல்லாத இத் திருப்பெருவடிவத்தை சூரபன்மன் பார்த்து பயமடைந்து அதிசயித்து நின்றான். அப்போது முருகப்பெருமான் சூரபன்மனுக்கு தனது திருவருள் பார்வைமூலம் அவனது பசு கரணங்களை பதிகரணங்களாகவும் சிற்றறிவை ஞான அறிவாகவும் ஊனக்கண்ணை ஞானக்கண்ணாகவும் மாற்றி தமது திருவருளின் கட்டுப்பாட்டுக்குள் அடக்கியதும் சூரபன்மன் தமது ஞானக்கண்ணால் முருகப்பெருமானைப் பார்த்து பின்வருமாறு கூறுவான்.

ஆயிரம் கோடி மன்மதர்களது அழகெல்லாம் திரண்டு ஒன்றாகக் கூடி வந்தாலும் அவ்வழகு சண்முகப்பெருமானது திருவடிகளில் அமைந்த அழகுக்கு ஒப்பாகாது என்று சொன்னால் இப் பழையோனான சண்முகப்பெருமானது திருமேனியின் உருப்புகட்கெல்லாம் யார்தான் உவமை கூறமுடியும். (முடியாது)

ஆயிரம் கோடி காமர் அழகு எலாம் திரண்டு ஒன்றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாம் சரணம் தன்னில்
தூயநல் எழிலுக்கு ஆற்றாது என்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற்கு எல்லாம் உவமையார் வகுக்க வல்லார்.

முன்பு ஒருநாள் தூதுவனாக எம்மிடத்தில் வந்த வீரவாகு தேவர் வேலாயுதத்தை திருக்கரத்திலே தாங்கிய சண்முகப்பெருமானை விருப்பு வெறுப்பில்லாத சிவபெருமானென்றே சொன்னார். அப்போது அவர் கூறியவற்றையெல்லாம் யான் உண்மையென நம்பவில்லை. இப்போது பார்க்கும்போது இச் சிவகுமாரன்தான் சிவபெருமான் என்ற உண்மையைக் கண்டேன்.

ஒற்று எனமுன்னம் வந்தோன் ஒருதனி வேலோன் தன்னை
பற்று இகல்இன்றி நின்ற பராபரமுதல்வன் என்றே சொற்றனன்
சொற்ற எல்லாம் துணிபு எனக் கொண்டிலேன் இற்றை
இப்பொழுதில் ஈசன் இவன் எனும் தன்மை கண்டேன்.

*இருட்டைச் சபித்துக்கொண்டிருப்பதை விட்டுவிட்டு ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றுங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிய மயில் வாகனத்தின்மீது எழுந்தருளிய இச் சிவகுமாரனை அந்நாளில் சிற்றறிவுடைய சிறுவனென்றே யான் நினைத்தேன். இவருடைய உண்மை நிலையை எம்மால் அப்போது அறியமுடியவில்லை. இப்போது இவரை பார்க்கும்போது பிரமா விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்களுக்கெல்லாம் மூலகாரணமாயுள்ள சிவபெருமான்தான் இச் சிவகுமாரன் என்பதை இப்போதுதான் அறிந்தேன்.

கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய குமரன் தன்னை
பாலன் என்று இருந்தேன் அந்நாள் பரிசு இவை உணர்ந்திலேன்
யான் மால் அயன் தனக்கும் ஏனை வானவர் தமக்கும்
மூலகாரணமாய் நின்ற மூர்த்தி இம் மூர்த்தி அன்றோ.

சூரபன்மன் இப்படியாக முருகப்பெருமானை வாழ்த்தி வணங்கி நிற்கும்போது சண்முகப் பெருமான் தமது திருப்பெரும் வடிவத்தை மாற்றி மீண்டும் இந்திரனாகிய மயில்வாகனத்தில் எழுந்தருளி சூரபன்மனுக்குக் கொடுக்கப்பட்ட ஞான அறிவையும் ஞானக் கண்ணையும் மாற்றி மறுபடியும் அவனை சிற்றறிவுடையவனாகவும் ஊனக்கண்ணுடையவனாகவும் மாற்றி அமைத்தார்.

**சிவஞானபோதம் 9ஆவது சூத்திரம்**

ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணில் சிந்தைநாடி

என்று கூறுவதை சிந்திப்போம்.

---

## மனிதரில் காணப்படும் மிருகக் குணங்கள்

*வஞ்சனையாலும் சூதினாலும் சமயத்திற்கேற்ப பலவித கபடங்கள் செய்து ஜீவிப்பவன் - நரி.*

*ஊக்கமில்லாமல் ஏதேனுமொன்றை நினைத்துக்கொண்டு மனம் சோர்ந்து தலை கவிழ்ந்து உட்கார்ந்திருப்பவன் - தேவாங்கு.*

*தர்மத்திலும் புகழிலும் விருப்பமில்லாமல் அற்ப சுகத்திலே மூழ்கி இருப்பவன்- பன்றி.*

*சுதந்திரத்திலே இச்சையில்லாமல் பிறருக்கு பிரியமாய் நடந்துகொண்டு வயிறு வளர்ப்பவன்- நாய்.*

*பொருளை அறியாமல் முன்னோரின் சாஸ்திரங்களை திரும்பத் திரும்ப வாயினால் சொல்லிக்கொண்டு இருப்பவன் - கிளிப்பிள்ளை.*

*பிறரது அக்கிரமத்தை நிறுத்த முயலாமல் தனது மந்த குணத்தால் பொறுத்துக்கொண்டு இருப்பவன் - கழுதை.*

*தான் சிரமப்படாமல் பிறர் சொத்தை அபகரித்து உண்பவன் - கழுகு.*

-இ. குமாரகுலசூரியன்-

*ஏதையும் திட்டமிடுவது மனிதன், நிறைவேற்றி வைப்பது இறைவன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| செ. கவிதா | லண்டன் (வல்வெட்டி) | 15000. 00 |
| சி. லக்ஷ்மன் | பருத்தித்துறை | 10000. 00 |
| டனாஸ் | லண்டன் | 15000. 00 |
| சுசீலா நகை மாடம் | பருத்தித்துறை | தேங்காய், 1மூடை அரிசி |
| சி. தங்கவடிவேல் (சிற்றி வெதுப்பகம்) | தும்பளை | 1மூடை மா |
| இ. நிதர்சன் | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| கோ. அஸ்வின் | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| கோ. அக்ஷயா | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| கோ. ஐஸ்வரியா | ஆனைக்கோட்டை | 1000. 00 |
| அ. விஸ்வநாயகி | பரந்தன் | 5000. 00 |
| J. சர்வித், J. சஞ்ஜித் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| சு. பகீர | கனடா | 25000. 00 |
| சு. மஞ்சுளா, சு. சர்மினி, சு. துஸ்யந்தி | பிரான்ஸ் | 15000. 00 |
| லீலாவதி குடும்பம் | கனடா | 20000. 00 |
| திரு தனராசா குடும்பம் | மானிப்பாய் | மரக்கறி, 2புட்டி அரிசி |
| ச. பிறேமச்சந்திரன் நினைவாக | மானிப்பாய் | மரக்கறி 2புட்டி அரிசி |
| இ. அருணசொருபன் | நல்லூர் | 1000. 00 |
| ச. பவனிதன் | கைதடி | 1000. 00 |
| க. சுபாங்கன் | மயிலங்காடு | 10000. 00 |
| ஜெ. பத்மினி | யாழ்ப்பாணம் | பருப்பு, 1மூடை அரிசி 15000. 00 |
| ம. சிவாங்கி | சண்டிலிப்பாய் | 1000. 00 |
| திரு பிரசன்னா குடும்பம் | நெல்லியடி | 10000. 00 |
| இலட்சுமி நினைவாக | கரவெட்டி | 2000. 00 |
| ச. கனகம்மா | சிறுப்பிட்டி | 2000. 00 |
| க. கிளி | பத்தமேனி | 2000. 00 |
| வ. கதிர்காமநாதன் | ஊரெழு | 2000. 00 |
| அ. தனேஸ்வரி | பண்டத்தரிப்பு | 10000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| R. ராஜேந்திரன் | சுவிஸ் | | 5000. 00 |
| வி. ஸ்ரீகாந்தராஜா | அளவெட்டி | | 1000. 00 |
| திரு வசந்தகுமார் குடும்பம் | கனடா | | 5000. 00 |
| ம. முரளிகிருஸ்ணன் | கரவெட்டி | | 10000. 00 |
| கு. ஜீவதாஸ் | பண்டத்தரிப்பு | | 5000. 00 |
| க. பிரணவன் | நீர்வேலி | | 1000. 00 |
| ஜெ. மயூரன் | அளவெட்டி | | 1000. 00 |
| திரு சிவபாலன் மூலம் ஆ. ஞானஅருட்கரசி | கோண்டாவில் | | 10000. 00 |
| சு. மயூரன் | அச்செழு | | 5000. 00 |
| K. டென்சிகா | கொழும்பு | | 2000. 00 |
| T. சுரேஸ் | வவுனியா | | 2000. 00 |
| K. தியாகராஜா | கந்தர்மடம் | | 10000. 00 |
| திரு முருகவேள் | கொழும்பு | | 2000. 00 |
| சோ. சுகிர்தராஜன் | யாழ்ப்பாணம் | | 10000. 00 |
| பொ. சண்முகவடிவேல் | தாவடி | | 20000. 00 |
| அக்ஷயா, ஷாம், மலர் } | சுவிஸ் | | 5000. 00 |
| திரு அழகரத்தினம் குடும்பம் | லண்டன் | 1புட்டி அரிசி | 1000. 00 |
| பி. ஆதித்தன் | மட்டக்களப்பு | | 5000. 00 |
| பா. டனிகா | கல்வேலி | | 20000. 00 |
| தி. சத்தியா | மந்திகை | | 2000. 00 |
| S. கபில்ராஜ் | கொல்லங்கலட்டி | | 5000. 00 |
| சிவலோஜன் சிவச்செல்வம் | லண்டன் | | 32850. 00 |
| S. மயூரதன் | இணுவில் | | 5000. 00 |
| ஸ்ரீ. ராமச்சந்திரன் | இணுவில் | 1மூடை அரிசி | |
| M. செல்வி | அச்சுவேலி | | 20000. 00 |
| த. கோபிதாசன் | லண்டன் | | 10000. 00 |
| T. ராமச்சந்திரன் | ஊரெழு | | 5000. 00 |
| N. பாரதி | ஊரெழு | | 10000. 00 |
| சத்தியவாணி நந்தகுமார் | மானிப்பாய் | | 5000. 00 |
| S. பிரியதர்ஷன் | உரும்பராய் | | 2000. 00 |
| திரு பிரபாகரன் குடும்பம் | சாவகச்சேரி | | 1000. 00 |
| சு. கமலநாதன் | புத்தூர் | | 1000. 00 |
| திரு கோபாலகிருஷ்ணன் | புத்தூர் | | 500. 00 |
| ஜெ. பாக்கியலெட்சுமி | அமெரிக்கா | | 10000. 00 |
| இ. வாமதேவா | இந்தியா | | 1500. 00 |
| செ. வரலட்சுமி | தெல்லிப்பழை | | 5000. 00 |

*ஒருமுறைகூடச் சிரிக்காமல் கழிந்த நாளே வீணாகக் கழிந்த நாள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| செ. சுஜாதா | தெல்லிப்பழை | | 5000. 00 |
| சி. வைத்தியநாதன் | கைதடி | 14கி. அரிசி | 5000. 00 |
| திருமதி சு. ஜெயராஜா | லண்டன் | | 5000. 00 |
| S. லலித்தா | இணுவில் | | 2000. 00 |
| உ. இலங்கநாயகி | சுழிபுரம் வடக்கு | | 5000. 00 |
| இ. திருமகள் | பருத்தித்துறை | | 1000. 00 |
| கஸ்தனி சுதர்ஷன் | லண்டன் | | 9000. 00 |
| ஏ. பவித்திரா | பிரான்ஸ் | | 10000. 00 |
| மோ. அருந்ததி | யாழ்ப்பாணம் | | 1000. 00 |
| திரு விஸ்வநாதன் குடும்பம், திரு டினேஸ் குடும்பம் | தாவடி | | 15000. 00 |
| த. அபிராமி | பருத்தித்துறை | | 2000. 00 |
| சு. கதிரவேற்பிள்ளை | ஆவரங்கால் | | 2000. 00 |
| சி. சுதாகரன், சி. சிவகரன் | கோப்பாய் | | 1000. 00 |
| ச. மாணிக்கம் | சுழிபுரம் | | 5100. 00 |
| ப. சரவணகோபி | கொழும்பு | | 1000. 00 |
| க. பாலகுமார் | யாழ்ப்பாணம் | | 5000. 00 |
| சி. பொன்னுச்சாமி | நீர்வேலி | | 5000. 00 |
| க. கணேசநாதன் | சங்கானை | | 5000. 00 |
| நா. பாலசுப்பிரமணியம் | திருநெல்வேலி | | 1000. 00 |
| அ. பூரணி | வல்வெட்டித்துறை | | 10000. 00 |
| இ. தங்கராஜா | தோப்பு | | 2000. 00 |
| து. ருக்ஷயன் | பொலிகண்டி | | 10000. 00 |
| S. ராஜகுலேந்திரம் | கொக்குவில் | | 500. 00 |
| ச. சோமாஸ்கந்தக்குருக்கள் | சுன்னாகம் | | 3000. 00 |
| வீ. சிற்சபேசன் | ஜேர்மன் | 1மூடை அரிசி | 5000. 00 |
| பீ. பிரியா | டென்மார்க் | | 5000. 00 |
| ஹ. ஆதிரா | கொழும்பு | | 2000. 00 |
| சி. அபிதன் | லண்டன் | | 1000. 00 |
| ந. கௌதமன் | குப்பிளான் | 1புட்டி அரிசி | 2000. 00 |
| அ. மகாலிங்கம் நினைவாக | நவாலி | | 5000. 00 |
| N. தனேஸ்வரன் | பிரான்ஸ் | | 2000. 00 |
| வ. ஆரியா | கனடா | | 25000. 00 |
| சி. சிவஞானசூரியன் | இங்கிலாந்து | | 10000. 00 |
| த. மகேஸ்வரி | நல்லூர் | | 2000. 00 |
| நீ. கிருஷ்ணலதா குடும்பம் | லண்டன் | | 100 பவுன்ஸ் |
| சு. டினோஜ், சு. விதுஜா | லண்டன் | | 10000. 00 |
| நா. டிலக்ஷ், நா. கிஷோக் | கரவெட்டி | | 10000. 00 |
| வை. விக்னேஸ்வரன் | சங்கானை | மரக்கறி 3புட்டி அரிசி | |

*நடக்காதவன் கால்களில் சிலந்திகூட கூடு கட்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| J. கோபிராஜ் | சங்கானை | 1000. 00 |
| செ. சற்குணதேவி, செ. காவேரி | இந்தியா | 10000. 00 |
| த. நாகராஜா | நல்லூர் | 5000. 00 |
| வி. மகேஸ்வரி | கரணவாய் | 5000. 00 |
| த. மகேந்திரன் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| M. ஜெயந்தா லண்டன் | 20k சீனி, 20k உ.பருப்பு, 20k ம.பருப்பு, சௌவ்வரிசி | 4மூடை அரிசி |
| செ. யோகராசா | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| மோகன் வானதி | கனடா | 5000. 00 |
| ம. அருலேந்திரன் | அமெரிக்கா | 5000. 00 |
| ஜெ. ஜனனி | லண்டன் | 2000. 00 |
| து. சோபிகா | தெல்லிப்பழை | 2500. 00 |
| கு. கிருபாகரராசா | ஆவரங்கால் | 16000. 00 |
| திரு நவரட்ணம் குடும்பம் | நல்லூர் | 1000. 00 |
| தே. துளசிதாசன் | ஆவரங்கால் | 5000. 00 |
| வி. நிஷாந்தன் | பருத்தித்துறை | 5000. 00 |
| K. ரஞ்சன் | லண்டன் | 4000. 00 |
| வி. ஆதித்யா | வதிரி | 5000. 00 |
| மு. கஸ்மியா | சுதுமலை | 6000. 00 |
| S. தாருஸ் | நல்லூர் | 5000. 00 |
| த. பவுஜன் | கனடா | 10000. 00 |
| த. மிதூஜன் | கனடா | 10000. 00 |
| பெற்றா ஏசென்ஸ் | கொழும்பு | 10000. 00 |
| ம. நிரோஜன் | கட்டுவன் | 1மூடை அரிசி |
| கு. முகுந்தன் | கனடா | 50000. 00 |
| ம. வினிதா | நீர்வேலி | 1000. 00 |
| சி. அசிதன் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| சி. அன்புமலர் | வட்டுக்கோட்டை | 5000. 00 |
| தாட்ஷாயினி குடும்பம் | தெகிவளை | 10000. 00 |
| திரு இளம்பூரணன் | நல்லூர் | 1000. 00 |
| த. சதுர்சன் | ஏழாலை | 1000. 00 |
| திரு துவாரகன் குடும்பம் | ஊரெழு | 10000. 00 |
| த. அபிராமி | பருத்தித்துறை | 2000. 00 |
| முருக பக்தன் | இணுவில் | 15000. 00 |
| நே. லக்சனா | பருத்தித்துறை | 5000. 00 |
| திரு சுவேந்திரராஜா குடும்பம் | சங்கானை | 1000. 00 |
| வி. வர்சித், வி. வர்ணிதா | இமையாணன் | 10000. 00 |
| A.T. சிவனேசபிள்ளை | இடைக்காடு | 5000. 00 |

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறந்த அறப்பணி அன்னப்பணி

**– திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

இறைவன் வினைகளை ஒழிப்பதற்கு பூமியில் உயிரினங்களைப் படைக்கின்றான். படைக்கப்பட்ட உயிரினங்கள் வினைகளை ஒழிப்பதற்கு சிறந்த பணி அன்னமிடுதல் ஆகும். இறை அருள் பெற்று அன்னப்பணி செய்தல் மிகவும் அவசியம். இந்தப் பணியைச் செய்வதற்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆலய முன்வீதி அருங்கில் சந்நிதியான் ஆச்சிரமத்தை அமைத்து அதை நடத்துவதற்கு சிறந்த ஆசானாக கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி அவர்களை நியமித்துள்ளார். "யாம் இருக்கப் பயம் ஏன். எந்நிதியும் தருவான் சந்நிதியான்" என்ற மந்திரத்தை சாமியார் உள்ளத்தில் பதித்துள்ளார். அன்னக்கந்தன் அன்னப்பணிக்கு தகுதியான ஒருவனை நியமித்தது சந்நிதியான் புதுமையன்றோ?

முதன்முதல் இந்தியாவில் ஏறக்குறைய ஏழாம், எட்டாம் நூற்றாண்டளவில் நாயன் மார்களை சந்தான குரவர்களை தமிழ்நாட்டில் தோற்றுவித்துள்ளார். இவர்கள்மூலம் அன்னசாலைகள் பல தோன்றின. அப்பர் சுவாமிகள் ஒருகால் அப்பூதியடிகள் கட்டிய தண்ணீர்சாலைக்குச் சென்றார். அறச்சாலையின் பெயரைக்கண்டு இச்சாலைக்கு கட்டியவர் பெயர் வையாது, வேறொருவர் பெயர் சூட்டிய காரணம் என்ன வினவினார். அங்கு நின்ற அப்பூதியடிகள் மிகவும் கோபம் அடைந்து மக்களுக்காக சமணர்களால் துன்புறுத்தப்பட்ட அவரையா அந்நியர் என்று கூறியது தகுமா என்றார். அதைக் கேட்ட அப்பர் அந்த பாவி நான்தானென்று கூற, அப்பூதியடிகள் அவர் பாதம் பணிந்தார். அவரை அப்பர் கட்டித் தழுவினார். இன்று எமது வீட்டில் உணவு உண்ண வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொண்டார். அப்பருக்கு உணவு கொடுக்க வாழை இலை வேண்டுமென்று மூத்த திரு நாவுக்கரசர் கொல்லை சென்று இலை பறிக்க அங்கு ஒரு நாகம் அவரைக் கடித்துவிட்டது. விசம் தலைக்கு ஏற முன் ஓடிச்சென்று இலையை அன்னையின் கையில் கொடுத்து இறந்துவிட்டார். அப்பூதியடிகள் இவர் இறந்ததினால் அப்பர் உணவு உண்ணமாட்டாரென எண்ணி, மூத்த திருநாவுக்கரசை பாயால் சுற்றி மறைத்துவிட்டு அப்பரை உணவு உண்ண வரும்படி அழைத்தார். அப்பர் வந்து உணவு உண்ண மூத்த திருநாவுக்கரசரை அழைத்தார் அப்பூதியடிகள். சுவாமி அவர் இப்போது இங்கு உதவமாட்டார் என்றார். இறையருளால் உணர்ந்த அப்பர், அவர் உடலைக் கொண்டுவரச் செய்து விபூதியிட்டு பதிகம் பாடினார். அப்பூதியடியின் இறந்த மூத்த மகன் உயிர்பெற்று எழுந்து அன்னையரையும் அப்பரையும் வணங்கினான். சிறந்த அன்னப்பணியாற்றிய அப்பூதியடிகள் புகழ் எங்கும் பரவியது.

திருமூல நாயனாரால் சிவபூமியென்று அழைக்கப்பட்ட இலங்கையில் அன்னசாலை பல சென்ற காலங்களில் சிறப்பாக நடைபெற்றன. கிழக்கு மாகாணத்தில் பல ஆலயங்களில் அன்னதானம் வழங்கப்பட்டு வந்தன. அதுபோல் கொழும்பிலும் தெகிவளை கண்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் அன்னதானம் நடைபெற்றதை யாவரும் அறிவர். கொழும்பில் போயா நாட்கள் கடை வைத்திருக்கும் சிலர் அன்னதானம் வழங்கினர். முன்னேஸ்வரம் ஆலயத்தில் அன்னதானம் சிறப்பாக நடைபெற்றதை அடியார்கள் மறக்கமாட்டார்கள்.

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை பல இடங்களில் நல்லூரில் துர்க்காதேவி அன்னசாலை வெள்ளிக்கிழமைகளில் அன்னதானம் வழங்கி வந்ததையும் நல்லூர் சுற்றாடலில் பல அன்னசாலைகள் இயங்கின.

நாவற்குழி சிவபூமியில் அமைந்த சிவாலயத்தில் திருவாசகம் கல்லில் செதுக்கி வைத்து சிவனுக்கு பூசை செய்கின்றனர். வியாழக்கிழமையில் இங்கு அன்னதானம் வழங்கப் பட்டு வந்தன. யாழ்ப்பாணத்தில் பொதுவாக எல்லா ஆலயங்களிலும் அன்னதானம் நடை பெற்றுவந்ததென்ற உண்மையை சைவ மக்களன்றி ஏனைய மதத்தினரும் நன்கு அறிவர். சைவ சமயத்தின் உண்மைக் களங்களாக அன்னதானம் விளங்கியதை சைவ மக்கள் அறியாதவர்கள் இல்லை எனலாம்.

உணவு கொடுத்தவன் உயிர் கொடுத்தவன் என்ற பெருஞ் சிறப்பைக் கொண்டது. தற்கால சூழ்நிலையிலும் அன்னதானம் சிறந்த முறையில் நடைபெறும் ஒரேயொரு சாலை சந்நிதியான் அறச்சாலை என்பதை யாவரும் மறக்கவோ மறுக்கவோ மாட்டார்கள். சந்நிதியான் ஆச்சிரமம் அன்னம் வழங்குவதுடன், சமூகத் தொண்டுகளையும், வெள்ளப்பெருக்கு காலங் களில் அங்கு சென்று உணவு, உடை வழங்கி வருகின்றது. வறிய பிள்ளைகளுக்கு துவிச்சக்கரவண்டி, மூக்குக்கண்ணாடி, இலவச வைத்திய சேவை என்பவற்றையும் செய்து வருகின்றது. ஞானச்சுடர் என்ற நூலின்மூலம் மக்களின் அறியாமையைப் போக்குகின்றது. சாமியார் சொல்வார் அவன் தருகின்றான் நான் செய்கின்றேன். கடற்கரையான் பேரருளாலே சந்நிதியான் ஆச்சிரமம் பலகோடி ஆண்டுகள் வாழ்க! வளர்க! வெல்க! என்று வாழ்த்து கின்றோம்.

## பாரெங்கும் படர்ந்திருக்கும் பாவங்களைத் தீர்த்திடுவாய்

கற்பனைக் கெட்டாத தத்துவமே - எங்கள்
கருணையே உருவான காளியம்மா
நித்தமும் உன்பதம் பற்றிநின்றேன் - சுபம்
நீடித்த வாழ்வு தன்னை அருள்வாய் அம்மா
நோய் நொடிக்கு உள்ளாகி நெட்டூரம் குடிகொண்டு
நிம்மதி இல்லாமல் நொந்துவரும் அடியவரை
தாயன்று நீயேற்று தரணியில் வாழவைக்க
தன்னருள் புரிந்து மனம் குளிரவைப்பாய்
வளலாய் பதிக்கு ஓர்நிழலாக வந்துதித்து
வானதிர வரமளிக்கும் அன்னையே
பாரெங்கும் படர்ந்திருக்கும் பாவங்களை தீர்த்திடுவாய்
பரந்தாமன தங்கையே பத்திரகாளி அம்மையே.

-பருத்துப்பிள்ளை செல்லத்தம்பி-

இறைக்க ஊறும் மணற்கேணி ஈயப் பெருகும் செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மரபுகளால் பெரிதும் அறியப்படும் இருபதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட யாழ்ப்பாணத்து இந்து ஆலயங்கள்

– திரு சண்முகலிங்கம் சஜீலன் அவர்கள் –


**ஆய்வுச் சுருக்கம்**

இருபதாம் நூற்றாண்டிற்கு முற்பட்ட யாழ்ப்பாணத்தின் இந்துக் கோவில்கள் யாழ்ப்பாணத்தின் தொன்மை வரலாற்றைக் கூறும் இலக்கியங்களான வையாபாடல், தட்சிண கைலாய புராணம், கைலாயமாலை, யாழ்ப்பாணவைபவமாலை மற்றும் பாளி, சிங்கள மொழி இலக்கியங்கள், தமிழ்க் கல்வெட்டுக்கள், சாசனங்கள், தலங்களை மையப்படுத்தி எழுந்த பிரபந்த இலக்கியங்கள், புராணபடனம், பிற்காலத்தில் தோன்றி நிலைபெற்ற பிரசங்கம் சொற்பொழிவு ஆகிய இலக்கிய மரபுகளால் பெரிதும் அறியப்படுவதுடன் அம் மரபுகளுக்கூடாக சைவத் தமிழ்ப் பண்பாட்டின் தொடர்ச்சியினை நிலைபேறுடையதாக்கும் மிகப் பெரும் கலாசாரப் பண்பாட்டு மையங்களாகவும் விளங்குகின்றன.


**அறிமுகம்**

யாழ்ப்பாணம் தமிழர்களின் கலாசாரப் பண்பாட்டின் இருப்பிடமாகவும் அதன் தலைநகராகவும் பண்டைய காலம்தொட்டே இருந்து வந்துள்ளது. இதற்கு இங்கு இப்பிரதேசம் எங்கும் விரவிக் காணப்படும் இந்து ஆலயங்கள் சான்று பகர்கின்றன. ஆலயங்கள் நித்திய நைமித்திய பூசை வழிபாடுகள், கிரியை நெறிகள், மகோற்சவங்கள், விழாக்கள் ஆகிய வற்றினையும் தாண்டி ஒரு பிரதேசத்தினது, ஊரினது வரலாறு, வளம், இயற்கைச்சூழல், மக்களின் வாழ்வு, பொருளாதாரம் அவர்களது கலை, கலாசாரம், பண்பாடு மற்றும் இன்னோரன்ன பல விடயங்களை மிகத் தொன்மைவாய்ந்த தனது தொல் பொருட்கள், இலக்கிய மரபுகள், பாரம்பரிய வழக்காறுகள் ஆகியவற்றினூடாக வெளியுலகிற்கு வெளிப் படுத்தி நிற்கும் மிகப் பெரும் கலாசார பண்பாட்டு நிறுவனங்களாக விளங்குகின்றன. இவ்வாறாக ஒரு பிரதேச மக்களின் கலாசாரப் பண்பாட்டு நிலையமாக ஆலயங்கள் திகழ் வதற்கு அவை கொண்டுள்ள தொல்லியல், இலக்கிய மரபுகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இலக்கிய மரபுகள் ஆலயத்தின் தொன்மை, வரலாறு, பாரம்பரியம் ஆகியவற்றை வெளிப் படுத்தி நிற்பதுடன் காலத்திற்குக் காலம் அழிக்கப்பட்ட மறைக்கப்பட்ட பல விடயங்களை மீட்டெடுப்பதற்கும், மீளுருவாக்குவதற்கும் உதவும் மிகப்பெரும் வரலாற்றுச் சான்றாதாரங் களாகும். யாழ்ப்பாணத்தில் உருவாகியதும், யாழ்ப்பாணத்தின் தொன்மை வரலாற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு செய்துள்ளதுமான வையாபாடல், தட்சிணகைலாசபுராணம், கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய வரலாற்று இலக்கியங்களும், மகாவம்சம் போன்ற பாளி இலக்கியங்களும் யாழ்ப்பாணத்தின் தொன்மையான ஆலயங்களின் வரலாற்றைப் பேசுவதுடன் அவை காலத்திற்குக் காலம் யாழ்ப்பாணத்தில் உருவாகிய அரசு, மக்கள் ஆகியோரிடம் எவ்வாறான செல்வாக்கையும், தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதையும் எடுத்துக் கூறுகின்றன. கல்வெட்டுக்கள், சாசனங்கள், அரசர்கள், சமூக உயர் மட்டத்தினர், பரோப காரிகள் காலத்திற்குக் காலம் ஆலயத்திற்கு வழங்கிய தானங்கள், கொடைகள், தருமச் செயற்பாடுகள் பற்றிப் பேசுவதுடன் அவை செயற்படுத்தப்படும் முறைகளையும் எடுத்துக் கூறுகின்றன. காலத்திற்குக் காலம் இவ்வுலகில் வாழ்ந்த புலவர்கள், பேரறிஞர்கள் பலர் தலங்கள்மீதும் அவற்றில் உறையும் கடவுளர்மீதும் பல பிரபந்த இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இவற்றின்மூலம் ஆலயம், ஊர், பிரதேசம் சார்ந்த விடயங்கள் பலவற்றை நுட்பமாகப் பதிவு செய்துள்ளனர். 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் புராணபடனம், பிரசங்கம் (சொற்பொழிவு) போன்ற வாய்மொழி மூலப் பேச்சுக்கலை இலக்கிய மரபில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இவை இந்துமதம் சார்ந்த சமய அறிவியல், வாழ்வியல் ஒழுக்கம், விழுமியங்கள், கலாசாரப் பண்பாட்டு வாழ்க்கை நெறி முறைகள் ஆகியவற்றினைபற்றிப் பேசுவதுடன் ஆலய வரலாறுகள், வழக்காறுகள், பாரம்பரியங்களை மக்களுக்கு எடுத்துக் கூறுவனவாகவும் உள்ளது. இவை அந்நியர்களால் அழிக்கப்பட்ட பலவற்றை ஆலயங்கள் மீள உருவாக்கவும், இருப்பவற்றைப் புனருத்தாரணம் செய்யவும் உதவியுள்ளது. இவ்வாறாக ஆலயங்கள் சார்ந்து உருவாகிய இலக்கிய மரபுகள் பல்துறை சார்ந்த விடயங்களைக் கூறுவதுடன் அரசு, மதம், மக்கள் ஆகிய அரசியற் கூறுகளிலும் மிகப்பெரும் செல்வாக்கையும், தாக்கத்தையும் செலுத்தியுள்ளது.

## தொன்மையான வரலாற்று இலக்கியங்கள் பேசும் ஆலயங்கள்

ஈழத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கிறிஸ்துவுக்கு முன் 5ஆம் நூற்றாண்டில் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், சந்திரசேகரேச்சரம், நகுலேச்சரம் (திருத்தம்லேஸ்வரம்) என நான்கு திசைகளிலும் நான்கு சிவாலயங்கள் இருந்துள்ளதாக மாதகல் மயில்வாகனப் புலவர் (1779-1816) இயற்றிய யாழ்ப்பாண வைபவமாலை, முத்துராசக்கவிராயர் (1604-1619) இயற்றிய கைலாயமாலை ஆகிய யாழ்ப்பாணத்தின் எழுந்த வரலாற்று நூல்கள் கூறுகின்றன. பாளி இலக்கியமான மகாவம்சமும் இதனைக் குறிப்பிடுகின்றது. யாழ்ப்பாணத்தில் மிகத் தொன்மையான ஆலயமாக நகுலேஸ்வர ஆலயத்தைக் குறிப்பிட முடியும். ஆதியில் திருத்தம்பலேஸ்வரர், திருத்தம்பலேஸ்வரி ஆலயமாகவிருந்து நகுல முனிவருக்கு சாப விமோசனமளித்த ஆலயமாக இது கருதப்படுகின்றது. பேரிலக்கியங்களான இராமாயணம், மகாபாரதம் ஆகியவற்றின் கிளைக்கதைகளுடனும் இவ்வாலயம் தொடர்புபடுகிறது. இராவணனின் வீணையைக் கந்தருவன் ஒருவன் கவர்ந்து வந்து கீரிமலையில் வைத்து அதனை வாசித்தான் என்றும், அர்ச்சுனன் தவம் செய்து இவ்வாலயத்தை வழிபட்டானென்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளமகாராசன் புனித கண்டகி தீர்த்தத்தில் நீராடி வழிபட்டு சனீஸ்வரசாபம் நீங்கப் பெற்றானென்றும் நகுலேஸ்வரத்தின் கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன. யாழ்ப்பாண வைபவமாலை, கைலாயமலை கூறும் மற்றொரு தொன்மையான ஆலயமாக மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் அறியப்படுகின்றது. குதிரை முகத்தவளான திசையுக்கிர சோழன் மகள் மாருதப்புரவீகவல்லி கீரிமலை கண்டகி புனித தீர்த்தத்தில் நீராடி நகுலேஸ்வரரையும், முருகப்பெருமானையும் வழிபட்டு குதிரை முகம் நீங்கப்பெற்று கதிரையாண்டவர் கோயிலை மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயிலாகக் கட்டுவித்தான் எனக் கூறப்படுகின்றது. ஆலயத்தின் பிரசுரங்களும் வெளியீடுகளும் வாழ்வு பெற்ற சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியின் மாவை ஆதீனப் பேரரசு என்றே இவ்வாலயத்தைக் குறிப்பிடுகின்றன. எனினும் ஆலயம் 2000 வருடங்களுக்கு மேல் பழமையானது என திட்டவட்டமாக நம்புவதற்கான சில ஆதாரங்கள் தற்போது ஆலயத்தில் கிடைத்துள்ளன. இவ்வாலயம் மாருதப்புரவீகவல்லி வருவதற்கு முன்பே நாகர்களின் வழிபாட்டிடமாக இருந்துள்ளது என்பதனை உறுதிப்படுத்துவன வாக வாசகங்கள் பொறிக்கப்பட்ட நாகச் சிற்பங்களும் வேறு தொல்பொருளாதாரங்களும் உள்ளன.

ஆரம்பகால நாகர்களின் வழிபாட்டிடமாக இருக்கலாமெனக் கருதப்படும் இன்னொரு ஆலயம் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயமாகும். யாழ்ப்பாணத்தின் பிரபல சக்தித் தலங்களுள் ஒன்றாகவும் 64 சக்திபீடங்களுள் ஒன்றாகவும் அறியப்படும் இவ்வாலயம் அமைந்துள்ள நயினாதீவு சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பிய நூல்களில் மணிபல்லவம் எனவும், பௌத்தபாளி இலக்கியங்களில் நாகதீபம் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இவ்வம்மன் ஆலயம் நாக வழிபாட்டுடன் இணைந்த அம்மன் வழிபாட்டு மரபுகள் கடைப்பிடிக்கப்படும் ஆலயமாகும். போர்த்துக்கேயர் வருகைக்கு முன்பே இவ்வாலயம் லிங்க வழிபாட்டிலும், நாகதம்பிரான் வழிபாட்டிலும் முதன்மைபெற்ற ஆலயமாக இருந்துள்ளது. அத்துடன் புளியந்தீவிலுள்ள நாகேஸ்வரன் கோயிலும், நாகபூஷணி அம்மன் கோயிலும் நாக வழிபாட்டுடன் இணைந்து நோக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் கருவறையில் காணப்படும் ஐந்து தலை நாகச்சிலை சுமார் 8000 ஆண்டுகள் பழமையானதென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் மிகப்பிரபலமான ஆலயங்களில் ஒன்றான நல்லூர்க் கந்தசுவாமி கோயில் நல்லூரை இராசதானியாக்கி ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் முதன்மைபெற்ற ஆலயமாகும். இக் கோயிலைப் பற்றிய குறிப்புக்கள் கைலாயமாலை, யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி இவ்வாலயம் 10ஆம் நூற்றாண்டில் புவனேபாகு எனப்படும் செண்பகப்பெருமாள் எனும் மன்னனால் கட்டப்பட்டது. எனினும் முதலில் இருந்த முருகன் ஆலயம் முதலாவது சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி காலத்தில் கி.பி. 1248ஆம் ஆண்டில் கட்டப்பட்டது என்று கொள்ளப்படுகின்றது. பின்னர் புவனேபாகு மன்னனால் அழிக்கப்பட்ட ஆலயம் மீண்டும் அதே மன்னனால் கி.பி. 1450 இற்கும் கி.பி. 1467 இற்குமிடையில் முத்திரைச்சந்தியில் இன்று கிறிஸ்தவ தேவாலயம்

*நல்ல செயலில் துணிவுடையவர் நாள்தோறும் வெற்றியே காண்பர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ள இடத்தில் கட்டப்பட்டது. நல்லூர் கந்தசுவாமி கோயில் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை பின்வந்த வரலாற்றாசிரியர்களான ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, முதலியார் செ. இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர், டானியல் ஜோன், பேராசிரியர்களான ஆ. வேலுப்பிள்ளை, க. கணபதிப்பிள்ளை, கா. இந்திரபாலா, எஸ். பத்மநாதன், சி.க. சிற்றம்பலம், பொ. இரகுபதி, குல. சபாநாதன், வி. சிவசாமி, செ. கிருஸ்ணராசா, பொ. ஜெகநாதன் ஆகியோர் தமது நூலில் குறிப்பிட்டுள்ளனர். 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் தனது திருப்புகழில் "யாழ்ப்பாணாயன் பட்டினமருவிய" என நல்லூர்க்கந்தசுவாமி கோயிலைக் குறிப்பிடுகிறார். கைலாயமாலையில் கூறப்படும் இன்னொரு செய்தியில் நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு அரணாக நல்லூரை மையமாக வைத்து ஆரியச்சக்கரவர்த்திகள் கிழக்கில் வெய்யிலுகந்த பிள்ளையார் கோயிலையும் தெற்கில் கைலாசநாதர் (கைலாசப்பிள்ளையார்) கோயிலையும் மேற்கில் வீரமாகாளியம்மன் கோயிலையும் வடக்கில் சட்டநாதர் கோயிலையும் கி.பி. 1215 - 1236ஆம் ஆண்டுகளில் கட்டுவித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது. இதேபோல் 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி செய்த ஆரியச்சக்கரவர்த்திகளான பரராசசேகரன் எனும் மன்னன் இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலையும் செகராசசேகர மன்னன் இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் கோவிலையும் கட்டியுள்ளனர். இவ்வாலயங்கள் இம் மன்னர்களின் வழிபாட்டிடங்களாகவும் இருந்துள்ளன. இக்காலத்திலேயே பரராசசேகர மன்னனின் அரசவை அமைச்சராகவும், புலவராகவும் இருந்ததுடன் இரகுவம்சம் எனும் வடமொழி நூலை தமிழில் தந்தவருமான அரசகேசரி நீர்வேலியில் ஓர் பிள்ளையார் கோவிலை ஸ்தாபித்தார் எனக் கூறப்படுகின்றது. இது தற்பொழுது அரசகேசரி பிள்ளையார் கோயில் என வழங்கப்படுகின்றது. சரசோதிமாலை என்னும் நூலில் நாயன்மார்கட்டு அரசகேசரி பிள்ளையார் ஆலயம் மிகத் தொன்மையானது எனக் கூறப்பட்டுள்ளது. நல்லூரை இராசதானியாகக் கொண்டு தொடர்ச்சியாக ஆட்சி செய்த பல மன்னர்களும், அமைச்சர்களும், அவர்களின் பிரதானிகளும் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் புதிதாக ஆலயங்களை கட்டுவித்து கும்பாபிசேகம் செய்வித்ததுடன் அழிந்த பல ஆலயங்களை புனருத்தாரணமும் செய்துள்ளார்கள் என்பதை அவ்வப் பிரதேச ஆலய வரலாறுகள் மூலம் அறியமுடிகிறது.

(தொடரும்...

---

## விறகும் சுள்ளிகளும்

குரு ஒருவர் நாள்தோறும் பக்திப் பாடல்களைப் பாடுவார். இதைக் கேட்க பலரும் வருவார்கள். அந்தக் கூட்டத்தில் ஏழு வயது சிறுவன் ஒருவனும் நாள்தோறும் வந்து செல்வான். சிறுவனைத் தொடர்ந்து கவனித்து வந்த அந்த குரு ஒருநாள் நாள்தோறும் தவறாமல் வந்து பாடல்களைக் கேட்கிறாயே. உனக்கு பாட்டுக் கேட்பதில் அவ்வளவு ஆர்வமா? என்று கேட்டார்.

அதற்கு அந்தச் சிறுவன் ஐயா! என் தாயார் என்னை அடுப்பைப் பற்ற வைக்கச் சொன்னார். அப்போது சிறு சிறு சுள்ளிகள் முதலில் எரிந்து சாம்பலான பிறகே பெரிய விறகுகள் எரிவதைக் கவனித்தேன். இதனால் நான் இளமையிலேயே ஆன்மீகக் கூட்டங்களுக்கு வந்து, இறப்பதற்கு முன்பு புண்ணியம் தேடிக்கொள்ள எண்ணினேன் என்றான். சிறுவனின் ஆழமான அர்த்தம் கொண்ட பதிலைக்கேட்ட குரு அவன் ஞானத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

***சோதனைகள்தாம் ஒரு மனிதனை அவனுக்கு அறிமுகப்படுத்துகின்றன.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதிரை நிவேதனம் சர்க்கரை சாதம், பிட்டு, களி

– *திருமதி பொ. திலகவதி* அவர்கள் –

சிவபெருமானுக்கு உகந்த திருநாட்களில் முக்கியமான நாள் திருவாதிரை. முன்பு ஒரு காலத்திலே தாருகாவனம் என்ற காட்டிலே இருக்கும் முனிவர்கள் சிவபெருமானை மதியாது யாகம் செய்து அதன்மூலம் மதயானை, தீ, உடுக்கை, சர்ப்பம், முயலகன் முதலானவற்றை உற்பத்தி செய்து அவரை அழிப்பதற்காக அனுப்பினார்கள். அவற்றில் மதயானையை உடையாக உரித்துப் போர்த்தும், முயலகனை வலது காலினால் மிதித்தும் மற்றையவற்றை தமது அவயங்களில் தாங்கியும் இடது காலை மேலே தூக்கியும், அவர்களுக்கு முன் சிவபெருமான் நின்ற நிலையே நடராஜ வடிவம். இதுவே பிரபஞ்சங்கள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்ட பெரு வடிவம்.

இந்த தரிசனத்தை மார்கழி மாதத்து திருவாதிரை நட்சத்திரத்தில் நடைபெற்றமையால் சிவபெருமானுக்கு உயர்ந்த அபிஷேக நாளாக திருவாதிரை நாள் கொண்டாடப்படுகின்றது. திருவாதிரையில் உற்சவம் கொண்டாடி சங்கத் தமிழர்கள் மகிழ்ந்ததைப் பரிபாடல் என்னும் சங்க நூல் குறிப்பிட்டு இருக்கின்றது. பரிபாடலில் வரும் பதினோராவது பாடல் வருமாறு,

"ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து
மாயிருந் திங்கண் மறுநிறை யாதிரை
விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்...."

எனக் குறிப்பிட்டு இருக்கின்றது. திருவாதிரை விழா மக்களாலே சிறப்பாக கொண்டாடப்படுவதைக் குறிப்பிட்டு இருக்கின்றது.

ஆரம்பத்தில் திருவாதிரையைத் தனி விழாவாகக் கொண்டாடிய மக்கள் மனதில் அது பத்துத் தினங்கள் கொண்டாட வேண்டும் என்று ஆசை உண்டாகியது. அதனால் பத்துத் தினங்கள் கொண்டாடும் பெரு விழாவாக திருவெம்பாவை உற்சவம் வளர்ச்சி கண்டது. மார்கழித் திருவாதிரையை ஈறாகக் கொண்டு அதற்கு முன்னர் ஒன்பது நாட்கள் உற்சவம் செய்து திருவாதிரையன்று பூர்த்தியாக்கிக்கொள்வர். இந்தத் திருவெம்பாவை காலத்தில் 3ஆம் நாள், 6ஆம் நாள், 10ஆம் நாள் ஆகிய மூன்று நாட்களும் சிவபெருமானுக்கு முறையே சர்க்கரைச் சாதம், பிட்டு, களி என்பவற்றை நிவேதனம் செய்து வழிபடுகின்றோம். ஏன் அதற்கு காரணமும் உண்டு.

மூன்றாம் நாள் "திருவாதவூரடிகளுக்குச் சிவபெருமான் குருவாக வந்து மரநிழலை உகந்த இடமாகக் கண்டமர்ந்து ஞானத்தை அருளியபின்; சிவபெருமானுக்கு வாதவூரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருப்பு, தேங்காய்த் துருவல், சருக்கரை, பசுவின் பால், அரிசி ஆகியவற்றைக் கலந்து சமைத்த திருவமுதைக் கொடுத்து உண்பித்தமையைக் குறிப்பிடவே" சருக்கரை அமுதைப் படைக்கின்றோம். இதனைத் திருவாதவூரடிகள் புராணம்

"பருப்புடன் நாளிகேரப்பழஞ் செருத்துருவல் சேர்த்து
சருக்கரை கலந்து பாலில் சமைத்த நல் அமுது தன்னை
இருத்திய கனகக் கால்மேல் இலங்கு பொற் கலத்தின் மீது
விருப்பொடு படைத்து நெய்யும் மிக்கமுகக் கனியும் பெய்து"

எனக் குறிப்பிடப்படுகின்றது.

அதேபோல் ஆறாவது நாள் பிட்டே உணவாகப் படைத்து வழிபடுகின்றோம். "மதுரை நகரிலே வைகை நதியானது பெருக்கெடுத்து வந்து நகரிலே பல அழிவுகளைச் செய்தது. வைகை நதிக்கு அணை கட்ட பாண்டிய நாட்டில் உள்ளவர்கள் அனைவரையும் அழைத்துப் பாண்டிய மன்னன் ஆணையிட அங்கிருந்த செம்மனச்செல்வி என்னும் பெண்ணானவள் யான் தனியேன், என் செய்வேன் என ஏங்க, சிவபெருமானே கூலியாளாய் வந்து நான் உன் பங்கை அடைத்து விடுகின்றேன். நீ எனக்கு என்ன தருவாய்? எனக் கேட்க அமுதம் போலும் இனிய பிட்டு தருவேன். அல்லது அந்தி வா இதனை விற்றே பணம் அளிப்பேன் என்றாள். இறைவனாகிய கூலியாள் "தாயே நான் பெரும் பசியுடையேன் எனக்கு நீ பிட்டைத் தா" என்றார். என்பதற்காக ஆறாம் நாள் பிட்டை நிவேதனமாக சிவபெருமானுக்குப் படைக்கின்றோம்.

அதேபோல் பத்தாம் நாள் திருவாதிரையன்று ஏன் களி உணவாகப் படைக்கின்றோம். அதற்கு ஒரு காரணம் உண்டு. ஒன்பதாம் திருமுறையில் வரும் திருவிசைப்பாவில் மூன்று பதிகங்களையும் திருப்பல்லாண்டையும் அருளிச் செய்தவர் சேந்தனார். இந்த சேந்தனார் ஒரு சமயம் பட்டினத்தடிகள் பெரும் தனவந்தராக இருந்தபோது அவருக்குத் தலைமை முதன்மைக் கணக்காளராக இருந்தவர். இவர் ஒரு சமயம் பட்டினத்து அடிகளின் கட்டளையின் பிரகாரம் அவரது கருவூலத்தைத் திறந்து அனைவரையும் பொருளை எடுத்துச் செல்லவிட்டார். இதனால் கோபம் கொண்ட பட்டினத்தடிகளின் உறவினர்கள் சேந்தனாரை சோழ மன்னரிடம் காட்டிக்கொடுத்துச் சிறை வைத்தார்கள். சேந்தனார் சிறையிலிருந்து வருந்துவதையறிந்த பட்டினத்தடிகள்,

மத்தளை தயிருண்டானும் மலர்மிசை மண்ணினானும்
நித்தமும் தேடிக் காணா நிமலனே அமல மூர்த்தி
செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட
கைத்தளை நீக்கி என்முன் காட்டு வெங்காட்டுளானே.

எனத் திருவெண்காட்டு இறைவனை வணங்கி, அவரது சிறை இருப்பை இறையருளாலே விடுதலை செய்தார்.

சிறையில் இருந்து வெளியேறிய சேந்தனார் தன் குடும்பத்தாரோடு தில்லையில் குடியேறினார். அங்கு இருக்கும் காலத்திலே தினமும் சீவனோபாயத்துக்காக விறகு வெட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமானம் பெற்றார். விறகை விற்று வந்த பணத்தில் உணவைச் சமைத்து முதலில் சிவனடியார் ஒருவருக்கு திருவமுது செய்வித்துப் பின்னரே தாம் உண்டு வந்தனர். ஒரு சமயம் மார்கழி மாத திருவெம்பாவை உற்சவம் சிதம்பரத்திலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருவாதிரைக்கு முதல் நாள் ஒரே மழை. மழையின் காரணமாக சேந்தனார் விறகு வெட்டச் செல்லவில்லை. அன்று வருமானமும் இல்லை. சிவனடியாருக்கு திருவமுது செய்யவில்லை. மாலை இரவு என வரத் தொடங்கியது. மழை ஓய்ந்தபாடில்லை. இதனால் மனம் வருந்திய சேந்தனார் வீட்டில் இருந்த கேள்வரகு மாவில் களியைச் சமைத்து யாராவது சிவனடியார் வருவாரா என ஏங்கி நின்றார். அந்த நேரம் சிவனே சிவனடியாராக வேடம் இட்டு சேந்தனார் இல்லம் வந்து அவருடைய களியை உண்டபின் மீதிக் களியை அடுத்த வேளை உணவுக்கும் வேண்டும் என எடுத்துச் சென்றார்.

அன்று இரவு சோழ மன்னனின் கனவிலே தோன்றித் தான் சேந்தனாரின் இல்லம் சென்று களி உண்ட வரலாற்றைக் கூறி, சிதம்பரத்தின் கருவறைக்குள் களியின் சிறு துகள்களையும் தனது முகத்தில் களி பூசி இருப்பதையும் கூறினார். மறுநாள் அதிகாலை திருவாதிரை அபிஷேகத்துக்கு வந்த தில்லைவாழ் மூவாயிரவர்கள் அதிர்ச்சிகொண்டு இச் செய்தியினை வெளியிற் கூற, செய்தி சோழ மன்னனிடம் சென்றது. மன்னன் தான் இரவு கண்ட கனவை எண்ணி அச் சம்பவம்தான் நனவிலே நடக்கிறது என மகிழ்ந்து சேந்தனாரைக் கண்டுபிடிக்க சேவகர்களை அனுப்பினார். இவையொன்றும் அறியாத சேந்தனார் திருவாதிரை தேரோட்டத்தைக் காணச் சிதம்பரம் வந்துவிட்டார். முதல் நாள் நல்ல மழையாலே சிதம்பர வீதிகள் எல்லாம் சேறு. இதனால் திருவாதிரை தேர் ஓடாது நிற்க, இறைவனே அசரீரியாக "சேந்தனார் நீ பல்லாண்டு பாடினால் தேர் ஓடும்" என உரைக்க சேந்தனார் "மன்னுக தில்லை" எனத் தொடங்கி பதின்மூன்று திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பாடி தேரை ஓட வைத்தார். திருவாதிரை நாளில் சேந்தனாரின் களியை உண்டு அவர் பாடிய திருப்பல்லாண்டை கேட்டு மகிழ்ந்து தேர் ஓடியது என்பதால் இன்றுவரையும் திருவாதிரை அபிஷேகம் முடிந்த பின்னர் சிவபெருமானுக்கு களியை உணவாகப் படைத்து வழிபடுகின்றோம்.

ரப்பரைப் பார்த்து பென்சில் சொல்கிறது, "ஒவ்வொரு முறை நான் செய்யும் தவறுக்கும் என்னைச் சுத்தப்படுத்தி தூய்மையாக்கி விடுகிறாய். ஆனால் என்னை சுத்தம் செய்யும்போதுநீ கரைந்துகொண்டே போகிறாயே, அது எனக்கு வருத்தமாக இருக்கிறது" என்று. இரப்பர் அதற்கு "அது என் கடமை, நான் படைக்கப்பட்டதே அதற்குத்தான். என்னைக் கண்டு நீ வருந்தவேண்டாம். இதில் எனக்கு முழு மகிழ்ச்சி. என்னால் உன் தவறுகள் அழிக்கப்பட்டு, நீ திருத்தங்களுடன் முன்னேறிச் சென்றால் அதுவே என் வெற்றி. நான் கரைவதைப் பற்றி எனக்கு கவலை இல்லை" என்றது.

அந்த இரப்பர் வேறு யாருமில்லை. நம் பெற்றோர்தான். அவர்கள் ஆயுள் முடியும்வரை நம் தவறுகளை திருத்திக்கொண்டே இருப்பார்கள். நம்மீது பொறாமைப் படாத இரு உள்ளங்கள் நம் பெற்றோர்கள்.

*குறிக்கோள் உடைய வாழ்வே நல்வாழ்வு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனை தெய்வமாக்குவது எது?

**–திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள்–

அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது என்பது நாம் அறிந்த வாக்கு.

இந்த மானிடப் பிறவியில் மனிதன் பரிணாம வளர்ச்சியில் விலங்கிலிருந்து வந்தவன் என்பது டார்வினது கொள்கை.

மனிதன் விலங்கிலிருந்து பிறந்தவன் என்னும் கருத்தை யாம் ஏற்றுக்கொண்டால், அதே பரிணாம வளர்ச்சியில் வளர்ந்து வரும் மனிதன் அதற்கு மேலும் உள்ள தேவன் என்ற நிலையை அடையமுடியும், தெய்வ நிலையைப் பெற முடியும் எனக் கொள்ளலாம் அல்லவா?

மனிதனது வாழ்வு நெறிப்பட வேண்டுமானால், சமயம் ஒன்றால்தான் இது முடியும் என்பது அனுபவம் கண்ட மறுக்கமுடியாத உண்மையாகும்.

சமய நெறிப்படாத மனிதன் வாழ்வதற்கு தகுதியற்றவன். அவன் வாழ்ந்தால் சமுதாயம் அழிய நேரிடும்.

விலங்குகள் சமயம் என்ற ஒன்றைப் பின்பற்றுவதில்லை. எனவே, மனிதனை விலங்கிலிருந்து வேறுபடுத்தி அவனை முழு மனிதனாகச் செம்மைப்படுத்தி அவனை உயர் நிலைக்கு அழைத்துச் செல்லக்கூடியது சமயம் ஒன்றே ஆகும்.

இன்று நாம் பல சமயங்களைக் காண்கின்றோம். ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு கொள்கையோடு ஒவ்வொரு தெய்வத்தை மனக்கண்முன் தோற்றுவிக்கின்றது.

ஆனால் சமய உண்மைகள் யாவையும் துருவி ஆராய்ந்த பெரியோர்கள் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" தெய்வம் ஒன்று என்னும் முடிவுக்கு எப்போதோ வந்துள்ளார்கள்.

அதுவே பரம்பொருள். இந்தப் பரம்பொருள்தான் மக்களை நெறிப்படுத்துவதற்காக உலகிலே இத்தனை சமயங்களையும் அமைத்துக்கொடுக்கின்றது. இந்த உண்மையை நாம் முதலில் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். தெரிந்துகொள்ள வேண்டும்.

இறைவனை அடைய வேண்டும் என்று இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள் முதலாம் தரத்தைச் சேர்ந்தவர்கள். உதாரணமாக ஸ்ரீ ராமகிருஸ்ணர், சுவாமி விவேகானந்தர் போன்றோர் பரம்பொருளை அடைய வேண்டும் என்ற நோக்கோடு இறையால் விதிக்கப்பட்ட முதலாந்தர மனிதர்கள் எனக் கொள்ளலாம். காரணம் இவர்கள் எப்போதும் இறையின் தூயவழியில் சென்றவர்கள், வாழ்ந்தவர்கள்.

அடுத்து நாம் எப்படியாவது பிறந்த பயனை அடைந்துவிட வேண்டும் என்ற பணிவோடு வாழும் மனிதர்கள் இரண்டாம் தரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மகான்களுடைய நல்வழிபெற்று நெறிப்படுத்தப்படும் பாங்கினைப் பெற்றவர்கள். இவர்கள் இரண்டாம் தரத்தைச் சேர்ந்தவர்கள்.

*உள்ளத்தின் உட்சுரப்பே கவலையும் களிப்பும். அவை வெளியிலிருந்து வருபவை அல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு, உடுத்து, உலகில் வாழ்வை முடித்துக்கொள்ளும் வகையினர் மூன்றாம் வகையினராகக் கொள்ளலாம். இவர்கள் உலக மாயை என்னும் பிரகிருதியில் உழல்பவர்கள்.

இந்த வகையினரையும் எந்த மதத்திலும் நாம் சந்திக்கலாம்.

கூர்ந்து நோக்கின் சமயங்களிடையே பிணக்கு கிடையாது. ஆனால் சமய வாதிகள் என தங்களைச் சொல்லிக்கொண்டு திரிபவரிடமே தான் பிணக்கு இருக்கின்றது.

ஆராய்ந்து பார்த்தால் சமயங்களிடையே பிணக்கு ஏற்படுத்தவோ சண்டையிடவோ வழியில்லை, மார்க்கமில்லை. சமயத்தை நன்கு புரிந்துகொள்ளாதவர்கள் தான் சமயப் பிணக்குகளுக்கும் பூசல்களுக்கும் காரணமாக அமைகின்றனர்.

சீலர்களாக, நாம்தான் எடுத்துக்காட்டாக வாழ்ந்து அவர்களுக்குக் காட்ட வேண்டும். உதாரணமாகப் பாருங்கள்.

தந்தையார் பீடியோ, சிகரட்டோ புகைத்துக்கொண்டு அவற்றைத் தன் பிள்ளையைக் கொண்டு கடையிலே வாங்குவித்துக் கொண்டு "மகனே புகைத்தல் கூடாது" என்று அப் பிள்ளைக்கு உபதேசம் செய்தால் அது எந்த அளவில் பயன் அளிக்கும்?

சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல. சமயாசாரங்களை நாம் அன்றாடம் எமது நிகழ்வில் புகுத்திக்கொள்ள வேண்டும். இறை பிரார்த்தனை என்பது இன்றியமையாதது. எந்த நாளும் ஆலயம் சென்று வழிபட அவகாசம் கிடையாதவிடத்து தினமும் இல்லத்தில் காலையும் மாலையும் இறை வழிபாடு அவசியம் செய்தாக வேண்டும். நாம் எவ்வழியோ அவ்வழிதான் எமது குழந்தைகளும் என்பதை யாம் மறந்துவிடக்கூடாது.

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் அவன் தாள் நினை என்று அப்பர் சுவாமிகள் ஏற்கனவே எமக்குச் சொல்லி வைத்துள்ளார். எனவே நேரம் இல்லை சுவாமி கும்பிட என்ற தயக்கம் எமக்கு எழவேண்டிய அவசியமில்லை.

எமது சமய அறிவை உள்ளிட்ட சிறப்பான நூல்கள் எம்மிடத்தே பற்பல உள்ளன. எனவே இவற்றை நன்கு பயன்படுத்தியாக வேண்டும்.

இந்த வகையில் எமது குழந்தைகள் மனதில் படியும்வண்ணம் சமய உண்மைகளை கதைகளாகச் சொல்லி அவர்களையும் நெறிப்படுத்த வேண்டும். இப் பணியில் பெரும் பங்கு தாய்மாருக்கே உண்டு. எனவே தாய்க்குலமே! இந்த நல்ல பணியை எமது இளம் சிறார்க்காக யாம் தினமும் செய்யவேண்டாமா?

*உனது பெற்றோரின்மேல் அன்பு செலுத்துகின்றாய் என்றால், அது இரத்தம் சம்பந்தம் கொண்டது என்பதால் ஏற்பட்ட அன்பு. இந்த அன்பும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டதே. ஆனால் கடவுளுக்கும் பக்தனுக்கும் இடையே இருக்கும் அன்பில் எந்தவித சுயநலக்கலப்பும் கிடையாது. இது ஆத்மா சம்பந்தப்பட்டது. ஆத்ம உறவு என்று கொள்ளலாமே தவிர, இதனை இரத்தம் சம்பந்தமான உறவு என்று சொல்ல முடியாது.*

*எல்லோரும் தம்மை விட்டுவிட்டு வேறு யாரையோ சீர்திருத்த முயல்கிறார்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரிச்சங்கு

— திரு மயில்வாகனம் சிவயோகசுந்தரம் அவர்கள் —

"பரிந்து வந்து பரமா னந்தம்
பண்டே அடியேற் கருள்செய்ய
பிரிந்து போந்து பெருமா நிலத்தில்
அருமா லுற்றேன் என்றென்று
சொரிந்த கண்ணீர் சொரிய...."

மார்க்கண்டு சுவாமிகளை நினைக்குந்தோறும் மணிவாசக சுவாமிகளின் இத் திருவாசகமே எனதகத்தில் இசைக்கும். யோகசுவாமிகள் தமது பெருங்கருணைத் திறத்தாலே எமது வளவில் ஒரு கற்பகதருவை நட்டுவைத்தார். நாம் அதன் நீழலிலிருந்து நினைத்ததெல்லாம் பெறும் பாக்கியத்தை இழந்துவிட்டோம். அவர் எமது வளவிலே ஒரு வலம்புரிச்சங்கைப் பதித்து வைத்தார். அது அருட்செல்வம், பொருட்செல்வம் எல்லாம் பெருக்கியது. சிறுவர்களாகிய நாங்களோ மழலைக் குழந்தையின் கையில் கிடைத்த பொற்கிண்ணத்தைப்போன்று அதனை ஒரு விளையாட்டுப் பொருளாகவே நினைத்துவிட்டோம். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலே பெரிய அமெரிக்க மாநிலத்தின் குடிமகன் என்னும் அலுமாலுற்று வலம்புரி பதித்த சொந்த மண்ணுக்கு அந்நியனாய்ப், பொய்யான போக போக்கியங்களைப் பொருளென்று ஓயாது ஓடி ஓடி உழைத்துழைத்து அலுத்து முதுமையுற்ற இவ்வேளையில் வாராவரவில் வந்த சஞ்சீவியை இழந்த சோகம் உள்ளகத்தில் இசைக்கிறது. ஆயினும் அந்தச் சோக இசையைச் "சொரிந்த கண்ணீர் சொரியச் சொரிய கண்டங் கனையக் கனையக்" கதறி இசைப்பதில் ஒரு சுகம் இருக்கிறது. சுவாமிகளின் நினைவு என்றும் உள்ளத்தில் எங்கோ நிறைந்திருக்கும் பரமானந்த சுகமன்றோ!

விவசாயி தான் விரும்பிய பயிரினை நடமுன் நிலத்தைப் பண்படுத்துகிறானல்லவா. அதேபோல் சுவாமிகளும் தமது ஞானப்புதல்வனான மார்க்கண்டு சுவாமிகளைக் கட்டில், சாதம் சமைப்பதற்கான மட்பானை அதற்கான ஒரு மண்ணெண்ணெய் அடுப்பு ஆகிய தளபாடங்கள் பலவற்றுடனும் கூட்டிவந்து எமது வளவிலுள்ள ஒரு கொட்டிலில் குடியமர்த்த முன்னரே அக்கொட்டிலை மாத்திரமன்றி எம்மையும் பண்பட்டவர்களாகப் பயிற்றுவித்தார். சிவனடியாரை மதிக்கும் பண்பினரான என் தந்தையார் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த துறவி ஒருவரின் வேண்டுகோளுக்கமைய அவர் தங்குவதற்காக ஒரு கொட்டிலை எமது வளவினுள் அமைத்தார். எனினும் அத்துறவி அங்கு தங்கினாரில்லை. பின்னாளில் சுவாமிகள் எமது சிற்றப்பாவிடம் இக்கொட்டிலில் பால் காய்ச்சிக் குடிபுகச் செய்து விளக்கேற்றி நற்சிந்தனையும் பாராயணம் பண்ணுமாறு பணித்தார். சிலவேளைகளில் சுவாமிகள் மாத்திரமே அக் கொட்டிலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகற்போதில் உறைந்து சென்றதாக அறிந்தேன். நீண்டகாலத்துக்கு முன்னதாகவே இக் கொட்டிலை அமைத்ததும், அதனைப் பின்னர் நற்சிந்தனை என்னும் ஞானஒளி பரப்பி ஆயத்தம் செய்ததும் மார்க்கண்டு சுவாமிகளைக் குடியமர்த்துவதற்காகச் சுவாமிகள் செய்த ஆயத்தங்களே.

ஒருமுறை எமது தந்தையார் விடுமுறையைக் கழித்துவிட்டுக் கொழும்பு செல்வதற்காக நாவற்குழி புகையிரத நிலையத்திற்கு (பட்டயக் கணக்காளராகப் பணிபுரிந்த அவர் தமது உத்தியோகத்திற்குத் தகுந்த உடையுடன்) குதிரை வண்டியிற் சென்று கொண்டிருந்தார். அன்று ஒரு மழைநாள். அவ்வீதி வழியால் வந்துகொண்டிருந்த சுவாமிகள் தம்மோடு கூடி வந்தவரிடம் "பார்; இப்பொழுது இங்கு ஒரு புதினம் நடக்கப்போகிறது" எனக் கூறியவண்ணம் நடந்தார். சுவாமிகள் கிட்ட வந்தபொழுது கண்டுகொண்ட தந்தையார் அவசரமாக வண்டியை நிறுத்தச்சொல்லி இறங்கிச் சென்று ஈரத்தரையில் வீழ்ந்து வணங்கிக் கிடந்தனர். தந்தையார் சுவாமிகளைத் தரிசிக்கத்தொடங்கிய நாளிலிருந்து அவருக்குச் சுவாமிகளே தெய்வத்துட் தெய்வம் பரம்பரை பரம்பரையாகக் கும்பிட்டுவந்த ஊர்க்கோயிலுக்குக்கூட அவர் செல்வ தில்லை. எமது தாயார் முற்றமெங்கும் சாணநீர் தெளித்து, வீடு கழுவி விரதியர் கோலமாய்த் தாளிதக் கறிகள் செய்து கொண்டிருப்பாரானால் அவை சுவாமிகள் எழுந்தருள்வார் என்பதற்கான அறிகுறிகளாயிருக்கும். நாங்களும் அதற்கேற்ப ஆயத்தராவோம். எனது சிற்றப்பா விசுவலிங்கம் ஆசிரியர் தினமும் கொழும்புத்துறை சென்று சுவாமிகளைத் தரிசிக்கும் நியமம் பூண்டவராய் இருந்தார். எமது மைத்துனர் முத்துக்குமார சுவாமி ஆசிரியர் சுவாமிகள் கால் வருத்தமுற்றபோது அவர் ஏறி இறங்குவதற்கு வசதியாகத் தனது மோட்டார் காரையே மாற்றிக்கொண்டார். அவர் எங்களை மாலை வேளையில் ஒழுங்காக இருந்து தேவார திருவாசகங்களும், நற்சிந்தனையும் பாடுதற்குப் பயிற்றியிருந்தார். இவை யாவும் குறும்புத்தனம் நீங்காத சிறுவராய் இருந்த நாங்கள் சுவாமிகள் எங்கள் இல்லத்துக்கு எழுந்தருளும் வேளையில் அதற்கியைந்தவராய் நாம் நடந்துகொள்வதற்கான பயிற்சியாகவே இருந்தது. இவ்வாறெல்லாம் சுவாமிகள் எனது பெற்றோர், மைத்துனர், சிறிய தந்தை என்போரையெல்லாம் தமது அருள்வலையில் அகப்படுத்தியதும், எம் இல்லத்திற்கெழுந்தருளி அவ்வில்லத்தைப் புனிதமாக்கியதும், எம்முடன் பிறந்தாரையெல்லாம் சிவனடியாரைச் சிவனென வணங்கும் சீலமுடையோராகப் பயிற்றுவித்ததும் மார்க்கண்டு சுவாமிகளைக் குடியமர்த்துவதற்காகச் சுவாமிகள் செய்த ஆயத்தங்களே.

எமது சிறுபராயத்திலே யோகசுவாமிகள் எமது இல்லத்திற்கு வந்து மீண்டும் காரில் ஏறுவதற்குச் சென்று காரின் அருகில் நின்று, "டேய் இங்கே வா" என உறுக்கிக் கூப்பிட்டார். நான் நடுக்கத்துடன் அருகில் செல்லும்போது அவரது ஒளிநிறைந்த கண்கள் என்னை உற்று நோக்கின. நான் அருகில் சென்றதும், "போடா" என்று என்னை அனுப்பிவிட்டார். அந்த ஒளிபொருந்திய அருட்பார்வையை இன்றும் என்னால் மறக்கமுடியவில்லை.

சுவாமிகள் தமது அன்பர்களிடம் உங்களுக்கெல்லாம் ஒரு திசைகாட்டியாக நான் அவனை மார்க்கண்டு சுவாமிகளை வைத்திருக்கின்றேன் எனக் கூறுவாராம். திசைகாட்டி

*படிக்கும் பழக்கம் ஒரு மனிதனை முழுமைபெறச் செய்யும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் வடதிசையை நோக்கியிருப்பது போல் அவர் எப்போதும் பிரமசொருபம் ஒன்றையே நோக்கியிருந்தார். அவர் சிலவேளை தியானத்தமர்ந்திருக்கும்போது அவரது அடர்ந்த சடை பிடித்த தலைமீது காகம் வந்து நிற்கும். நாங்கள் பெரியவர்களுக்குத் தெரியாதவண்ணம் சென்று தொட்டுப் பார்த்துப் பயத்துடன் திரும்பிவருவதுமுண்டு. ஒரு சமயம் அவரை நாடி வந்த கந்தானை கந்தையா என்பவர் படலையைத் திறந்ததும் கண்முன்னே தோன்றிய சுவாமிகளைக் கண்டு கண்ணீர் சொரியச் சொரிய நின்ற நிலையிலே நெடுநேரமாக நின்றார். மார்க்கண்டு சுவாமிகளும் அவரை நோக்கியவண்ணம் தூண்போன்று நின்றார். அந்த ஊமை நாடகத்தின் அருட்பெருக்கை ஊகிக்கும் பக்குவம் இன்னும்தான் எனக்கு வரவில்லை. அவர் சிலவேளைகளில் வாயில்நிலையில் சாய்ந்தவண்ணம், நின்ற நிலையிலேயே மணிக்கணக்காக நிற்பார். அவரது நெஞ்சப் புத்தகத்தில் எழுதியிருக்கும் "நில்லடா நிலையில் என்று சொல்லுவது" என்ற நற்சிந்தனைச் சொற்கேட்டு நின்றனரோ!

ஒரு சிவராத்திரி நாளன்று மாலைப் பொழுதில் சுவாமிகள் கைதடி ஆச்சிரமத்துக்கு வந்தார்கள். அன்று மார்க்கண்டு சுவாமிகளுக்கு ஒரு பாடலை எழுதிக்கொடுத்து இன்று நீர்மட்டும் விழித்திருந்தாற் போதும் எனக் கூறி முடங்கிப் படுத்துக்கொண்டார். அது "எட்டாத கொப்பிற்கு ஏணி வைத்துப் பூப்பறித்து...." எனத் தொடங்கும் தங்கப்பாட்டு எனப் பின்னர் அறிந்தேன். அப்பாட்டிலே

"எட்டாத கொப்பினிலே இருக்குதடி தேனமிர்தம்
தட்டாமற் சாப்பிடடி சமனாவார் யாருமில்லை"

என்றோர் கண்ணி இருக்கிறது. மார்க்கண்டு சுவாமிகள் அன்றிரவு எட்டாத கொப்பிலிருக்கும் தேனமிர்தத்தையுண்டு திளைத்த இன்பத்திலே "இணையாவார் யாருமில்லை" என்று இரவு முழுவதும் செம்மாந்திருந்தனராதல் வேண்டும். இத்தகைய இன்ப நிலையைச் சுற்றி வளைய வளைய வந்த அவருக்கு நற்சிந்தனைப் பாடல்கள், வசனங்கள் முழுவதும் மனனமாயிருந்தன. மகா வாக்கியங்களைப் பற்றிச் சிவதொண்டனில் வந்த கட்டுரைத் தொடர் ஒன்றுபெற்ற நூல்வடிவம் அவரது கைவசமாக இருந்தது. அதனை எனது தம்பியார் யோகவிநாயகம் அவர்கள் பலமுறை அவர் முன்னிலையிலிருந்து வாசிக்க அவரும் ஆறுத லாகக் கேட்டுக்கொண்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அவரைத் தரிசிக்கவரும் அடியவர் களுக்கும் அவரது நெஞ்சகத்தினின்றும் வெளிவரும் நற்சிந்தனையைச் சொல்வதன்றி அவர் தன் வாக்காக எதனையும் கூறுவதில்லை.

மார்க்கண்டு சுவாமிகளைத் தரிசிக்க யாரேனும் அன்பர்கள் வந்தால் நாங்கள் வேலியருகிற் சென்று அவரது சைகையை எதிர்பார்த்து நிற்போம். அவர் வெளிக்கிட்டு ஏதும் தெரிவித்ததும் இல்லத்திற்குச் சென்று வேண்டியதைக் கொண்டு பக்குவமாகக் கொடுப்பது மகிழ்ச்சிதரும் காரியமாக இருந்தது. தமது சுற்றத்தார் யாரும் வந்தாலோ அவர்களைப் படலையருகிலேயே வைத்துக் கதைத்து அனுப்பிவிடுவார். சுற்றப்பற்று அவரிடம் துளியும் இருந்ததில்லை. யோகசுவாமிகளின் திருவடிக்கலப்பு நிகழ்தற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னர் மார்க்கண்டு சுவாமிகள் மருமமான முறையில் ஆச்சிரமத்தினின்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறியிருந்தார். நாங்களெல்லாம் கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்குக் கவலையோடு வருவது போவதாய்த் திரிந்தோம். சுவாமிகள் அக்கினிப்பிரவேசமான வேளையிலும் மார்க்கண்டு சுவாமிகளைக் காணக்கிடைக்கவில்லை. சுவாமிகளது அஸ்தியும் சேமிக்கப்பெற்ற பின்னர்தான் அவர் சாந்தமாகத் தமது கொட்டிலில் வந்து உறைந்தார். யோகசுவாமிகளும் செல்லப்பா சுவாமிகளது அக்கினிப் பிரவேசத்தின்போது பிரசன்னமாயிருக்கவில்லை. இது "ஒருவருமறியாத" பரமரகசியத்தின் ஓரம்சம்போலும்.

பின்னாளில் சந்தசுவாமிகள் அவரோடு வந்து உறைந்தார். இருவரும் இடையிடையே நற்சிந்தனைபற்றி ஏதேனும் உரையாடுதலைத் தவிர மற்றும் நேரமெல்லாம் மௌனமாகவே இருப்பர். அவர்களது உரையாடுதலும் சும்மா இருப்பதன் சுகம் அறிவது பற்றியதாகவே இருக்கும். யாரேனும் மார்க்கண்டு சுவாமிகளைத் தரிசிப்பதற்கு வந்தால் சந்த சுவாமிகள் எழுந்து சென்று கொட்டிலின் பின் அமர்ந்துகொள்வார். மார்க்கண்டு சுவாமிகள் குளிப்பதற்காகச் செல்லும் தருணம் பார்த்துச் சுறுசுறுப்போடு சுவாமிகள் இருக்குமிடம் ஆகியவற்றைத் துப்பரவாகக் கூட்டிவிட்டு ஒன்றும் அறியாதவர்போல ஆறுதலாக அமர்ந்திருப்பார்.

ஒருமுறை அடியவர்கள் சிலர் மார்க்கண்டு சுவாமிகளைப் படம் பிடிப்பதற்காகப் புகைப்படக் கருவியுடன் வந்திருந்தனர். சந்த சுவாமிகள் இங்கு அவ்வாறான காரியங்கள் ஏதும் செய்வதில்லை என மறுத்தார். அவர்களோ மிகவும் பிடிவாதமாகச் சந்த சுவாமிகளிடம் வாதாடி, மார்க்கண்டு சுவாமிகள் அனுமதித்தால் தாம் அப்படத்தினை எடுப்போம் என்று கூறி உள்ளே சென்றனர். மார்க்கண்டு சுவாமிகள் அவர்களது வேண்டுகோட்கிரங்கி வேண்டியது செய்க என்று இருந்தனர்போலும். அவர்கள் வெளியே வந்ததும், சந்த சுவாமிகள் அவர்கள் பின்னே வந்து சுவாமிகள் அனுமதித்தனரோ, படம் எடுத்தீர்களோ எனக் கேட்டுத் தனக்கும் அதிலோர் பிரதி தருமாறும் வேண்டினர். எனக்கோ இவர்கள் இருவரையும் சேர்த்து ஒன்றாகப் படம் எடுப்பதற்கு ஓர் ஆசைதான். நானும் எனது நண்பரும் சேர்ந்து இவர்களுக்கு நான் உணவு பரிமாறும்வேளையில் படம் பிடிக்க முயற்சித்தும், சந்த சுவாமிகள் அவதானித்து விட்டதால் எடுக்கமுடியவில்லை.

சந்தசுவாமிகள் செங்கலடி சிவதொண்டன் நிலையத்திலுறைந்து சிவதொண்டு புரிந்த காலத்தில் மார்க்கண்டு சுவாமிகளுடன் கடிதத் தொடர்பு வைத்திருந்தனர் போலும். அவ்வாறு மார்க்கண்டு சுவாமிகள் தனக்கு எழுதிய 500இற்கு மேற்பட்ட கடிதங்களைப் பொன்னே போன்று போற்றியும் அவற்றில் பக்கத்தில் சிறு குறிப்புக்களும் எழுதியும் பெரும் பொக்கிஷமாகவே சந்தசுவாமிகள் பேணி வைத்திருந்ததை பின்னாளில் சந்தசுவாமிகளின் அன்பரொருவரூடாக அறிந்தேன்.

நாம் எந்தச் சுகத்தைத் தேடி மேற்குலகிற்கு வந்தோமோ அந்தச் சுகத்தின் உச்சநிலையைப் பிறப்புரிமையாகக் கொண்டவர் ஜேம்ஸ் ஹாமஸ்போதம் என்னும் சந்தசுவாமி. அவரோ அதனைத் துச்சமெனத் தள்ளி சிவயோக வள்ளலது சிவதொண்டு செய்ய முந்தி நின்றார். மார்க்கண்டு சுவாமிகளுக்குத் தருணம் பார்த்திருந்து பணி செய்தார். கண்ணியத்தைப் பிறப்புரிமையாகக் கொண்டிருந்த சந்தசுவாமிகள் மார்க்கண்டு சுவாமிகளை யோகசுவாமிகளிடம்

*தோல்வியைக் கண்டு அஞ்சுபவனிடமிருந்து வெற்றி விலகுகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மோடு பயின்ற ஒரு சாலை மாணாக்கன் எனக் கருதாது ஒரு திசைகாட்டியாகவே கருதிப் பணிபுரிந்தார்.

சந்தசுவாமிகளை அவரது தந்தையாரின் இறுதியாத்திரைக்கு அழைத்துச் செல்லும் பொருட்டு இங்கிலாந்துத் தூதரகத்திலிருந்து உயரதிகாரிகள் கைதடிக் கொட்டிலுக்கு அரச மரியாதைகளுடன் வந்தனர். அவரோ தந்தை தாயாவானும், சார்கதியும் எல்லாம் சுவாமிகளே என்று சாந்தமாயிருந்தனர்.

ஆயின் மார்க்கண்டு சுவாமிகள் திருவடிக்கலப்பிற்குச் சில மாதங்களுக்கு முன்னர் சந்தசுவாமிகள் ஒருநாள் எனது மைத்துனரை அணுகி மார்க்கண்டு சுவாமிகள் தனது கனவிற் தோன்றி நீர் உமது உறவினர்களைச் சென்று பார் எனப் பணித்தனர் என்றும் தான் இங்கிலாந்து செல்ல முடிவெடுத்திருப்பதாகவும் குறிப்பிட்டார். ஏற்பாடுகள் எல்லாம் முடித்து, நானும் எனது மைத்துனரும் விமான நிலையத்திற்கு வழியனுப்பச் சென்றோம். அங்கு விமான நிலைய அதிகாரிகள் அவரை முக்கிய நபர்கள் செல்லும் பாதையினூடாக செல்லுமாறு வேண்டியும், சந்தசுவாமிகள் அதனை மறுத்து சாதாரண பயணிகளின் பாதையினூடே சென்றனர்.

வெளிநாட்டு மோகவெள்ளத்தினால் இழுப்புண்டு வாழ்நாளெல்லாம் ஓடி உழைத்து அலுத்து நோயுற்று மூத்து நுந்துகன்றாய் ஒதுங்கிக் கிடக்கும் இவ்வேளையில் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. சுவாமிகளதும், சுவாமிகளால் ஆளாக்கப்பட்ட சுவாமிமார்களதும் வாழ்வு கரைகாணா இன்பக்கடலாடும் சாந்த சுகவாழ்வு. அந்தச் சுவாமிமார்களுக்குப் பணிசெய்து வாழ்வது பெரும்பாக்கியம்.

"அன்பர் பணி செய்யவெனை ஆளாக்கிவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"

எனத் தாயுமானர் பாடுவார். சுவாமிகள் அப்பணிக்கு எம்மை ஆளாக்கி வைத்தனர். அந்நிலையிலேயே நிலையாய் நின்று மார்க்கண்டு சுவாமிகள் அமர்ந்திருந்த அத்திருக் கோயிலிற் பணி செய்து கொண்டிருந்திருக்க முடியுமாயின் அதுவே பிறந்த பிறப்பின் பயன் என்ற எண்ணம் இன்று காலங்கடந்து எழுகின்றது.

அடியாருறவையும், அரன்பூசை நேசத்தையும் அவ்வாண்டவனே அருள்மேனி தாங்கிவந்து அள்ளித்தரவும் அதனை மறுத்து அருத்தமில்லாமல் வாணாளைக் கழித்து விட்டோம். உயிருக்குயிராயிருக்கும் இறைவனை மறந்தும் ஓர் உயிர் வாழ்வா. வாழ் முதற்பொருளை இழந்தும் ஒரு வாழ்வா?

"உன்னை மறப்பேனா உயிர் நான் தரிப்பேனோ
என்னை மறப்பாயோ என் உயிரே பராபரமே"

-நற்சிந்தனை.

---

*தீய எண்ணங்களை உள்ளே வைத்துக்கொண்டு மனிதன், நல்ல செயல்களில் ஈடுபடுவானானால், அக் காரியமும் கூட தீயதாக மாறிவிடுகிறது. வெளிப்புறமாகப் பார்க்கும்போது தான் செய்யும் செயல்கள் நல்லவையாகக் கண்ணில்படுகின்றன. ஆனால் உட்புறமாகக் கூறும்போது தீய எண்ணங்கள் நிறைந்திருப்பதால் செய்வது அனைத்தும் தீமையாய் முடிகின்றது. வெற்றிக்கும் தோல்விக்கும் எண்ணங்களே மூலகாரணம்.*

***எவன் துணிகின்றானோ அவன் வெல்கின்றான்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைகள்

– திரு தம்பிப்பிள்ளை நந்திவர்மன் அவர்கள் –

சென்னியிலே கைகூப்பிச் சித்தம் ஒன்றிச்
சிவபெருமான் கழலேத்தும் பாடல் கொண்ட
பன்னிரண்டு திருமுறையும் பாடப் பாடப்
பக்தியினால் மனமுருகும் பண்புஞ் சேரும்
பின்னிழுத்து வருத்துகின்ற மாயைப் பேயும்
பெருவலியாம் அகங்காரம் என்னும் நோயும்
தன்னிடமே இதுவல்ல என்று சொல்லித்
தாமாக எமைவிட்டு ஓடிப் போகும். 01

முதலேழு திருமுறையும் தேவா ரங்கள்
முன்னவனின் புகழ்பாடும் பூவா ரங்கள்
பதமேழும் சேர்ந்துவரப் பாரில் உள்ள
பதியுறையும் தலம்பாடும் பாவி னங்கள்
விதமாக வருகின்ற வினைகள் யாவும்
வேருடனே அறுக்கின்ற மந்தி ரங்கள்
இதமாகும் மனதிற்கு வாழ்வில் வந்த
இன்னல்கள் எதிர்க்கின்ற அத்தி ரங்கள் 02

எட்டாக அடுத்துவரும் திருமு றையில்
எளிதாக மனமுருக்குந் திருவா சகத்தேன்
சொட்டாகச் சொல்வார்கள் நாவில் இனிக்கும்
சோதிவடி வானவனைச் சொல்லில் படிக்கும்
எட்டாது இருக்கின்ற எம்பி ரானை
எமக்குள்ளே காண்கின்ற ஞானங் கொடுக்கும்
கிட்டாது ஏங்குகின்ற கன்னி உள்ளக்
கிடக்கையாய்த் திருக்கோவை அன்பை வடிக்கும். 03

ஒன்பதாக வருகின்ற திருமு றையில்
ஒளிவளரும் விளக்காகி உணர்வில் ஊறி
என்புருக நெக்குருக எம்முள் நிற்கும்
எம்பெருமான் புகழ்பாடும் இசைப்பா வோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடனே ஆண்டவனை அகத்தில் போற்றி
அவனியிலே நாம்வாழ அவனை வாழ்த்தி
இன்பமெலாந் தருகின்ற திருப் பல்லாண்டும்
இலங்கியெங்கள் நெஞ்சத்தில் நிறைந்து நிற்கும். 04

நந்தியெங்கள் பெருமான்றன் நாவால் சொன்ன
நற்பொருளை நமக்கென்றும் உதவும் வண்ணம்
மந்திரத்து வடிவினிலே மனதில் ஏற்றி
மாதேவன் கழல்சேரும் வழிகள் சொல்லி
தந்திரங்கள் ஒன்பதினைக் கொண்டு நின்று
தவவாழ்க்கை இல்வாழ்க்கை மேலும் ஓங்க
எந்திரங்கள் வழிமுறைகள் சொல்லிப் போகும்
எழிலார்ந்த தமிழ்ப்பாடல் பத்தில் சேரும். 05

பேய்க்கோலம் பெருமானை வேண்டிப் பெற்ற
பெண்ணடியார் காரைக்கால் அம்மை யாரின்
தாய்போலச் சிவனிடத்தில் வைத்த அன்பைத்
தண்டமிழில் தந்துவிடும் பாட லோடு
காய்போலக் கசக்கின்ற வாழ்வை மாற்றிக்
கனியாகச் செய்கின்ற பாட லோடு
வாய்விட்டுப் பாடிமனம் அமைதி கொள்ள
வகைபலவாய்ப் பதினொன்றில் பாடல் சேரும். 06

பொடியாகும் மேனியினான் பொன்னார் பாதப்
பொருளன்றி வேறேதும் வாழ்வில் வேண்டா
அடியார்கள் அறுபத்து மூவர் தங்கள்
அருங்கதைகள் அழகாகச் சொல்லும் பாடல்
விடியாத மனத்திருளை விலக்கி நிற்கும்
விண்ணவர்கள் அமுதம்போல் வாழ்வைக் காக்கும்
படியாத பாமரரும் பழகும் வண்ணம்
பாடல்கள் பன்னிரண்டில் பாங்காய்ச் சேரும். 07

தமிழ்ப்பாடல் என்பதனால் பாடல் எளிது
தக்கவகை மனத்தினிலே பதித்தல் எளிது
அமிழ்ந்தங்கு ஆழத்தைக் காணல் எளிது
ஆசைகளை அடக்கிவிடும் முறையும் எளிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இமிழ்த்திட்டு இசையுடனே பாடல் எளிது
இனிமையிலே நெஞ்சுருகி இருத்தல் எளிது
உமியாக வீணாகும் வாழ்வை மாற்றி
உத்தமனார் கழல்சேரும் வழியும் எளிது. 08

பெருந்துயரம் வாழ்வினிலே சேரும் போதும்
பிழையாக எல்லாமே ஆகும் போதும்
இருந்தினித்தான் என்னவென்றே ஏங்கும் போதும்
ஈசனருள் இருந்திட்டால் யாவும் மாறும்
திருந்திவிடத் திருவருளை வேண்டி நாளும்
திருமுறைகள் பதிகமாகப் பாடி விட்டால்
அருந்தவமாய் அதுவமையும் மனமும் ஆறும்
அச்சங்கள் அற்றுப்போய் அனைத்தும் வெல்லும். 09

திருமுறையில் இருக்கின்ற பாடல் யாவும்
சிவபெருமான் திருவருளால் முற்றாய் ஓதி
ஒருமுறையே படித்தாலும் ஒளியே சேரும்
ஒட்டிவந்த வல்வினைகள் உதிர்ந்து போகும்
கருப்புகுந்து பிறந்திறக்கும் அவலந் தீரும்
கசிந்துருகி மனமிளகி அன்பும் ஊறும்
திருமுறையின் செல்வரென்று பேருஞ் சேரும்
திகட்டாத பேரின்பம் வாழ்வில் தேறும்.

## குழந்தைகளுக்கு நிலாச்சோறு ஊட்டுவது ஏன்?

குழந்தைகளுக்கு நிலாவைக் காட்டி சோறு ஊட்டுவது விளையாட்டு காரியம் அல்ல, அது அறிவியல். குழந்தை கருவில் இருக்கும்போது தாயின் தொப்புள் கொடி வழியாக குழந்தைக்கு உணவு செல்கிறது. குழந்தை பிறந்து தொப்புள் கொடி உடலில் இருந்து பிரிந்தபின்புதான் உணவுக் குழலின் விட்டம் விரியத் தொடங்குகிறது. இது முழுமையடைய ஐந்து வருடம் ஆகிறது. நிலாவைக் காட்டி சோறு ஊட்டும்போது குழந்தை மேல்நோக்கி பார்க்கும்போது, தொண்டை மற்றும் உணவுக்குழல் விரிவடைகிறது. அப்போது உணவு இலகுவாக இரைப்பையை நோக்கி இறங்குகிறது. மேலும் தொண்டைக் குழலில் கீழ்நோக்கி இறங்கும் அலைவு இயக்கங்கள் மற்றும் செரிமான ஊக்கிகளுக்கு நல்ல பயிற்சி கிடைக்கின்றன. இப்பயிற்சிகள் மூலம் குழந்தைகளின் உணவு செரிமான மண்டலம் ஆரோக்கியம் பெறுகிறது. மேலும் நிலாவைக் காட்டி சோறு ஊட்டும்போது குழந்தைகள் உணவில் ஆர்வம் செலுத்துகிறார்கள். செல்போனைக் காணபித்தும், தொலைக்காட்சியைக் காட்டியும் குழந்தைகளுக்கு உணவூட்டும் இன்றைய தலைமுறை தாய்மார்களை இன்றிலிருந்து நிலாச்சோறு குழந்தைகளுக்கு ஊட்டச் செய்யுங்கள்.

*வறுமையில் இருந்து கவலைப்படாதே. அதிலிருந்து மீளப்பார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டதும் - கற்றதும் - உள்ளதும் - நல்லதும் ஓர் அனுபவப் பகிர்வு

*– திரு ச. வாகீசன்* அவர்கள் –

மலையக க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான செயலமர்வு (2023) - 2024

செயலமர்வு இடம்பெற்ற இடம் - பண்டாரவளை

பங்குபற்றிய பாடசாலைகள் - பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி
பண்டாரவளை கிரேக் தமிழ் மகா வித்தியாலயம்

பங்காற்றிய ஆசிரியர்கள்

திரு இரா. செல்வவடிவேல், திரு ஆ. சிவநாதன், திரு கணேசமூர்த்தி, திரு நாக தமிழிந்திரன், திரு த. கருணாகரன், திரு ப. தர்மகுமாரன், திரு ச. வாகீசன்

இடம்பெற்ற நாட்கள் - 27.4.2024 - 29.4.2024

சொல்லில் அடங்காத, எண்ணில் அடங்காத சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகள் பல. அதில் ஒன்றே மலையக க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான செயலமர்வு (2023) -2024. ஆச்சிரம சுவாமிகளின் வழிகாட்டலில் தொடர்ந்து பல வருடங்களாக இடம்பெறும் இப்புண்ணிய செயற்பாட்டில் அடியேனுக்கும் ஒரு வாய்ப்பு கிடைத்தது மோகன் சுவாமிகள் மூலமாக. வழமையாக வழக்கம்போல் கடமைக்காகவோ அல்லது செயலமர்வு செய்ய வேண்டும் என்பதற்காகவோ நடக்கும் செயலமர்வுகளிலிருந்து இது எவ்வாறு வேறுபட்டது என்பதை அனைவரும் அறிய வேண்டும் என்பதற்காகவே இவ் அனுபவ பகிர்வு

01) செயலமர்விற்கான திட்டமிடல்

i. திகதி, இடம், செயலமர்வு நாட்களை முன்கூட்டியே திட்டமிட்டமை

செயலமர்விற்காக வரும் ஆசிரியர்கள் சிரமப்படக்கூடாது என்பதற்காக செயலமர்விற்கான திகதி, நடைபெறும் நாட்கள், நடைபெறும் இடம் போன்ற விடயங்களை இரு கிழமைக்கு முன்பாகவே திட்டமிட்டு ஆசிரியர்களுக்கு முன் கூட்டியே அவ் விடயங்களை தெரிவித்தமை.

ii. வினாப்பத்திரங்கள், மாணவர்களுக்கான செயலட்டைகளை அச்சிடல்

ஆசிரியர்களிடமிருந்து முன்கூட்டியே மாணவர்களுக்கு கொடுக்க வேண்டிய வினாப்பத்திரங்கள், செயலட்டைகளை பெற்று எத்தனை மாணவர்கள் பங்குபற்றுவார்கள் என்பதை உணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனை பிரதிகளையும் அச்சடித்து ஒழுங்கமைத்தமை. அத்துடன் பரீட்சைக்கு அண்மித்த காலத்தில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட மாதிரி வினாப்பத்திரங்களையும் பிரதி செய்து அதனையும் மாணவர்களிற்கு கொடுப்பதற்காக ஒழுங்கமைத்தமை.

iii. பயண ஒழுங்கு

ஆசிரியர்களும், ஆச்சிரம தொண்டர்களும் சிரமமின்றி செல்வதற்காக இரு வாகனங்களை சுவாமிகள் ஒழுங்குபடுத்தியிருந்தார். ஆசிரியர்கள் அனைவரையும் யாழ்ப்பாணத்திற்கு வாகனத்தில் வந்து ஏற்றிச்சென்று தாமும் உடன் வந்து ஆச்சிரமத்திற்கு அழைத்துச் சென்று அங்கு எமக்கான இரவு உணவையும் தந்த பின்னரே சுவாமிகள் பயணத்தை ஆரம்பித்திருந்தார்.

iv. ஆசிரியர்களை அணிகளாக்கியமை

மாணவர்கள் அதி உச்ச பயனைப் பெறவேண்டும் என்பதற்காக ஆசிரியர்களை இரு அணிகளாக்கி பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியிலும், ஸ்ரீஷக்தி கல்லூரி - கிரேக் பண்டாரவளை ஆகிய இரு பாடசாலைகளிலும் செயலமர்வினை ஒழுங்குபடுத்தி நடத்தி இருந்தார்.

முதல் நாள் ஒரு பாடசாலையில் கற்பித்த அணியினர் மறுநாள் மற்றைய பாடசாலையில் கற்பிப்பார் என்றவாறு திட்டமிட்டிருந்தார் சுவாமிகள்.

02) செயலமர்வு நடைபெற்ற விதம்

திட்டமிட்டவாறே ஒரு குழுவினர் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியிலும் இன்னொரு குழுவினர் ஸ்ரீஷக்தி கல்லூரி - கிரேக் பாடசாலையிலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் வரவேற்பு கூட்டத்துடன் இனிதே செயலமர்வுகள் ஆரம்பமாகின.

அனைத்து ஆசிரியர்களும் பொதுவாக க.பொ.த சாதரணதர பரீட்சைக்கு தயாராவது எப்படி, பரீட்சை வினாத்தாளுக்கு விடை அளிக்கும் நுட்பம், போன்ற விடயங்களை கூறிய தோடு ஏற்கனவே நாம் ஒழுங்கமைத்த வினாப்பத்திரங்களை செய்ய வழிப்படுத்தி பின்னர் அவற்றை மீள விளங்கப்படுத்தியிருந்தார்கள்.

03) செயலமர்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் பங்களிப்பு

உண்மையாகவே அவர்கள் மாணவர்களுக்காக மூன்று தினங்களையும் அர்ப்பணித் திருந்தார்கள் என்றே கூறவேண்டும். காலை 8.00 மணியிலிருந்து இரவு 9.00 மணிவரை செயலமர்வு நடைபெற்றிருந்தது. அதிபர், ஆசிரியர்கள் அத்தனை மணிப்பொழுதுகளும் பாடசாலையில் தங்கியிருந்தார்கள். மாணவர்கள் மற்றும் எமக்கான பணிகளை (உணவு, தேநீர் ஒழுங்கமைப்பு) குறைவின்றி செய்தார்கள். அதிபர், ஆசிரியர்கள் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதை அவர்கள் கற்றுத்தந்தார்கள். அந்த வகையில் பண்டாரவளை

*கண்ணிழந்தவனுக்குத் தெரியும் காட்சியின் மகிமை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரேக் மகா வித்தியாலய அதிபர் திரு S. சௌந்தரராஜன், ஆசிரியர்கள் திரு G. பிரகாஸ், திரு D.மணிதாஸ், திரு M. குபேந்திரன், திருமதி K. மஞ்சுளா, திருமதி M. ராதாகுமாரி, திருமதி G. நிரோசினி, திருமதி S. கிருசாந்தினி, திருமதி P. அமுதப்பிரியா, திருமதி P. பிரதீப்குமார, திருமதி R. முத்துலட்சுமி, திருமதி T. கிரிசாந்தினி, செல்வி N. ஞானதேவி ஆகியோர் எம்முடன் இணைந்திருந்தார்கள்.

அத்துடன் மாணவர்களான S. சிறிபிரகாஸ், K. லிங்கேஸ்வரன், J. பிரதீபன் ஆகியோரும் எமக்கான தம் பணிகளை ஆற்றியிருந்தார்கள்.

பண்டாரவளையில் ஒழுங்கமைப்பு

பண்டாரவளையில் ஆசிரியர்கள் திருமதி விஜயகுமாரி குடும்பம் மற்றும் அவரது சகோதரன் ராஜேந்திரன் எமக்கான சகல உதவிகளையும் வழங்கியிருந்தார்கள். நாம் அதிகாலை பண்டாரவளையை சென்றடைந்தபோது அத்தனை பேரையும் தமது இல்லத்திற்கு அழைத்துச்சென்று நாம் இளைப்பாறி செயலமர்விற்கு தயாராகும் வரை அனைத்து வசதி களையும் செய்ததோடு, காலை உணவினையும் ஒழுங்குபடுத்தி எம்மை உபசரித்திருந்தார்கள்.

04) மாணவர்கள் செயற்பட்ட விதம்

இரு பாடசாலைகளிலும் மாணவர்கள் அத்தனை தினங்களும் செயலமர்விற்கான பூரண ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார்கள். நாம் சாதாரணமாக வகுப்பறைகளில் கூறும் க்தைக்க வேண்டாம் என்ற வசனத்தை இங்கு கூறவில்லை என்றே கூறலாம்.

காலை 8.00 மணிமுதல் இரவு 9.00 மணி வரை சலிக்காமல், கற்பித்த விடயங்களை அமைதியாக செவிமடுத்தமை

உணவு இடைவேளைகளின்போது குறுகிய நேர இடைவேளைகளை எடுத்துக்கொண்டு மீண்டும் உடனடியாக வகுப்பிற்கு வருகை தந்தமை

சந்தேகங்களை வினவியமை

புதிய விடயங்களை, நுட்பங்களை உடனடியாக குறித்துக்கொண்டமை

செயலமர்வின் நிறைவின் போது ஆசிரியர்களிடம் ஆசீர்வாதம் வேண்டியமை

திடீரென மழை வந்த போதிலும் அதனைப்பற்றியோ, தாம் எவ்வாறு வீடு செல்லப் போகின்றோம் என்பதனையும்

சிந்திக்காது வகுப்பறையில் தொடர்ந்தும் அமைதியுடன் கற்றமை

05) பெற்றோர்கள் செயற்பட்ட விதம்

பொதுவாக மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு பெற்றோரின் பங்கு அதிகமாகவே இருக்கும். இங்கு அதிலும் ஒரு படி மேலாக மாணவர்களுக்கான காலை உணவு, மதிய உணவை கொடுத்துவிடுவதிலிருந்து இரவு வரை மாணவர்கள் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பதற்கு பெற்றோர்களில் பலர் பாடசாலைக்கு வருகை தந்து மாணவர்களுக்கும் எமக்கும் துணையாக இருந்தார்கள் என்பது இங்கே போற்றுதற்குரிய விடயமாகும்.

06) இருபாடசாலை சமூகத்தினரின் நன்றி பாராட்டுதல்கள்

மோகன் சுவாமிகள் அவர்களின் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்ட இச் செயலமர்வில் பங்காற்றிய ஆசிரியர்களுக்கு வாழ்த்துப்பாக்களையும், தேயிலை பொதிகளையும் தமது அன்பையும், நன்றியையும் தெரிவிக்கும் வகையில் வழங்கியிருந்தார்கள். அவர்களின் அன்பிற்கு தலைவணங்குகின்றோம்.

மேற்குறிப்பிட்ட வகையில் திட்டமிடலை தொடங்கியதிலிருந்து இறுதிவரை எதுவித இடையூறுகளும் இன்றி சிறப்பாக நடந்தேறியுள்ளது என்றால் அது சுவாமிகளின் ஒழுங் கமைப்பும், முருகனது அருளும் தான் என்பதே நிதர்சனமான உண்மை.

புல செயலமர்வுகளை கண்டுள்ளேன். பங்குபற்றியுள்ளேன் மாணவர் வரவு குறைவு, அங்கு வருகை தந்த மாணவ குழுக்களிடையே மோதல், வழங்கப்பட்ட வினாப்பத்திரங்கள், செயலட்டைகள் பலருக்கு கிடைக்கவில்லை, செயலமர்வின் நிறைவில் வழங்கப்பட்ட செயலட்டைகள் மேசைகளில் மாணவர்களை ஏன் வருகை தந்தீர்கள் என கேட்டால் பரீட்சைக்கு வரும் கேள்வி சொல்வீர்கள் அதனால் தான் வந்தோம் என்ற எந்த குறைகளையும் இச் செயலமர்வில் நான் காணவில்லை என்பதே மன நிறைவான விடயமும் ஏனைய செயலமர்வுகளிலிருந்து இது வேறுபட்டது என்று நான் ஆரம்பத்தில் கூறியதற்கான காரணமும் இதுதான்.

ஏனெனில் இது மோகன் சுவாமிகளின் வழிகாட்டுதலில் முருகனின் அருளுடன் இடம்பெற்ற விடயம் என்பதை மீண்டும் பதிவு செய்கிறேன்.

---

## ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்தலாம்?

ஓய்வு நேரத்தை எப்படிப் பயன்படுத்தலாம் என்று ஓர் இளைஞர் நண்பர்களிடம் கேட்டார்.

சிலர் சினிமாவுக்குப் போகச் சொன்னார்கள். சிலர் நண்பர்களுடன் செலவிடச் சொன்னார்கள். ஒவ்வொருவரிடமிருந்தும் ஒவ்வொரு யோசனை வந்தது. பிறகு, நேர நிர்வாகவியல் நிபுணரை அழைத்து ஆலோசனை கேட்டார் இளைஞர்.

புத்தகம் படி, நல்ல காரியங்களைச் செய் என்றெல்லாம்தான் சொல்லப் போகிறார் என்பது இளைஞரின் எதிர்பார்ப்பு. நேர நிர்வாகவியல் நிபுணர் மிக நிதானமாகச் சொன்னார், “உன் ஓய்வு நேரத்தை மற்றவர்கள் தவறாகப் பயன் படுத்தாமல் பார்த்துக்கொள். அதுவே பயனுள்ள நேரங்களைத் தொடங்கி வைக்கும்” என்றார்.

*ஏமாற்றுதல் என்பது மிகச் சிறிய முள். அதனைப் பிடுங்கி எறிவது கடினம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் உபதேசம்

**– பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை** அவர்கள் –

திருவள்ளுவநாயனாரை ஒருவர் தினந்தோறும் சென்று வழிபட்டு வந்தார். நாயனார் ஒருநாள் அவரைப் பார்த்து என்ன வேண்டும் என்று கேட்டார்.

அவர், "சுவாமி! நான் இந்த உலகத்திலே சகல பாக்கியங்களும் பெற்று நல்வாழ்வு வாழ வேண்டும். அதுதான் என்னுடைய பெரிய விருப்பம். அதற்குரிய உபாயத்தை அநுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

திருவள்ளுவர், "நீ சுயநலமுள்ளவனாயிரு. உனக்குச் சகல பாக்கியங்களும் சித்திக்கும்" என்றார். அந்த மனிதர் அதைக் கேட்டுக்கொண்டே வீட்டுக்குப் போனார்; சிந்திக்கத் தொடங்கினார். அவருக்கு அந்த உபதேசம் விளங்கவில்லை. அதில் அவருக்குத் திருப்தி பிறக்கவில்லை. பத்திரிகைகள் எல்லாம் "சுயநலம் கூடவே கூடாது" என்று கூச்சலிடுகின்றன. "இவன் ஒரு சுயநலக்காரன் என்றால் மகாகெட்டவன்" என்று சனங்கள் பேசுகின்றார்கள். இப்படியிருக்க நாயனாரோ "நீ சுயநலமுள்ளவனாயிரு" என்கின்றாரே என்று மன வேதனைப் பட்டுக்கொண்டு மறுபடியும் அந்த மனிதர் நாயனாரை அணுகி, "சுவாமீ, சுயநலத்தை உலகம் பழிக்கின்றது. உங்கள் நூலை வானளாவப் புகழ்கின்றது. தேவரீர் தங்கள் நூலில் எங்கேயாவது சுயநலத்தைப்பற்றிச் சொல்லியிருக்கின்றீர்களா? அதனை விளங்க வைக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார்.

"தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்"

ஒருவன் "தன்னைத்தான் காதலன்" ஆயிருக்க வேண்டும். தன்னிலே தான் பற்றுள்ளவனாயிருக்க வேண்டும். அஃதாவது சுயநலமுள்ளவனாயிருக்க வேண்டும். சுயநலமாவது தன் கருமத்திற் கண்ணுங் கருத்துமாயிருத்தல். "தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்". எவன் தன் கருமத்திற் கண்ணுங் கருத்துமாயிருக்கின்றானோ, அவனே தவஞ் செய்பவன்; தவத்தி. "மற்றல்லார் அவஞ் செய்வார் ஆசையுட்பட்டு". தன் கருமஞ் செய்யாது, சுயநலமின்றிப் பிற கருமஞ் செய்கிறவர்கள் எல்லாம் அவம் செய்கின்றவர்கள்; மகா ஆசைக்காரர்கள்.

"தன்னைத்தான் காதலன்" சுயநலக்காரன். அவன் உண்மையிலே சுயநலக்காரன் ஆனால், "எனைத்தொன்றுந் துன்னற்க தீவினைப்பால்" எத்துணைச் சிறியதொரு தீமையையும் இரண்டாமாளுக்குச் செய்யமாட்டான். இரண்டாம் ஆளுக்கு ஒருவன் தீமை செய்தால் அது தனக்கு நட்டம். இரண்டாம் ஆளுக்கு ஒருவன் நன்மை செய்வது தனது நயத்துக்காகவே. அயல் வீட்டுப் பிள்ளைக்கு ஒருபிடி அன்னங் கொடுத்தால், தன் பிள்ளைக்கு ஒருபிடி தசை வளருமென்று காரியந் தெரிந்த நல்ல தாய் சொல்லுவாள்.

*இறைவனிடம் பயம் ஏற்பட்டாலன்றி நல்லொழுக்கம் உண்டாகாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உபாத்தியாயர் மேற் பரீட்சைக்குப் படிக்கிறார்; தன் அறிவை மேலும் விருத்திசெய்ய முயலுகின்றார்; அது மிக நல்லதே. தங்கருமம் செய்கிறவர்கள் தவஞ் செய்கிறவர்கள். ஆனால் அந்த உபாத்தியாயர் தம் கருமமாகிய பரீட்சைப் படிப்பைத் தாம் படிப்பிக்கவேண்டிய வகுப்புப் பிள்ளைகள் முன்னிலையில் வைத்துக்கொள்ளுவாரானால் "பிள்ளைகளே, பாடத்தை மௌனமாக வாசியுங்கள்" என்று சொல்லிவிட்டுத் தமது பாடத்தைப் படிப்பாரானால், அவர் தங்கருமஞ் செய்தவர் ஆகார்; சுயநலக்காரர் ஆகார். அவருடைய பரீட்சைப் படிப்பு வகுப்புப் பிள்ளைகளுக்கு யமனாய் வந்திருக்கிறது. அவர்களுக்குப் பெருந் தீமை விளைவிக்கின்றது. அந்தத் தீமை பிறகு இவருக்கு யமனாய் இவருடைய பரீட்சையில் அணுக்குண்டு போடும்; அது தப்பாது. ஆகவே, ஒருவன் சுயநலக்காரன் என்றால் பிறருக்குத் தீமை விளைவிக்காதவன் என்று கருத்து. பரீட்சைக்குப் படிக்கிற சுயநலக்கார உபாத்தியாயர், "சுயநலம்" என்பதன் கருத்தை தெளிவாக உணர்ந்திருந்தால், வகுப்புப் பிள்ளைகளின் படிப்புக்கு எள்ளளவும் பங்கமில்லாமலே தம் பரீட்சைப் படிப்பை வைத்துக்கொள்வார். பரீட்சையில் அவர் சித்தியெய்தாது போகலாம்; அற்ப சம்பளத்தோடு சங்கடப்படலாம். அவருடைய சுயநலம் அஃதாவது பிறருக்கு நட்டம் விளைக்காத நன்மைப்பாடு,

"மூவேழ் சுற்றமும் முரணுறு நரகிடை
ஆழாமே ஆளும்"

அந்த நன்மைப்பாடு முன்னோர்களான தந்தை வழியில் உள்ள ஏழு தலைமுறை யாருக்கும், தாய் வழியில் உள்ள ஏழு தலைமுறையாருக்கும், இனித் தன்வழியில் வரும் ஏழு தலைமுறையாருக்கும் சென்று செறியும். இது மணிவாசகப் பெருமானின் அருளாணை. இது சத்தியம், சத்தியம், முக்காலும் சத்தியம்.

துரியோதனன் சகாதேவனிடம் போய்ப் பாரத யுத்தத்திலே களப்பலியூட்டுதற்கு நல்ல முகூர்த்தம் வைத்துத் தரும்படி கேட்டான். அந்த முகூர்த்தத்திலேதான் வெற்றி தோல்வி தங்கியிருக்கிறது. துரியோதனன் தனக்கு வெற்றி வருவதற்கேற்ற முகூர்த்தத்தைத் தானே கேட்பான்.

உடனே சகாதேவன் பஞ்சாங்கங்களைப் பார்த்து, "அமாவாசித்தினத்திலன்றைக்குக் களப்பலியூட்டினால் உனக்கு வெற்றி நிச்சயம்" என்று சொல்லிவிட்டான். இது ஒரு நடுராத்திரியில் நடந்த இரகசிய சம்பவம். மூன்றாம் ஆளுக்குத் தெரியாத சம்பவம்.

பாரதத்தில் ஒரு வெண்ணெய்க் கள்வன் - பச்சைக் கள்வன் இருக்கிறான். அவனுக்குத் தெரியாமல் எதுவும் நடத்தமுடியாது. அவன் உள்ளங் கவர் கள்வன்; பெரிய கண்ணன். அவன் அந்த இரகசியத்தை வெளிப்படுத்தற்கு ஒருநாள் ஒரு பாசாங்கு செய்தான். காரணமில்லாமற் கோபங் காட்டிக்கொண்டு தான் துவாரகைக்குப் போவன் என்று புறப்பட்டான். "அடுத்த வாரம் யுத்தம். இடையில் இப்படிக் கண்ணன் ஏன் செய்கிறான்" என்று எல்லோருந் திகைத்தார்கள். தருமர், கண்ணனுக்கு யாராவது தவறு செய்ததுண்டாவென்று ஒவ்வொரு வரையும் விசாரித்தார். எல்லோரும் விழி விழித்தார்கள். சகாதேவனைத் தருமர் வினவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் சாத்திரம் சொன்னதற்காகத்தான் கண்ணன் பாசாங்கு பண்ணுகிறானென்றான். உடனே தருமருக்கு ஆனந்தபாஷ்பங் கண்ணிற் பெருகியது. சகாதேவனைக் கட்டித் தழுவினார். "நீதான் என் உடன்பிறப்பு, நீதான், "தன்னைத்தான் காதலன்" என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியம். நீ பிறனுக்கு, அதுவும் பகைவனுக்குத் தீமை விளைவிக்கத்தக்க சந்தர்ப்பத்தை, அங்ஙனஞ் செய்யாது, எமது குலத்தைக் காத்தாய்; இனி பாரத யுத்தத்தில் வெற்றி நமதே" என்றார். கண்ணன் அந்த வேடிக்கையைப் பார்த்துச் சிரித்தான். அப்பால் கண்ணனுக்கு அமாவாசியை அரக்கி வைக்கிற வேலை நேர்ந்தது. அதை வெகு வேடிக்கையாகவே செய்துவைத்தான். துரியோதனன் மூகூர்த்தந் தவறியதால் தோல்வியடைந்தான். சகாதேவனின் சுயநலம் வென்றது.

ஆபிரகாம் லிங்கன் ஒரு கடையிற் கூலிக்கு வியாபாரஞ் செய்கின்றான். நடு இராத்திரி, கோயிற்றிருவிழாவிலிருந்து பல கிராமத்துச் சனங்களும் தத்தங் கிராமத்துக்குப் போகின்றார்கள். ஒரு குடுகுடு கிழவியுந் திருவிழா பார்த்துவிட்டுத் தன் கிராமத்துக்குப் போகின்றாள். ஆபிரகாம் லிங்கன் கடையிற் கதவு அடைத்துவிட்டான். உள்ளே விளக்கு எரிகிறது. நித்திரை தூங்கிக்கொண்டிருக்கிறான். கிழவி கதவைத் தட்டித் தேயிலை கேட்கின்றாள். ஒரு துவார வழியாற் காசை நீட்டுகிறாள். நித்திரைத் தூக்கத்தோடு காசை வாங்கி வைத்துவிட்டுத் தேயிலை நிறுத்துக் கொடுக்கிறான் ஆபிரகாம் லிங்கன். பிறகு படுத்து நித்திரையாகிறான். விடிந்தது; எழுந்து கடை ஒழுங்கு செய்கிறான். கிழவி கொடுத்த பணம் ஒரு இடத்திலிருக்கிறது. இது ஒரு இறாத்தல் தேயிலையின் விலை. ஆனால் தராசுத் தட்டில் அரை இறாத்தற் படி இருக்கிறது. ஆபிரகாம் லிங்கன் திகைத்தான். "ஐயோ பாவம்! கிழவியிடம் ஒரு இறாத்தலுக்குப் பணம் பற்றிக்கொண்டு, அரை இறாத்தல் அல்லவா நித்திரைத் தூக்கத்தில் நிறுத்துக் கொடுத்துவிட்டேன்" என்று ஏங்கினான். உடனே அரை இறாத்தல் தேயிலை நிறுத்தெடுத்தான். வெளியிற் கிளம்பினான். "இராத்திரி தேயிலை வாங்கின கிழவி யார்" என்று கேட்டுக் கேட்டுக் கிராமங் கிராமமாக ஓடினான். கிழவியைக் கண்டுபிடித்துவிட்டான். அமிர்தத்தைக் கண்ட தேவர்களுக்கு வந்த சந்தோசம் அவன் சந்தோசம். கிழவியிடங் கொடுத்து மன்னிப்புக் கேட்டான் ஆபிரகாம் லிங்கன். கிழவி தெய்வத்தை நோக்கிக் கண்ணீர் பொழிந்து, ஆசீர்வதித்தாள். அந்தக் கிழவியின் கண் காணவே "தன்னைத்தான் காதலன்" ஆன ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கப் பிரசாதிபதியானான்.

இதுபோன்ற சம்பவங்கள் மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் அநேகமுண்டு. அவைகள் அத்தியாவசியகம் அறியவேண்டியவைகள்.

திருவள்ளுவநாயனாரிடம் சுயநல உபதேசம் பெற்ற அந்த மனிதர் ஆபிரகாம் லிங்கன் போலவே பிறருக்குத் தீமை வாராமல் வாழ்க்கை நடத்திப் பெரிய அந்தஸ்தை அடைந்தார். அவருக்கு வயசும் அறுபதை அடுத்தது. அவர் ஒருநாள் திருவள்ளுவரிடம் போய் மற்றொரு கேள்வி கேட்டார். "சுவாமீ, நான் பிறருக்குத் தீமை செய்யாமலிருந்து, சகல பாக்கியங்களையும் தங்கள் அருளால் அனுபவிக்கின்றேன். இப்படியே மறுமையிலும் அனுபவிக்கிறதற்கு வழி உண்டா? அநுக்கிரகிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார் அந்த மனிதர்.

*ஒருவன் தன்னைத்தானே காக்கவேண்டுமானால் சினத்தினைக் காக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவர் கட்டை அவிழ்த்து இரண்டு திருக்குறள் வாசித்தார்:-

"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்" -குறள் 338.

ஒன்று.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"-குறள் 226.

மற்றது.

செல்வம் ஓரிடத்திலே தங்காது நடையிலே விடுவம் என்றுதான் சதா சொல்லிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட செல்வத்தை ஒருவன் பெற்றால் அவசரம் அவசரமாக அது புறப்படுமுன்னமே நிலையான காரியங்களைச் செய்து வைத்துவிட வேண்டும். இது முதற் குறளின் கருத்து.

மானங் குலங் கல்வி முதலிய பத்தையும் அழிக்கிற பண்டம் பசி. அப்படிப்பட்ட பசியைப் போக்கி வறியவர்களுடைய எரிகிற வயிற்றுக்குள்ளே தமது சம்பாத்தியத்தைக் கொட்டிவிட்டால், அது யாகாக்கினியிலே அவி சொரிந்ததற்குச் சமமாயிருக்கும். வறியவர்களின் வயிறுதான் நல்ல சேமநிதி வங்கி. அதிலே பொருளைப் போட்டு வைத்தால் அது இம்மை யிலும் மறுமையிலும் வந்து உதவும். ஆற்றிலே போட்டுக் குளத்திலே எடுப்பதுபோல எங்கேயுமெடுக்கலாம். இது மற்றக் குறளின் கருத்து.

அந்த மனிதர் இந்த இரு குறளுபதேசத்தையுங் கேட்டுக்கொண்டு வீட்டுக்குப் போகின்றார். போகிற வழியிலே ஒரு பாகவதர் கதைபண்ணிக் கொண்டிருக்கிறார். அப்பொழுது அங்கே சொன்ன கதை இது: (தொடரும்...

## வாழ்க்கை மகிழவே

ஐந்து வயதுச் சிறுவன் ஒருநாள் தன் அம்மாவிடம் கேட்டான், "அம்மா வாழ்க்கையின் ரகசியம் என்ன?" அம்மா சொன்னாள், "எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பதுதான்".

அன்று அவன் பள்ளிக்குச் சென்றபோது, ஆசிரியை மாணவர்களைப் பார்த்து, "நீங்கள் வளர்ந்து என்ன ஆகப்போகிறீர்கள்?" என்று கேட்டார்.

ஒரு பையன் டாக்டர் என்றான். இன்னொரு பையன் என்ஜினியர் என்றான். விதம்விதமான பதில்களில் விதம்விதமான விருப்பங்கள் தொனித்தன. ஆனால் அந்தச் சிறுவன் மட்டும், "நான் மகிழ்ச்சியாக இருக்கப் போகிறேன்" என்றான். ஆசிரியை கோபமாக, "உனக்குக் கேள்வி புரியவில்லை" என்றார். சிறுவனோ "டீச்சர் உங்களுக்கு வாழ்க்கை புரியவில்லை" என்றான்.

வாழ்க்கையின் அழகு என்பது நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதில் இல்லை. உங்களால் அடுத்தவர் மகிழ்ச்சி அடைகின்றார்கள் என்பதிலேயே இருக்கிறது. மகிழ்ச்சி இருக்குமிடத்தில் வாழ நினைப்பதைவிட நீங்கள் இருக்குமிடத்தில் மகிழ்ச்சி என்னும் விதையை தூவிக்கொண்டே இருங்கள். உங்கள் வாழ்க்கை நிறைவானதாக இருக்கும்.

*கடவுள் நம்பிக்கையும் தன்னம்பிக்கையும் ஒரு நாணயத்தின் இரு புறங்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த வைகாசிப் பெருவிழா - 2024

– தொகுப்பு: திரு ஆ. சிவநாதன் அவர்கள் –

முருகப் பெருமான் அவதரித்த தினமாக வைகாசி விசாக தினம் அமைகிறது. இவ்வகையில் செல்வச்சந்நிதியில் அமர்ந்து அருள் பாலிக்கும் வேற்பெருமானை வழிபடும் மரபு நீண்டகாலமாகவே தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகிறது. சந்நிதியான் ஆச்சிரமத்திலும் வருடா வருடம்தோறும் வைகாசிப் பெருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. 26.05.2024 ஞாயிற்றுக்கிழமை அன்று விழாவிற்கான ஏற்பாடுகள் முன்னரே திட்டமிடப்பட்டிருந்தது. அன்று காலையே மங்கல தோரணங்கள், நந்திக் கொடிகள் என்பவற்றால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. வழமைபோல் காலையில் சந்நிதி வேற்பெருமானுக்கு அபிஷேகங்கள் ஆராதனைகள் நிறைவு பெற்றன.

அன்று காலை 09 மணிக்கே திட்டமிட்டபடி அதிபர் திரு செ. பரமேஸ்வரன் அவர்கள் ஓதிய பஞ்சபுராணத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமானது. அதனைத் தொடர்ந்து ஏழாலை ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனம் நிகழ்வை மங்களகரமாக வரவேற்று ஆரம்பித்தது. மாணவிகளின் அபிநயம் மிகவும் பாராட்டுக்குரியதாக அமைந்தது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதனைத் தொடர்ந்து ஓய்வுநிலை அதிபர் திரு ஆ. சிவநாதன் அவர்கள் தமது தலைமையுரையில் சந்நிதி வேற்பெருமானின் அருட்சிறப்பையும், அவனால் வழிப்படுத்தப்படும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் பணிகளையும் எடுத்துக் கூறி வைகாசி விசாகப் பெருவிழாவின் சிறப்பு, இந்நாளில் விரதமனுஷ்டிப்போர் பெறும் பேறுகளையும் எடுத்துக் கூறினார்கள்.

அறநெறிப் பாடசாலைகளின் கலைநிகழ்வுகள் வரிசையில் கரவெட்டி கிழக்கு இலம்போதரன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பக்திப்பாடல், கவிதை, காவடி, சிவதாண்டவம் நிகழ்வுகள் சிறப்பாக அரங்கேறியது. மாணவர்களின் வெளிப்படுத்தல்கள் சிறப்பாகவும், பாராட்டுக்குரியதாகவும் அமைந்திருந்தது. இம் மாணவர்களின் நிகழ்வுகளை ஆசிரியைகளான சசிகலா சூரியகுமாரன், அகிலா சூரியகுமாரன் ஆகியோர் நெறிப்படுத்தி இருந்தனர். இவர்களின் ஆற்றுகை பாராட்டுக்குரியதாகும்.

அதனைத் தொடர்ந்து நெல்லை முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களால் முருகன் நடனம் பல மாணவர்களை ஒருங்கிணைத்து அலங்கார மயில்வேடம் கொண்டு அரங்கேறியமை எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டது. இந்நிகழ்வை நெறிப்படுத்திய



ஆசிரியை திருமதி மதுசூதனன் சீதாலக்சுமி அவர்களும் பாராட்டுக்குரியதாகும். அதனைத் தொடர்ந்து உடுப்பிட்டி சைவத் திருத்தொண்டர் அறநெறிப் பாடசாலை மாணவியின் நடன

*உறுதியைப்போல உழைப்பும் இருந்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிகழ்வும் சிறப்பாக அரங்கேறியது. இவ்வகையில் நிகழ்வில் பங்குகொண்ட அனைத்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி அவர்களால் கற்றல் உபகரணங் கள் வழங்கப்பட்டு அவர்களது செயற்பாடு பாராட்டப்பட்டது.

அதன் பின்னர் "நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மனித வாழ்விற்கு வாழ்வளிக்கிறது, வாழ்வளிக்கவில்லை" என்ற தலைப்பில் பட்டிமன்றம் அரங்கேறியது. இவ்வகையில் வாழ்வளிக் கிறது என்பதற்கு சார்பாக திரு பரா. ரதீஸ் அவர்களின் தலைமையில் திரு த. கருணாகரன், செல்வி தயாளினி குமாரசாமி ஆகியோர் கருத்துக்களை வாரி வழங்கினர். அந்நிலையில் வாழ்வளிக்கவில்லை என்ற கருத்தை திரு நா. தமிழிந்திரன் அவர்கள் தலைமையில் திரு பரா. ரமேஷ், செல்வி கதிர்தர்ஷினி பரமேஸ்வரன் ஆகியோர்



சலிக்காது கருத்துக்களை வாரி வழங்கினர். இந்நிகழ்விற்கு சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் அவர்கள் நடுவராக பொறுப்பேற்று சிறப்பாக நெறிப்படுத்தி நல்லதொரு



நீதிபதியாக நடுநிலை பேணி நிறைவு செய்தமை எல்லோராலும் பாராட்டப்பட்டது.

இந்நிலையில் வருகை தந்த நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி களால் ஆசியுரை வழங்கப்பட்டமை நிகழ்வை சிறப்பித்தது.

அதன் பின்னர் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி செ. மோகனதாஸ் சுவாமி அவர்களால் மலையக கல்விப் பணியை பாராட்டும் வகையில் அதற்கு காரணமாக அமைந்த திரு ச. சவுந்தரராஜன், திரு க. இராஜேந்திரன், திருமதி விஜயகுமாரி பிரகாஷ் ஆகியோரது பணியைப் பாராட்டி பொன்னாடை

*முடியாது என்பது சோம்பேறிகளின் வார்த்தை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் மலையக கல்விப் பணியில் ஈடுபட்ட திரு இரா. செல்வவடிவேல், திரு த. கருணாகரன், திரு ஆ. சிவநாதன், திரு ச. வாகீசன், திரு ந. கணேசமூர்த்தி, திரு ப. தருமகுமாரன் ஆகியோருக்கும் பொன்னாடை போர்த்து நினைவுச் சின்னம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.





அதனைத் தொடர்ந்து யாழ் இராமநாதன் அரங்காற்றுகை பீடம் சிதம்பரம் சிவமைந்தன் அவர்களது இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. அந் நிகழ்வை அணிசெய் கலைஞர்களாக ஹார்மோனியம் இசைக் கலைமணி க. செல்வச்சந்திரன், மிருதங்கம் நுண்கலைமாணி சி. துரைராசா, தபேலா கலாவித்தகர் வே. பிரபாகரசர்மா ஆகியோரும் சிறப்புச் செய்து அனைவரையும் மகிழ வைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் மேடையில் தோன்றிய ஆச்சிரம சுவாமிகள் எல்லோரையும் பிரம்மிக்கத்தக்க வகையில் முருகன் பாடல்களை வழங்கியமை நிகழ்விற்கு மெருகூட்டும் செயற்பாடாக அமைந்தது.



பின்னர் திரு இராஜேந்திரன் அவர்கள் சுவாமி அவர்களின் மலையகப் பணியைப் பாராட்டி சுவாமியையும் ஆச்சிரம பணியையும் சிறக்க முருகனை வேண்டிக் கொண்டார்.



பின்னர் சைவ கலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர் திரு க. கைலைநாதன் அவர்கள் வழங்கிய நன்றியுரையுடன் விழா சிறப்பாக நிறைவேறியது.

தீய பழக்கங்களைப் பழகாதே. அது உன் வாழ்க்கையை தீயாக எரித்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி விசாகன் தாலாட்டு

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன் அவர்கள் –

ஆலிலை வேலழகனோ
ஆனந்தமா முருகனோ
தேறு மறை கொஞ்சும்
தெய்வ சிகாமணியோ.

ஒரு திரு முருகனோ
உலகம் உய்ய உதித்தவனோ
ஓங்கார வடிவான
மனோன்மணி மைந்தனோ.

நெற்றிக் கண்ணிலுதித்த
நிமலன் பாலகனோ
சரவணப் பொய்கையில்
தவழ்ந்து வந்த செல்வமோ.

கார்த்திகை மாதரின்
பாலமுதம் உண்டவனோ
பார்வதி அரவணைக்க
ஆறுமுக னானவனோ.

காலிற் சதங்கை கொஞ்சக்
கலின் கலினெனக் கிண்கிணியாட
அகில லோக நாயகியின்
மனம் களிக்க வந்தானோ.

கௌரி தந்த கண்மணியோ
கண்நிறைந்த பொன்மணியோ
என்னுடைய இன்னமுதோ
தெவிட்டாத பேரின்பமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிருகை வள்ளலோ
பரமன் தந்த ஞானப்பழமோ
கொஞ்சி உமை முத்தமிடும் பூவோ
பரந்தாமன் மகிழ் மருகனோ.

ஆனைமுகன் தம்பியோ
அடியேனின் இன்னுயிரோ
ஆநிரை மேய்த்தவன் மெச்சிய
ஆறுமுகப் பூங்கொத்தோ.

அம்பிகை வேல் கொடுத்த
சிங்கார வேலனோ
ஆணவச் சூரன் மயங்கிய
ஈடிணையிலா அழகனோ.

குங்கும வர்ணனோ
குழந்தை வடிவேலனோ
கண்டவர்தம் மனம் மயக்கும்
கண்மணி முருகனோ.

பச்சை மயில் வாகனனோ
பால் வடியும் அழகனோ
சச்சிதானந்தனோ சதாசிவன் மதலையோ.

சந்தத் தமிழ் மாலைப் பிரியனோ
சாகசவள்ளி தலைவனோ
சந்ததம் காக்கும் சரவணனோ
செந்தூரிற் சுந்தரனோ
சந்நிதியின் வேலவனோ
மாவைக் கந்தனோ
நல்லூர்ப் பதித் தேனோ
கதிரைமலை மணிவிளக்கோ.

வைகாசி விசாகனோ
வள்ளி குஞ்சரி மணாளனோ
செஞ்சேவற் கொடி கொண்ட சேவகனோ
சேவடியைத் தருவானோ.

*வேலை செய்யாமல் ஒருவனிடம் பணம் பெறுவது பிச்சையேயாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத வாராந்த நிகழ்வுகள்

**07.06.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "கருடபுராணம் கூறும் தானங்கள்"**

**வழங்குபவர் :- திரு சுவாமிநாதன் தேவமனோகரன்** அவர்கள்

[இளை. பிரதிக் கல்விப் பணிப்பாளர்]

---

**14.06.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**"இன்னிசை"**

**(பக்கவாத்திய சகிதம்)**

---

**21.06.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

**சொற்பொழிவு :- "மகாபாரதம்" (தொடர்)**

**வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல்** அவர்கள்

[ஆசிரியர்]

---

**28.07.2024 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

# ஞானச்சுடர் ஆனி மாத வெளியீடு

**வெளியீட்டுரை :- திரு கு. தியாகராஜசர்மா (நீர்வைமணி)** அவர்கள்

**மதிப்பீட்டுரை :- திரு க. கைலைநாதன்** அவர்கள்

[சைவப்புலவர், ஆசிரியர்]

**318 ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org